கோகுலம்

GOKULAM

ஜனவரி '89 ரூ. 3/





இந்தக் கூப்பனைக் கத்தரித்து சந்தாத் தொகையுடன் அனுப்புங்கள்!

பெயர்: ______________________ வயது: ______________

முகவரி: ______________________________________

____

சந்தா அனுப்பிய விபரம்: மணிஆர்டர்/டிராப்ட் ______________________

(PRAKASH PUBLISHERS, Sivakasi.என்ற பெயருக்கு டிராப்ட் எடுக்க வேண்டும்)

பிரகாஷ் பப்ளிஷர்ஸ் த. பெ. எண்: 374, சிவகாசி-626 123.



உயிர்களிடத்தில் அன்புவேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்.

கோகுலம்

1989 ஜனவரி மாத இதழ்
மலர் : 6 இதழ் : 12
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா



புகைப்படம்: புத்தனேரி சுப்பிரமணியம்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

புத்தாண்டு பிறக்கவிருக்கிறது. பொங்கல் வரவிருக்கிறது. இரண்டுக்கும் சேர்த்து அச்சாரமாக இப்போதே எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நேருஜி பிறந்த நூற்றாண்டு விழாவைக் குழந்தைகள் தினமாகப் பல பள்ளிகளிலும், சங்கங்களிலும் கொண்டாடினார்கள். அப்போது நடந்த குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகளில் பலவற்றைப் பார்க்கும்படியான வாய்ப்பு ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தபோது "ஆஹா! எவ்வளவு அருமையாக ஆடுகிறார்கள்! பாடுகிறார்கள்! நடிக்கிறார்கள்! இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு மற்றக் குழந்தைகள் எவ்வளவு குதூகலமடைகிறார்கள்!" என்பதை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

நம் குழந்தைகளின் கலைத் திறமை வளர வேண்டாமா? குழந்தைகள் இவை போன்ற நிகழ்ச்சிகளை அடிக்கடி பார்த்து ஆனந்தம் அடைய வேண்டாமா?

தமிழிலே குழந்தைகளுக்கான திரைப்படங்களை இப்போது எங்காவது பார்க்க முடிகிறதா? குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகளை நடத்தப் பெரிய நகரங்களிலாவது சிறுவர் அரங்கங்கள் (Children's Theatres) உண்டா?

குழந்தைகளுக்கு ஓரளவேனும் மகிழ்ச்சி ஊட்டக் கூடிய வகையில் சில முயற்சிகளைச் செய்யலாம்.

சென்னை நகரில் ஏராளமான பள்ளிகள் உள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் பல பள்ளிகள் இருக்கின்றன. ஒரு பகுதியிலுள்ள ஏழெட்டுப் பள்ளிகள் ஒன்று சேர்ந்து, மையமான திறந்தவெளி ஒன்றிலே மேடை அமைக்கலாம். அம்மேடையில் அப்பள்ளிகள் ஒவ்வொன்றும் மாதம் ஒரு கலைநிகழ்ச்சியை நடத்தலாம். தங்கள் தங்கள் பள்ளி விழாக்களிலே நிகழ்ச்சி நடத்துவதோடு, இப்படிப் பொது அரங்குகளிலும் மாதம் ஒரு நிகழ்ச்சி நடத்தினால், குழந்தைகளின் கலைத் திறமை ஓங்கும்; பார்க்கின்ற ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கும் பயனுள்ள, மகிழ்ச்சிதரும் ஒரு பொழுது போக்காக அமையும்.


சென்னையில் உள்ள பலபகுதிகளில் மட்டுமன்றி, மற்றநகரங்களிலும் இதுபோல் செய்யலாம். கிராமங்களில் உள்ள பள்ளிகள் கூட அருகருகே உள்ள பள்ளிகளுடன் கூட்டுச் சேர்ந்து இவ்வாறு கலைநிகழ்ச்சிகளை நடத்தலாம்.

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்




ரா. பொன்ராசன்




ஆர். பி. சாரதி


பிருந்தாவனக் கவிஞர்கள்



ஜெகதீஷ் குமார்



எம். வெங்கடேசமூர்த்தி



ம. மணிவண்ண பாண்டியன்



500க்கு மேல் இந்திராக்கள்!

ரஷ்யாவில் இந்திரா என்ற பெயரில் 500—க்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றனர்.

கஜாக்ஸ்தான் தலைநகரான அல்மா அதாவுக்கு 1950 — ஆம் ஆண்டில் ஜவாஹரும், இந்திராவும் பயணம் செய்தபோதுதான்... அந்தப் பெயர் அங்கு முதன் முதலில் சூட்டப்பட்டது.

இரண்டு வயதான இந்திராவிலிருந்து 33 வயதான இந்திரா வரை... பல இந்திராக்கள் சமீபத்தில் ரஷ்ய — இந்திய நட்புறவுக் கழகத்தின் சார்பாக நடந்த ஒரு விருந்தில் கலந்து கொண்டனராம்.

நன்றி: Soviet Union Nov. 1988.

தகவல்: ராஜி ராதா.






பொங்கல் கும்மாளம்!

—தஞ்சை மாலா





மின்மினிக் கதைகள்



பசுமாடும் பன்றியும்

ஓர் ஊரில் செல்வன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் குழந்தைகள் இல்லை. இருந்தாலும் அவன் பெரிய கருமியாக இருந்தான். யாருக்கும் எதுவும் தர அவனுக்கு மனம் வருவதில்லை. ஊர் மக்களெல்லாம் அவனைக் குறை கூறி வந்தார்கள்.

ஒருநாள் அந்தக் கருமி துறவி ஒருவரிடம் சென்றான். ''ஐயா! நான் இறந்த பிறகு என் சொத்துக்கள் அனைத்தும் தர்மத்திற்குத்தான் செல்லப் போகின்றன. ஆனால் ஊர் மக்கள் என்னைப் பாவி என்று திட்டுகின்றார்கள். ஏன் என்று தெரியவில்லையே?'' என்று சொன்னான்.

அதற்குத் துறவி, ''அப்படியா? நான் ஒரு சமயம் பசுமாட்டிற்கும் பன்றிக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலை உனக்குச் சொல்கிறேன். உனக்கே உண்மை விளங்கும்'' என்று கூறினார்.

கருமி, ''சொல்லுங்கள்'' என்றான்.

''ஒரு சமயம் பன்றி ஒன்று மாட்டைப் பார்த்து வருத்தத்துடன், மக்கள் எல்லோரும் உன்னைப் பற்றியும் உன் இனிய இயல்புகளைப் பற்றியும் புகழ்ந்து பேசுகிறார்கள். அதுவும் உண்மைதான். நீ அவர்களுக்காகப் பால் தருகிறாய். ஆனால் நானோ உன்னை விட அதிகம் தருகிறேன், என் இறைச்சியை மக்கள் உண்ணப் போகிறார்கள். என் தொடைக் கறியைச் சுவைக்கப் போகிறார்கள். என் பாதங்களைக்கூட மென்று தின்னப் போகிறார்கள். என் உடலின் எந்தப் பகுதியையும் அவர்கள் விடப் போவதில்லை. நான் என்னையே முழுமையாகத் தரப் போகிறேன். இருந்தாலும் மக்கள் என்னைப்

பாராட்டாமல இகழ்கிறார்களே! இதன் காரணம் என்ன?'' என்று கேட்டது.

இதைக் கேட்ட மாடு சிறிது நேரம் சிந்தித்தது. பிறகு பன்றியைப் பார்த்து, ''நான் உயிருடன் இருக்கும் போதே மக்களுக்குப் பயன்படுகிறேன். அதனால்தான் எல்லோரும் என்னைப் புகழ்கிறார்கள்'' என்று பதில் சொன்னது'' என்று முடித்தார் துறவி.

கருமி உண்மையை உணர்ந்தான். தான் உயிருடன் இருக்கும்போதே மக்களுக்கு வாரி வழங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்று செயல் பட்டான்.

ஆடுகளும் நாய்களும்



முன்னொரு காலத்தில் நாய்கள் எல்லாம் ஒன்று கூடிக் கூட்டம் நடத்தின. ஒரு கிழட்டு நாய் சொன்னது, ''நாம் ஒவ்வொரு முறைக்கும் பல குட்டிகளைப் பெற்றெடுக்கிறோம். ஆனால் ஆடுகளோ ஒரு முறைக்கு ஒரு குட்டி போடுகின்றன. ஆனால் நம்மினமோ நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. ஆடுகளின் இனமோ பெருகிக் கொண்டே செல்கிறது. இது இயற்கை விதிக்கு மாறானது. நம்மினம் அழிவதற்குக் காரணம் என்ன?' என்று கேட்டது.

அதற்கு இன்னொரு நாய், ''இது கடவுளுடைய சூழ்ச்சிதான். நம்மினத்தின் மீது கடவுள் ஏனோ கோபம் கொண்டுள்ளார். அதனால்தான் நாம் அழிந்து கொண்டு வருகிறோம். நாம் அனைவரும் கடவுளிடம் சென்று எங்கள் இனத்தைக் காரணமின்றி எதற்காக அழிக்கின்றீர்கள். இனியாவது காப்பாற்றுங்கள் என்று வேண்டுவோம்'' என்று சொன்னது.

எல்லா நாய்களும் இதற்கு உடன்பட்டுக் கடவுளிடம் சென்றன. அவரைப் பார்த்து, ''எல்லோரிடமும் ஒரே அளவாக அன்பு பாராட்ட வேண்டிய தாங்கள் ஆடுகளிடம் அதிக அன்பும் எங்களிடம் வெறுப்பும் காட்டி வருகின்றீர்கள். இது ஏன்?'' என்று கேட்டன.

நாய்கள் எதற்காக வந்திருக்கின்றன என்பதை உணர்ந்த கடவுள், ''நான் எல்லோரையும் ஒன்றாகத்தான் நடத்துகின்றேன். என்னிடம் ஏற்றத் தாழ்வு 'இல்லை. உங்களிடம் ஒற்றுமை இல்லாததால் நாளுக்கு நாள் எண்ணிக்கையில் குறைந்து கொண்டே வருகின்றீர்கள், ஆடுகளிடம் ஒற்றுமை இருப்பதால் அவை பெருகிக் கொண்டே செல்கின்றன'' என்றார்.

இதைக் கேட்ட நாய்கள், ''எங்களிடம் ஒற்றுமை இல்லை என்றா சொல்கிறீர்கள், நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம்'' என்றன.

கடவுள் அவைகளுக்கு உண்மையை உணர்த்த விரும்பினார். பத்து ஆடுகளை ஓர் அறையிலும் பத்து நாய்களை மற்றோர் அறையிலும் அடைத்து

வைத்தார். மறுநாள், ஆடுகள் இருந்த அறையைத் திறந்தார். அங்கு ஒற்றுமையாக இருந்த ஆடுகள் ஒன்றன்பின் ஒன்றாக வெளியே வந்தன. பிறகு நாய்கள் இருந்த அறையைத் திறந்தார். உள்ளேயிருந்த நாய்கள் ஒன்றோடொன்று போரிட்டதால் குற்றுயிரும் குலையுயிருமாய் முனகிக் கொண்டு கிடந்தன. அவற்றால் வெளியே வரக்கூட முடியவில்லை.

நடந்ததை எல்லாம் பார்த்த நாய்கள் தங்களிடம் ஒற்றுமை இல்லையே என்று தலை கவிழ்ந்தபடி வெளியேறின.

மாணவனின் மரியாதை



ஓர் ஊரில் ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவரிடம் எண்ணற்ற மாணவர்கள் படித்து வந்தனர்.

ஆனால் அவரோ ஒரே ஒரு மாணவனை மிகச் சிறந்த மாணவன் என்று கருதினார். வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் மற்ற மாணவர்களிடம் அவனைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருப்பார். ஒரு சமயம், "நீங்களும் இவனைப் போல் பணிவாக நடந்து கொள்ள வேண்டும்" என்பார். இன்னொரு சமயம், "இவன் என்ன பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்கிறான் பார்த்தீர்களா?" என்பார்.

இதனால் மற்ற மாணவர்கள் இவன் மீது வெறுப்புக் கொண்டனர். எப்படியேனும் அவனிடம் குறை கண்டுபிடித்து அதை நம் ஆசிரியரைக் கொண்டே சொல்ல வைக்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

ஆகவே அவன் செயல் ஒவ்வொன்றையும் உற்றுக் கவனித்து வந்தனர். நாள்தோறும் அவன், ஆசிரியர் படுத்துறங்க வேண்டிய மெத்தையை விரித்துப் போட்ட பிறகு, தானே அதில் படுத்துப் புரண்ட பின்னர்தான் ஆசிரியரை உறங்க அழைக்கின்றான் என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்தது.

நேராக ஆசிரியரிடம் சென்ற அவர்கள், "உங்கள் அன்பு மாணவனின் செயலைப் பார்த்தீர்களா? நாள்தோறும் நீங்கள் உறங்குகின்ற மெத்தையில் முதலில் அவன் படுத்துப் புரண்ட பின்னரே தங்களை அழைக்கிறான். இவனைப் போய் நீங்கள் சிறந்த மாணவன் என்று புகழ்கிறீர்கள். உங்களுக்கு ஐயமிருந்தால் அவனையே அழைத்துக் கேளுங்கள்" என்றார்.

அந்த மாணவனை அழைத்த ஆசிரியர் "இவர்கள் சொல்வது உண்மையா?" என்று கேட்டார்.

"ஆம்" என்றான் அந்த மாணவன்.


"எதற்காக அப்படிச் செய்கிறாய்?" என்றார் ஆசிரியர்.

அதற்கு அந்த மாணவன், "ஐயா! தாங்கள் படுக்கும் மெத்தையை நான் நாள்தோறும் நன்றாகத் தட்டி விட்டுத்தான் போடுகிறேன். இருந்தாலும்

எனக்குத் தெரியாமல் சிறு மணல் அதில் இருந்தாலும் அது தங்கள் திரு மேனியை உறுத்துமே! அப்படி ஏதேனும் இருந்தால் அதையும் தட்டி விடலாமே என்பதற்காகத்தான் படுத்துப் புரண்டு பார்க்கிறேன்'' என்று விளக்கம் தந்தான்.

குறை கூறிய மாணவர்கள் எல்லோரும் தலை கவிழ்நததார்கள்.

இரு தவளைகள்



தயிர் தோய்க்கப்பட்ட பாலில் இரண்டு தவளைகள் தவறி விழுந்து விட்டன. பாத்திரத்தை விட்டு வெளியே வருவதற்கு அவற்றுக்கு வழியே தெரியவில்லை.

முதல் தவளை ''இதிலிருந்து நான் எப்படித் தப்பிக்கப் போகிறேன, செத்தேன்'' என்று புலம்பியது. அதன் கால்கள் சக்தி இழந்தன. சற்று நேரத்திற்கெல்லாம் அது பாலில் முழுகிச் செத்தது.

இரண்டாவது தவளையோ, ''இதிலிருந்து நான் எப்படியும் தப்புவேன். கடைசி வரை என் முயற்சியைக் கைவிட மாட்டேன்'' என்று நினைத்தது. அதனால் அத்தவளை சோர்வில்லாமல் கால்களால் உதைத்துக் கொண்டே இருந்தது.

இப்படியே சிறிது நேரம் செய்து கொண்டே இருந்ததால், பால் நன்றாகக் கடையப்பட்ட நிலையை அடைந்தது. வெண்ணெய் திரண்டு மேலே மிதக்கத் தொடங்கிற்று. சற்று நேரத்தில் அந்தத் தவளை மிதந்த வெண்ணெயின் மீதேறி நலமாக அமர்ந்தது. பிறகு ஒரே தாவலில் பாத்திரத்தை விட்டு வெளியே குதித்துத் தப்பித்தது.


— பேராசிரியர் எ. சோதி தொகுத்த 'சின்னச் சின்ன நன்னெறிக் கதைகள்' என்ற புத்தகத்திலிருந்து. வெளியிட்டோர்: நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி — 1.


<u>போட முடியாத மை?</u>

''பேனாவிலே எந்த மையைப் போட முடியாது தெரியுமா?''

''எருமையை!''

— கடலூர் கன்னியப்பன்.





ஜேம்ஸ் வாட்

தோற்றம் : 19.1.1736 மறைவு : 25.8.1819



என் குழந்தைப் பருவம்

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை


காந்தியக் கவிஞர் — விடுதலைக் கவிஞர் — தேசியக் கவிஞர் என்று நாட்டு மக்களால் பாராட்டப்பட்டவர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை. குழந்தைப் பருவத்திலிருந்தே ஓவியராகவும், பாடகராகவும் விளங்கியவர்; 1930—ஆம் ஆண்டில் உப்புசத்தியாக்கிரஹத்தின் போது அவர் பாடிய 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்னும் பாடல் நாட்டு மக்களிடையே தேசிய உணர்வைக் கொழுந்து விட்டு எரியச் செய்தது. விடுதலைப் போராட்டத்தில் ஓராண்டு சிறைவாசத் தண்டனை பெற்றார்; தம் முன்னோர் தேடி வைத்த சொத்துக்களை இழந்தார். இவர் இயற்றிய கவிதைத் தொகுப்புகள், சிறுகாப்பியங்கள், புதினங்கள், நாடகங்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், இலக்கியத் திறனாய்வுகள், வாழ்க்கை வரலாறுகள், சுயசரிதம், விளக்க உரை, இசை நூல்கள் ஆகியவை 50—க்கு மேல் வெளியிடப்பட்டுள்ளன.

நாமக்கல் கவிஞரின் நாட்டுப் பணியையும் இலக்கியத் தொண்டையும் பாராட்டி அரசியலாரும் பொது மக்களும் அவருக்குச் சிறப்புகள் செய்து பாராட்டினர். சென்னை மாநிலத்தில் இக் கவிஞரே முதல் தமிழக அரசவைக் கவிஞராகச் சிறப்பிக்கப்பட்டார். இந்திய அரசாங்கம் இவருக்குப் 'பத்ம பூஷன்' என்னும் விருது அளித்தது. 19.10.88 அன்று கவிஞரின் நூற்றாண்டு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இராஜாஜி, மகாகவி பாரதியார், தமிழ்ப் பெரியார் திரு. வி. க., ரசிகமணி டி.கே.சி., கவிமணி, கல்கி ஆகியோரின் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்றவர் நாமக்கல் கவிஞர்.

என் தாயார் அம்மணி அம்மாள்; தந்தை வேங்கடராமப் பிள்ளை. நான் சேலம் மாவட்டத்தில் உள்ள மோகனூரில் பிறந்தேன். என் தந்தை மோகனூரில் தலைமைக் காவலராக இருந்தார். நான் பிறந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின் என் தந்தை நாமக்கல்லுக்கு மாற்றப்பட்டார்.

நான் எங்கள் குடும்பத்தில் ஓர் அதிசயக் குழந்தை. ஏன் தெரியுமா? எனக்கு முன் பிறந்த ஏழு குழந்தைகளும், பெண்கள். 'ஆண் குழந்தை பிறக்காதா?' என்று என் பெற்றோர் கள் வேண்டாத தெய்வமில்லை. இராமேஸ்வரத்திலிருந்து திரும்பிய ஒரு பெரியவரும் அவர் மனைவியும் "அடுத்தகுழந்தைஆண்குழந்தையாகப் பிறக்கும்; அவனுக்கு 'இராமலிங்கம்' என்று பெயர் சூட்டுங்கள்'' என்று நல்லாசி கூறிச் சென்றார்கள். அந்தப் பெரியோர் வாக்கு பலித்து விட்டது. பௌர்ணமி நாளான ஒரு வெள்ளிக் கிழமையன்று நான் பிறந்தேன்.

எல்லாரும் என்னை இராமலிங்கம் என்றே அழைத்தார்கள். ஆனால், என் தாயார் மட்டும்,தான் வேண்டு



தல் செய்த தெய்வமாகிய 'கருப் பண்ண சாமி' என்னும் பெயரால் என்னைச் 'சாமி,சாமி' என்று செல்ல மாக அழைப்பார்.

என் தாயார் தெய்வ பக்தி மிக்க வர். 'தருமம் தலை காக்கும்' என்னும் நம்பிக்கை உடையவர். படிப்பு வாசனை இல்லாதவர். ஆனாலும் பல புராணங்களையும் பெரியோர் கதைகளையும் கேட்டு அறிந்து கேள்வி ஞானம் உடையவர். அவர் என்னைக் கோயில் குளங்களுக்கு அழைத்துச் செல்வார். சுவாமி சன் னதியில், "சாமி, என்னைக் காப் பாற்று, எனக்கு நல்ல புத்தி கொடு" என்னும் இரண்டு வாக்கியங்களை யும் நான் சொல்லாமல் விட மாட் டார். திருவிழா நாள்களில் கை நிறை



யக் காசுகள் கொடுத்து ஆளுக்கு ஒரு காசு கொடுக்கச் சொல்வார். "ஒரு காசு கூட மிச்சப்படுத்தக் கூடாது. அது பாவம்' என்று என்னைப் பழக்குவார்.

என் தாயார் செய்த உபதேசங் களில் மற்றொன்றையும் குறிப்பிட வேண்டும். அவர் அடிக்கடி என்னைப் பார்த்து, "சாமி, நீ என்ன வேணு மானாலும் செய். ஆனால், பொய் மட்டும் பேசாதே; போக்கிரி என்று பெயரெடுக்காதே. இந்த இரண்டைத் தவிர நீ எது செய்தாலும் பரவா யில்லை' என்று கூறுவார். தினந்தோ றும் "பொய் சொல்ல மாட்டேன்; போக்கிரி என்று பெயர் எடுக்க மாட் டேன்" எனக் குறைந்த அளவு மூன்று தடவையாவது சொல்லச் செய்வார். என் அருமைத் தாயார் கற்பித்த இந்த முதல் பாடமே, சத்தியம், 'அகிம்சை என்னும் காந்திய வழியில் என்னை நடக்கச் செய்தது.

பொழுது விடிவதற்கு முன் எழுந் திருத்தல், அதிகாலையில் குளித்தல், தெய்வத்தை வழிபடுதல், கோயில் குளங்களுக்குச் சென்று வருதல், நல்ல வார்த்தைகளையே பேசுதல் முதலியவை என் தாயார் கற்பித்த பழக்கங்களாகும்.

ஒருநாள் புரட்டாசி சனிக் கிழமை. சைவர்களும் அன்று நெற்றியில் திரு நாமம் தீட்டித் திருமாலை வழிபடு வார்கள். சைவக் குடும்பத்தைச் சேர்ந்த நான் அன்று ஒழுங்காகத் திரு நாமம் தீட்டிக் கொண்டேன். பின்னர் பல வீடுகளுக்கும் சென்று உபாதா னம் (அரிசிப் பிச்சை) வாங்கிக் கொண்டு வந்தேன். எங்கள் வீட்டுத் திண்ணையில் தந்தையார் நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். நான் வீட்டு வாசலில் நின்றபடியே, "நாராயணா, கோபாலா! அம்மா! உபாதானம் போடுங்கோ" என்று நாலைந்து முறை குரலை மாற்றிக் கூவினேன். 'இந்தக் குரல் தமது பேச் சுக்கு இடைஞ்சலாக இருந்ததை அறிந்த என் தந்தை, "உள்ளே எல்லா ரும் வேலையா இருக்கிறாங்க! அப் புறம் வாடா, பையா" என்று கூறி னார். குரலை மாற்றிக் கொண்டதால் அவர் என்னைக் கண்டுகொள்ள

வில்லை.

அப்போது என் அக்காள் ஓர் உழக்கில் அரிசி எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். என்னைப் பார்த்தவுடனே குலுங்கக் குலுங்கச் சிரித்தார். சிரிப்பொலியைக் கேட்ட என் தந்தை திரும்பிப் பார்த்து, "அட! நீயா இந்நேரம் உபாதானம் கேட்டாய்?" என்று வாரியணைத்துக் கொண்டார்.

சிறு வயதிலேயே எனக்குச் சித்திரம் வரைவதில் ஆசை. நான் பார்த்த படங்களையும் உருவங்களையும் கோணல் மாணலாக ஆனாலும் தரையில் எழுதி இன்பம் அடைவேன். தலைமயிர் விரித்துள்ளவர்களைப் படம் வரைந்து கீழே 'பேய்' என்று எழுதுவேன். பெரிய பற்களை உடையவர்களை 'ராட்சசி' என்று படம் வரைவேன்.

பழனி வாத்தியார் என்ற ஸ்ரீ சண்முகம் பிள்ளை அவர்கள் முதன் முதலில் எனக்கு எழுத்தறிவித்தவர். கொஞ்ச நாளில் அவர் நாமக்கல்லை விட்டுப் பழனிக்கே போய் விட்டார். பின்னர், எங்கள் தெருவில் இருந்த நம்மாழ்வார் பள்ளியில் படித்தேன். 'ஏட்' வீட்டுப் பையன் என்பதற்காக நம்மாழ்வார் என் படிப்பில் தனிக் கவனம் செலுத்தி வந்தார்.

நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த சமயம். ஒருநாள் ஆசிரியர் நம்மாழ்வார் கொடுத்த கணக்கை, எல்லாப் பிள்ளைகளும் போட்டுக் கொண்டிருந்தார்கள். கணக்கு என்றாலே எனக்கு வேப்பங்காய் போலக் கசக்கும். நான் என்ன செய்தேன், தெரியுமா? அப்போது நாடக விளம்பரத்தில் அச்சடிக்கப்பட்ட, 'கமல இந்திர சபா' நாடக விளம்பரப் படத்தைப் பார்த்து என் பலகையில் ஓவியம் தீட்டினேன். ஆசிரியர் கணக்கைக் காட்டும்படி கேட்ட போது மறந்து போய் நாடகப் படம் வரையப்பட்ட பலகையைக் காட்டினேன். அவ்வளவுதான்! 'பளீர்' என்று என் முழங்காலில் ஓங்கிப் பிரம்பால் அடித்தார். என் குற்றத்தை உணர்ந்தேன்; அலறி அழுதேன். இந்தச் செய்தி நாடக சபை அமைப்பாளருக்குத் தெரிந்தது. அவர் பள்ளிக் கூடத்துக்கு விரைந்து வந்தார்.



ஆசிரியருக்கும் எனக்கும் சமாதானம் கூறினார். சித்திரம் வரையும் என் திறமையைப் பாராட்டி ஒரு ரூபாயைப் பரிசாகக் கொடுத்துச் சென்றார்.

ஆசிரியரிடம் அடி வாங்கினாலும் சித்திரக் கலையில் எனக்கிருந்த ஆசை சிறிதும் குறையாமல் வளர்ந்து கொண்டே இருந்தது. சித்திரம் தீட்டும் ஆர்வம் ஆரம்பப் பள்ளியிலேயே எனக்கு ஆரம்பமாயிற்று. மற்றொரு முறை சீமை மண்ணெண்ணெய் 'டின்'களைத் தாங்கி வரும் ஜாதிக்காய் பெட்டியின் மேல் அழகாக அச்சடிக்கப்பட்டிருந்த பறக்கும் குதிரையைப் பார்த்து அப்படியே வரைந்தேன். கணக்கைப் போடாமல் அந்தப் பறக்கும் குதிரையை வரைந்ததற்காக மீண்டும் என்னை ஆசிரியர் தண்டித்



தார்.

நான் ஓவியம் வரைவதற்கு ஊக்கம் அளித்த ஆசிரியரும் உண்டு. கோவை உயர்நிலைப் பள்ளியில் நான் நான்காம் படிவம் (இப்போது ஒன்பதாம் வகுப்பு) படித்துக் கொண்டிருந்தேன். தலைமை ஆசிரியர் எலியட் துரை என்பவர். அவர் கட்டுரைப் பாடத்துக்கு வருவது வழக்கம். அவர் 'நாகரிகப் பழக்க வழக்கங்கள்' என்னும் தலைப்பில் மாணவர்களைக் கட்டுரை எழுதும்படி கூறினார். பின்னர் நாற்காலியில் சாய்ந்தபடியே ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். நான் கட்டுரையை எழுதி முடித்தேன். முடித்தவுடன் எலியட் துரையின் உட்கார்ந்திருந்த தோற்



றத்தை அப்படியே அழகாக வரைந்தேன். அவர் என் கட்டுரை எழுதும் திறமையையும் ஓவியம் வரையும் ஆற்றலையும் வியந்து பாராட்டினார்; 'கட்டுரை எழுதுவது எப்படி?' என்ற புத்தகத்தையும் பைபிளையும் எனக்குப் பரிசாகக் கொடுத்தார்.

இப்படி நான் சிறு வயதில் ஓவியக் கலையில் கொண்டிருந்த பழக்கமும் பயிற்சியும் பெரியவனான போது வண்ண ஓவியங்கள் தீட்டி நல்ல வருவாய் பெறவும் வாய்ப்பளித்தன. எனக்கு மேலும் பல பாராட்டுகளும் பரிசுகளும் கிடைத்தன. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஒரு சமயம் டில்லியில் முடிசூட்டு விழாவுக்காக வந்திருந்தார்; அரசியாரும் உடன் வந்திருந்தார்.. ஜார்ஜ் மன்னருக்குப் பாரத மாதாவே முடிசூட்டுவது போல நான் வரைந்த ஓவியத்தைக் கண்டு இருவரும் மிகவும் இன்பம் அடைந்தார்கள். அரசியார் நான் போட்டிருந்த கோட்டில் ஒரு தங்கப் பதக்கத்தைப் பரிசாகக் கோத்து என்னைப் பாராட்டினார்.

நான் சிறுவனாக இருந்த போதே கவிதை பாடுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தேன். அக் காலத்தே நாமக்கல்லில் அடிக்கடி தெருக் கூத்து நடக்கும். தெருக் கூத்தை நான் தவறாமல் கண்டு களிப்பேன். கூத்தில் அடிக்கடி கோமாளி வந்து நாடகம் பார்ப்பவர்களைச் சத்தம் போடாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்வார். ஒரு காட்சிக்கும் மற்றொரு காட்சிக்கும் உள்ள இடைவெளியில் கோமாளி தோன்றி, வேடிக்கையாகப் பாடி ஆடுவார்.

"கூத்துப் பார்க்க வந்தீங்களா?
இங்குக்
குசலம் பேச வந்தீங்களா?"

என்று அவர் பாடுவது வழக்கம். இந்தப் பாட்டு எனக்கு மிகவும் பிடித்தமான பாட்டு. பாட்டு என் பிஞ்சு நெஞ்சில் அப்படியே பதிந்து விட்டது.

ஒருநாள், கூத்தைப் பார்த்து விட்டு வீடு திரும்பினேன். இரவு நெடு நேரம் ஆகி விட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. ஆனால், வீட்டில் இருந்த என் அக்காளும் மைத்துனியும் எனக்கு உணவு பரிமாறவில்லை. அவர்களுக்குள் 'வளவள' என்று வாய்ச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். பசியால் துடித்துக் கொண்டிருந்த நான் தெருக் கூத்தில் கோமாளி பாடிய பாட்டின் மெட்டில்,

சாதம் போட வந்தீங்களா? இங்குச்
சண்டை போட வந்தீங்களா?"

என்று உரத்த குரலில் பாடினேன். சிறுவனாகிய நான் பாடிய பாட்டைக் கேட்டு இருவரும் சண்டையை நிறுத்திக் கொண்டனர்; வெட்கமடைந்து எனக்கு உணவு பரிமாறத் தொடங்கினார்கள். இப்படிக் கவிதை பாடுவதில் எனக்கிருந்த ஆர்வம் நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதுவதற்குத்

தூண்டி விட்டது.

அக் காலத்தில் திறமையான நடிகர்கள் பலர் ஒன்றாகச் சேர்ந்து நாடகக் குழுவை அமைத்துக் கொள்வார்கள். ஊர் ஊராகச் சென்று நாடகம் நடத்திப் பணம் சம்பாதிப்பார்கள். அப்படிப்பட்ட நாடகக் குழு ஒன்று நாமக்கல்லில் இரண்டரை ஆண்டுகள் நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தது. அந்தக் குழுவில்தான் கிட்டப்பா என்னும் புகழ்பெற்ற சிறுவன் நடித்து வந்தான். அவர்கள் நடத்திய நாடகங்களின் கதாபாத்திரங்களுக்கேற்ற பாடல்களை எழுதிக் கொடுத்தேன். என் பாடல்களைக் கேட்ட அனைவரும் பாராட்டினர்.

நான் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது என் வாழ்வில் நடந்த சத்திய சோதனையை என்னால் என்றும் மறக்க முடியவில்லை. கணக்கைத் தவிர மற்றப் பாடங்களில் நிறைய மார்க்குகள் பெற்றேன். நான் பள்ளியிறுதி வகுப்பில் (மெட்ரிகுலேஷன்) படித்துக் கொண்டிருந்தேன். கணக்கில் குறைந்த மதிப்பெண்களே பெற்று வந்த என்னை வகுப்பாசிரியர் அடிக்கடி எச்சரித்து வந்தார். அப்போதெல்லாம் அரசு தேர்வு எழுதுவதற்கு முன் பள்ளியிறுதி வகுப்பு மாணவர்களுக்கு 'செலக்ஷன் தேர்வு' என்னும் தெரிவுத் தேர்வு நடக்கும். தெரிவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களே அரசு தேர்வில் கலந்து கொள்ள முடியும். 'தெரிவுத் தேர்வில் தேவையான மதிப்பெண்கள் பெறாவிட்டால் இறுதித் தேர்வுக்கு அனுமதிக்க மாட்டேன்' என்று வகுப்பாசிரியர் இட்டவட்டமாகக் கூறி விட்டார்.


வகுப்பாசிரியர் கூறியதைக் கேட்ட நான் இடியோசை கேட்ட நாகம் போலத் துடித்தேன். 'கணக்குப் பாடம் எனக்கு எமனாக இருக்கிறதே' என்று கலங்கினேன். மறுநாள் என் வகுப்பில் படிக்கும் நெருங்கிய நண்பனான இராமநாதனிடம் போனேன். இராமநாதன் கணக்கில் மட்டும் நிறைந்த மதிப்பெண்களும் மற்றப் பாடங்களில் மிகக் குறைந்த மதிப்பெண்களும் வாங்கக் கூடியவன். இருவரும் கலந்து யோசித்தோம். இராமநாதனுக்குத் 'திடீர்' என்று ஓர் எண்ணம் தோன்றியது.

''ராமலிங்கம், கவலைப்படாதே! தெரிவுத் தேர்வில் என் கணக்கு விடைத் தாளில் என் பெயரை எழுதுவதற்குப் பதிலாக 'ராமலிங்கம்' என்று உன் பெயரை எழுதி விடுகிறேன். அதே போல உன் கணக்கு விடைத்தாளில் 'ராமநாதன்' என்று என் பெயரை எழுதிவிட வேண்டும்; தெரிகிறதா?'' என்று சொன்னான். இந்த ஏற்பாடு இருவராலும் முழு மனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது. இராமநாதன் வாக்களித்தபடியே தெரிவுத் தேர்வில் தன் கணக்கு விடைத்தாளில் 'ராமலிங்கம்' என்று பெயர் எழுதி விட்டான். ஆனால்



என் விடைத்தாளில் அவன் பெயரை எழுத மறந்து விட்டேன். என் பெயரையே எழுதி விட்டேன்.

கணக்கு விடைத்தாள்களைத் திருத்திய போது 'ராமலிங்கம்' என்ற பெயரில் இரண்டு விடைத்தாள்கள் இருப்பதைக் கண்டார் ஆசிரியர். உடனே எங்கள் இருவரையும் அழைத்தார்; நடந்த உண்மையைச் சொல்லும்படி மிரட்டிக் கேட்டார். நான் நடுநடுங்கினேன்; உண்மையைக் கக்கி விட்டேன். இருவரையும் மன்னிக்கும்படி அவர் காலில் விழுந்து கேட்டுக் கொண்டேன். பெரிய உள்ளம் படைத்த ஆசிரியர் எங்களை மன்னித்து விட்டார்; இறுதித் தேர்வு எழுதுவதற்கும் அனுமதி அளித்தார்.



அம்மா: ஏண்டா ராமு, மாமா ஒரு வாரம் தங்கப் போறேன் என்று வந்துவிட்டு உடனே கிளம்பிப் போய்விட்டாரே?

ராமு: நான் எதுவும் சொல்லவில்லை, அம்மா. என் புத்தக அலமாரியைக் காட்டி, "அட்டை போட்டுத் தர்றேளா, மாமா?" என்றுதான் கேட்டேன்.

— ஆர். ராஜேஸ்வரி.

இப்படி வேண்டுமென்றே பொய் சொல்ல விரும்பியும்கூட என்னால் அது முடியாமல் போய் விட்டது.

தெரிவுத் தேர்வுக்கு அனுமதிக்கப் பட்டாலும் நான் அந்த ஆண்டில் மெட்ரிகுலேஷன் தேர்வில் தோல்வி அடைந்தேன். அதற்குக் காரணம் கணக்கில் குறைந்த மதிப்பெண்கள் பெற்றது அன்று. ஆங்கிலத்திலும் தமிழிலும் குறைந்த மதிப்பெண்கள் பெற்றதே என் தோல்விக்குக் காரணம். என் வாழ்க்கையில் விடை காண முடியாத புதிர்களுள் இதுவும் ஒன்று. ஆனால், அடுத்த ஆண்டில் நடந்த மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றி பெற்றேன். பின்னர் பிஷப் ஹீபர் கல்லூரி என்று அழைக்கப் படும் திருச்சி எஸ்.பி.ஜி. கல்லூரியில் எஃப்.ஏ. வகுப்பில் சேர்ந்து படித்தேன். அங்கு என் காதுகளில் ஒன்று செவிடாகிப் போய் விட்டதால் தொடர்ந்து படிக்காமல் கல்லூரிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டேன்.

இளமைப் பருவத்தில் நான் ஓவியக் கலையில் கொண்டிருந்த ஆர்வம் என்னைச் சிறந்த ஓவியக் கலைஞனாக மாற்றியது. சிறு வயதிலேயே கவிதை எழுதும் பழக்கம் பிற்காலத்தில் நாட்டு விடுதலை, தெய்வப் பற்று, சமுதாயச் சீர்திருத்தம், பெரியோர் புகழ் முதலியவை பற்றி ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடுவதற்கு ஊக்கம் அளித்தது. என் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருந்த என் பெற்றோர்களையும், நண்பர்களையும், பெரியோர்களையும் நான் என்றும் மறக்க மாட்டேன்.

தொகுத்து எழுதியவர்:
புலவர் நல்லாசிரியர் தணிகை
உலகநாதன்.

அடுத்த இதழில்...

என் குழந்தைப் பருவம்

எம்.எஸ். சுப்புலட்சுமி





ஜேம்ஸ் வாட்

'நீராவி எஞ்சினைக் கண்டுபிடித்தவர் யார்?' என்று கேட்டால், 'ஜேம்ஸ்வாட்' என்று சொல்வோம். ஆனால், நீராவி எஞ்சின் 18 — ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே இருந்தது. தண்ணீர் இறைப்பதற்குத்தான் அதைப் பெரும்பாலோர் பயன்படுத்தினார்கள். அதன் சக்தி மிகக் குறைவாக இருந்தது. அதில் பல மாற்றங்களைச் செய்து அதிக சக்தி உடையதாகச் செய்தவர் ஜேம்ஸ் வாட்.


ஒரு தச்சரின் மகனாக ஸ்காட்லாந்தில் கிரீனாக் என்ற இடத்தில் பிறந்த இவர், சிறு வயதிலேயே கணிதத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அப்பாவுடன், சேர்ந்து தச்சு வேலைகளைச் செய்து வந்தார்.

1763 — ஆம் ஆண்டு, ஒருவர் இவரிடம் ஒரு நீராவி எஞ்சினைக் கொண்டு வந்து கொடுத்து, 'அதில் ஏதோ கோளாறு இருப்பதாகவும், அதைச் சரி செய்து தரும்படியும் கேட்டார். அதைப் பரிசோதித்த வாட்; அதில் பழுது எதுவும் இல்லை என்றும், அதிலுள்ள கொதிகலன் சிறியதாக இருந்ததால்தான் சரியாக வேலை செய்யவில்லை என்றும் அறிந்தார். உடனே, அதைத் திருத்தி அமைத்து மிகுந்த சக்தி வாய்ந்த எஞ்சினாகச் செய்தார்.

இதற்குப்பத்து ஆண்டுகள் சென்று, அவர் ஒரு தொழில் அதிபருடன் கூட்டுச் சேர்ந்து நீராவி எஞ்சின்களைத் தயாரிக்கத் தொடங்கினார். மேலும், பல ஆராய்ச்சிகளைச் செய்து, சில ஆண்டுகளில் உலகப் புகழை அடைந்தார்.

பழமொழிப் புதிர்

புதிர்-47



புதிர்-48



எந்த எந்தப் பழமொழியைக் குறிக்கின்றன இந்தப் படங்கள்?

விடை 23 ஆம் பக்கம்.

பிருந்தாவனக் கதையரங்கம்



என்ன வழி?

மா.தா. ஸ்ரீதர் (13601)

காலை 8.45 மணி.

வேணு முதுகில் பெரிய புத்தக மூட்டையுடன் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். இன்னும் 15 நிமிடங்களில் பள்ளிக்கூடம் போக வேண்டும். காலை 9 மணிக்கெல்லாம் 'பெல்' அடித்து விடுவார்கள். அதுவும் அவனின் ஏழாம் வகுப்பு ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர்.

வேணு, காலை 8.00 மணிக்கே பஸ் ஸ்டாண்டுக்கு வந்து விட்டான். முக்கால் மணி நேரம் பஸ்ஸுக்காகக் காத்திருந்து அவனுக்கு எரிச்சல் வந்து விட்டது. வெயில் கொடுமை வேறு!

முதலில் ஒரு பஸ் வந்தது. அது அங்கு நிற்காமல் போய் விட்டது. அடுத்து பள்ளிச் சிறுவர் — பெண்கள் 'ஸ்பெஷல்' பஸ்ஸும் வந்தது. அதில் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஏறவே முடியவில்லை. கொஞ்ச நேரம் கழிந்தது. அடுத்த பஸ்ஸில் ஏறி விட்டான். படிக்கட்டில் நின்றபடியே புத்தக மூட்டையையும் சுமந்து கொண்டு, நல்ல வேளையாக நடு வழியில் விழாமல் பள்ளி போய்ச் சேர்ந்தான்.

அப்போது மணி ஒன்பதாகி விட்டது.

அன்று பள்ளிக்குத் தாமதமாகத் தான் சென்றான். ஆசிரியர் கடுமையாகத் திட்டி உட்கார வைத்தார். வேணுவிற்குப் பாடத்தில் மனம் செல்லவில்லை. ஒரே வருத்தம்.

மாலையிலும் அதே சங்கதி.

வேணு பஸ் வருவதைப் பார்த்து சாலையில் விடுவிடுவென்று ஓடினான். அதற்குள் பஸ் ஸ்டாண்டிலிருந்து அது கிளம்பி விட்டது. "ஸ்டாப், ஸ்டாப்" என்று அதன் பின்னால் ஓடினான். பஸ் போயே போய்விட்டது.

கடைசியாக நாலாவது பஸ்ஸில் ஏறி வீடு வந்து சேர்ந்தான். நேராக அம்மாவிடம் சென்றான்.

"அம்மா, நான் இனிமேல் பஸ்ஸில் செல்லமாட்டேன்!"

"ஏன்டா கண்ணா?"

"பஸ் கூட்டத்தில் புகுந்து என்னால் ஏற முடியவில்லை. சீக்கிரமாகப் புறப்பட்டும் லேட்டாகத்தான் பள்ளிக்கூடம் போய்ச் சேருகிறேன். அதனால் வாத்தியாரிடம் அநாவசியமாகத் திட்டு வாங்குகிறேன். இனிமேல் பஸ்ஸில் போக மாட்டேன்!"

"என்னை என்ன பண்ணச் சொல்கிறாய்?"

"வேறு ஒண்ணு மில்லையம்மா!

எனக்கு ஒரு ரிக்ஷாவை ஏற்பாடு பண்ணுங்க!''

''சரி, அப்பா வரட்டும். நான் சொல்லி ஏற்பாடு செய்கிறேன்.''

மறுநாள்.

ஏழெட்டுச் சிறுவர்களை ஏற்றிக் கொண்டு ஒரு ரிக்ஷா வந்து அவன் வீட்டு வாசலில் நின்றது.

அதைப் பார்த்த வேணு, ''இது ஏதடா புது சங்கடம்? ஏற்கெனவே நிறையப் பேர் பெரிய பெரிய புத்தக மூட்டைகளுடன் உட்கார்ந்து இருக்கிறார்கள். நான் எப்படி இதில் உட்கார்ந்து போக முடியும்?'' என்று யோசித்தான். முடிவில் அரை மனத்துடன் ஏறி உட்கார்ந்தான்.

அந்த ரிக்ஷா ஊரில் இருக்கும் பள்ளிக்கூடம் எல்லாவற்றையும் அவனுக்குக் காண்பித்து விட்டு, கடைசியாக அவன் பள்ளிக்கூட வாசலில் வந்து நின்றது.

உள்ளே வகுப்பு நடந்து கொண்டிருந்தது.

'நாளைக்கு ரிக்ஷாவைக் கொஞ்சம் சீக்கிரமாக வரச் சொல்ல வேண்டும்' என்று எண்ணிக் கொண்டு இறங்கினான்.

மீண்டும் லேட். அன்றும் திட்டு. ஆனால் மாலையில் பள்ளிக்கூடம் விட்டு வெளியே வந்தால் ரிக்ஷா, தயாராக நின்று கொண்டிருந்தது!

தினமும் காலையில் லேட்! மாலையில் சரியான நேரத்தில் வீடு வந்து சேருகிறான்!

அந்த வாரக் கடைசி நாள், ஆசிரியர் வேணுவை அழைத்தார். கோபமாகவும் கண்டிப்பாகவும் பேசினார். ''நாளைக்கும் லேட்டாக வந்தால் வீட்டிற்குத்தான் திரும்பிப் போக வேண்டும். வகுப்பில் உட்கார அனுமதிக்க மாட்டேன்'' என்று அதட்டலுடன் எச்சரித்தார்.

பள்ளிக்கூடத்திற்குச் சீக்கிரமாகப் போக வேண்டும். இதற்கு என்ன வழி?

அன்று மாலையில் வீட்டிற்குள் நுழையும் போதே, ''அம்மா, இனி எனக்கு ரிக்ஷா வேண்டாம்'' என்று சொன்னான்.

இப்பொழுதெல்லாம் வேணு சரியான நேரத்தில் பள்ளிக்கூடத்திற்குப் போய் விடுகிறான்!

அப்படியா! எதில் போகிறான்?

நடை'ராஜா' பஸ் சர்வீஸ்லேதான்!

ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் பள்ளிக்கூடத்திற்குப் பஸ் எதற்கு? ரிக்ஷா எதற்கு? என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டான்!



ஆறாவது படிக்கும் ராம்சந்த், சுட்டித் தனமும் சுறுசுறுப்பும் உடையவன். ஆண்டுப் பரீட்சை முடிந்ததும், கோடை விடுமுறை இரண்டு மாதம். விடுமுறையில் என்ன செய்யலாம் என்று நினைத்து இருக்கையில் சைக்கிள் வாங்கினால் ஜாலியாக ஓட்டியபடி ஊர் சுற்றலாமே!'' என்று நினைத்து அப்பாவைக் கேட்டான்.

''நீ முதலில் சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள். அப்புறம் சைக்கிள் வாங்கலாம்'' என்றார்.

இதற்குள் மதுரையில் இருந்து கிட்டு மாமா கடிதம் எழுதி இருந்தார். அதில், ராம்சந்தை வரச் சொல்லியிருப்பதைக் கண்டு அவன் மகிழ்ச்சியில் ஆனந்தமாக விளையாடினான். அவன் தந்தை மறுவாரம் வேலை விஷயமாக மதுரை செல்வதாகவும், அவனை அங்கு விட்டு விடுவதாகவும் கூறினார். அதனால் ராம்சந்த் மனவாட்டமுற்றான். பிறகு மதுரை கிளம்ப

ஆயத்தமானார்கள். ரெயிலில் ஏறி மதுரையை அடைந்தனர்.

அவர்களை வரவேற்க, கிட்டு மாமா ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். வீட்டிற்கு வந்து இரண்டு நாட்கள் தங்கிவிட்டு, அவன் தந்தை கிளம்பி விட்டார். அங்கு ராம்சந்த் நன்கு விளையாடினான். மாமா அவனை சர்க்கஸுக்குக் கூட்டிச் சென்றார். அதில் ஒரு கரடியும் குரங்கும் சைக்கிள் ஓட்டுவதைக் கண்டு தன் விருப்பத்தை மாமாவிடம் தெரிவித்தான்.

மாமா சம்மதம் கொடுத்து, தன் நண்பரின் சைக்கிள் கடையில் சைக்கிள் வாடகைக்கு எடுத்துத் தந்தார். ஒரே வாரத்தில் சைக்கிள் விட நன்கு கற்றுக் கொண்டான்.

ஒரு நாள் மாமா வழக்கமாக வாடகைக்கு சைக்கிள் எடுக்கும் கடைக்குச் சென்று வண்டி கேட்டான். "சிறிய வண்டி வெளியே போயிருக்கிறது. சிறிது நேரத்தில் வந்துவிடும். வந்ததும் தருகிறேன்" என்று கடைக்காரர் கூறினார். 'சரி' என்று அவனும் அருகில் உள்ள கற்குவியலில் அமர்ந்து, சிறியதும் பெரியதுமான கற்களை விளையாட ஒரு பையில் எடுத்துக் கொண்டிருந்தான்.

அப்போது, 'ஐயோ' என்று ஒரு குரல் கேட்டுத் திரும்பினான். அங்கே ஒரு பெண்ணின் சங்கிலியைப் பறித்துக் கொண்டு ஒருவன் ஓடினான். உடனே ராம்சந்த் சைக்கிள் கடையில் உள்ள பெரிய சைக்கிளின் மேல் அமர்ந்து விறுவிறுவென ஓட்ட ஆரம்பித்தான். அது அவனுக்குப் புது அனுபவம்.

வேகமாகச் சென்ற அவன் பையில் வைத்திருந்த கற்களை ஓடிக் கொண்டு இருந்த திருடன் மீது சரமாரியாக வீசினான். வேகமாக அவன் வீசிய ஒரு கல் அவன் நெற்றியைப் பதம் பார்த்து விட்டது. அதனால், அவன் மயங்கி விழுந்தான். உடனே, பின்னால் துரத்தி வந்தவர்கள் திருடனைக் கட்டிப் போட்டு போலீசில் ஒப்படைத்தனர். ராம்சந்தை வெகுவாகப் பாராட்டினர்.

விசாரணையில்'அவன்வழிப்பறிக்காகப் பலமுறை சிறை சென்றவன்' என்பது தெரிய வந்தது.

இதனால் அவ்வூர் இன்ஸ்பெக்டர் ராம்சந்தைப்பாராட்டிப்பரிசுகொடுத்தார். இச்செய்தி மறுநாளே நாளிதழ்களில் தெரிய வந்தது. ஊரிலிருந்த தந்தையும் செய்தியைப் படித்து ஆச்சரியப்பட்டார்.

ராம்சந்த் ஊர் திரும்பியதும் அவனை முதலில் வரவேற்றது ஒரு புதிய 'சைக்கிள்'!



வாயில் ஏதோ ஒரு பாட்டின் மெட்டை உச்சரித்துக் கொண்டே, கையில் புத்தகத்தோடு வெளியில் வந்து நின்றாள் வித்யா. அவளது துள்ளலுக்குக் காரணம், அவள் தனது தோழி ஜெயந்தியின் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்ததுதான். நூல் நிலையத்திற்குப் போய்ப் புத்தகத்தை மாற்றிக் கொண்டு விட்டு, பின்னர் ஜெயந்தி வீட்டிற்குப் போகலாம் என்று அவள் திட்டமிட்டிருந்தாள்.

அன்று விடுமுறை நாள் ஆனதால், வேறு எந்தத் தடையும் இல்லை.

'அம்மா, நான் ஜெயந்தி வீட்டிற்குப் போய் வருகிறேன். திரும்பி வருவதற்கு ஒரு மணி நேரம் ஆகும்,' என்று சமையலறையை நோக்கிக் கத்திவிட்டு, செருப்பை மாட்டிக் கொண்டு வெளியில் வந்தாள்.

அவன் புறப்படுவதைக் கண்ட அம்மா, அவசர அவசரமாக ஒரு சீட்டையும் பையையும் எடுத்துக் கொண்டு வருவாள் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை!

"வித்யா, வித்யா! கொஞ்சம் கடைக்குப் போய் இந்த லிஸ்டில் உள்ள சாமான்களை மட்டும் வாங்கிக் கொடுத்து விட்டு உன் சிநேகிதி வீட்டுக்குப் போயேன். சாமான்களெல்லாம் தீர்ந்துவிட்டன," என்று கெஞ்சும் குரலில் கூறினாள் அம்மா. ஏற்கெனவே சுருங்கி இருந்த வித்யாவின் முகம், இன்னும் காற்றுப் போன பலூன் போலாயிற்று!

"போம்மா! உனக்கு வேறு வேலையே கிடையாது. நான் எங்காவது கிளம்பினால்தான் உனக்கு மூக்கில் வியர்த்து விடுமே! ஏதாவதொரு வேலையைச் சொல்வாய். என்னால் முடியாது. நீயே போய்க் கொள்," என்றாள் சிடுசிடுவென்று.

அம்மாவிற்கு மிகவும் வருத்தமாகி விட்டது.

"இல்லை, வித்யா. நான் போவதைப் பற்றி இல்லை. குழந்தை சுதாவை எங்கே விட்டுப் போவது? அவளைப் பார்த்துக் கொள்ள வேறு ஆள் கிடையாது. உன்னாலும் அவளைச் சமாளிக்க முடியாது. அதனால்தான் உன்னைப் போகச் சொல்கிறேன். எல்லாச் சாமான்களையும் வாங்க வேண்டாம். முக்கியமான சில சாமான்களை மட்டும் வாங்கிக் கொடு" என்று மீண்டும் கெஞ்சினாள்.

வித்யாவிற்கு இதனால் எரிச்சல் மேலும் கூடியது. "அதெல்லாம் முடியாது. நான் ஜெயந்தி வீட்டிற்குப் பத்து மணிக்கே வருவதாகக் கூறியிருந்தேன். மணி இப்பொழுதே பத்தேகால் ஆகிவிட்டது. சுதாவைப் பக்கத்து வீட்டு மேரி அக்காவிடம் விட்டுவிட்டு நீயே கடைக்குப் போய்க் கொள்," என்று வெடுக்கென்று கூறிவிட்டு, பதிலைக் கூட எதிர்பாராமல் வெளியேறினாள்.

வித்யா, தன் மனத்தில், "சே! இந்த அம்மா ரொம்ப மோசம். எல்லார் வீட்டிலும் இப்படியா தம் பிள்ளைகளை வேலை வாங்குகிறார்கள்? அல்லது, நான் இல்லாவிட்டால் இந்த அம்மாவால் வேலையே செய்ய முடியாதா, என்ன? இப்பொழுதும் நான் இல்லை என்று நினைத்துக் கொண்டு வேலைகளைச் செய்யட்டுமே! நான் தானா அகப்பட்டேன்?" என்று முணுமுணுத்துக் கொண்டே நூல் நிலையத்திற்குச் சென்று புத்தகத்தை மாற்றிக் கொண்டு ஜெயந்தி வீட்டிற்கு வந்தாள்.

அங்கே போனால், ஜெயந்தி பையை எடுத்துக் கொண்டு எங்கேயோ கிளம்பிக் கொண்டிருந்தாள்.

"என்னடி ஜெயந்தி! நான் பத்து மணிக்கு வருவதாகக் கூறியிருந்தேனல்லவா? நீயானால் எங்கோ கிளம்புகிறாயே?" என்றாள்.

ஜெயந்தி, "சொன்னது உண்மைதான். அதற்காக அம்மா சொல்லைத் தட்ட முடியுமா? அவசரமாய்க் கடைக்குப் போய்ச் சில சாமான்கள் வாங்கி வரச் சொன்னாள்," என்றாள்.

அவள் சொல்லி முடிப்பதற்குள், 'ஏன்? உன் அம்மாவிற்கு உடம்பு சரியில்லையா, என்ன? நீ ஏன் கடைக்குப் போகின்றாய்?' என்று கேட்டாள் வித்யா.

"இல்லையே. நான்தான் இங்கு எப்பொழுதும் கடைக்குப் போவது வழக்கம். என் அம்மா நல்லாத்தான் இருக்காங்க" என்று கூறிவிட்டு, "நான்

பிறந்த நாள்

"என் பிறந்த நாளுக்கு 'கேக்' வெட்டறது மேல்நாட்டுப் பாணின்னுட்டார், எங்க அப்பா...!"

"அப்புறம்...?"

"உளுந்து வடையை நல்லா வெட்டினேன்!"

— வலங்கை ஜி. ராஜசேகர்.



கடைக்குப் போய்விட்டுத் திரும்பி வருவதற்கு எப்படியும் அரை மணி நேரமாவது ஆகும். அதுவரையில் நீ இங்கேயே இருக்கிறாயா, அல்லது என்னுடன் வருகிறாயா? சீக்கிரம் சொல். நேரமாகிறது'' என்று கேட்டாள் ஜெயந்தி.

வித்யாவுக்கு உடனே வீடு திரும்ப மனமில்லை. ''சரி, நானும் உன் கூடவே வருகிறேன்,'' என்று கூறிவிட்டுக் கிளம்பினாள் வித்யா.

இருவரும் பேசியபடியே நடந்து பத்து நிமிடத்தில் கடைத் தெருவை அடைந்து விட்டனர். அப்போது, வித்யா திடீரென்று நின்று விட்டாள்! அவளுக்கு எதிரில், அவள் அம்மா தன் இரண்டு கைகளிலும் கனமான பைகளை எடுத்துக்கொண்டு வந்து கொண்டிருந்ததுதான் காரணம்!

அம்மாவும் வித்யாவைப் பார்த்து விட்டாள். ஆனால், ஒன்றுமே சொல்லாமல்ஜெயந்தியைப்பார்த்துப்புன்னகைத்தாள். வித்யாவிற்கு மனத்தில் 'சுரீர்' என்று உரைத்தது. 'அம்மா கடைக்குப் போகச் சொல்லிக் கெஞ்சிய போது, போக மாட்டேன் என்று சொல்லி விட்டு, இப்போது தோழியுடன் அதே இடத்திற்கு வந்திருக்கிறாயே,' என்று அவள் மனம் அவளை இடித்துரைத்தது.

அவள் உடனே ஜெயந்தியின் பக்கம் திரும்பி, ''ஜெயந்தி, என் அம்மா கனமான பைகளுடன் போகின்றாள். நான் கூடப் போனால் ஒரு பையையாவது வாங்கிக் கொள்ளலாம் அல்லவா? நான் அம்மாவோடு போகிறேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பினாள். தானும் அம்மாவிடமிருந்து பையை வாங்கிக் கொண்டு சேர்ந்து நடக்கத் தொடங்கினாள்.

அம்மா ஒன்றுமே பேசவில்லை. அவளது மௌனமே வித்யாவின் மனத்தை உறுத்தியது. இருவரும் வீட்டை நெருங்கினர்.

அம்மாவையும், அக்காவையும் பார்த்தவுடன் வாசலில் விளையாடிக் கொண்டிருந்த சுதா ஓடி வந்தாள். உடனே அம்மா, 'அடி சுதா! உன்னைப் பக்கத்து வீட்டில்தானே விட்டு வந்தேன்? நீ எப்படி வாசலுக்கு வந்தாய்?' என்று கேட்டாள். அவள் பேசி முடிவதற்குள் வித்யா அலறினாள்.

''அம்மா, அம்மா! சுதாவின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை காணோம்மா,'' அம்மாவும் அப்பொழுதுதான் பார்த்து அலறினாள்.

உடனே சுதா சிரித்தவாறு, ''சங்கிலியா? அதை ஒரு மாமா வந்து வாங்கிண்டு போய்ட்டா,'' என்றது மழலையில். 'எந்த மாமாடி?' என்று அலறினாள் அம்மா.

''மிட்டாய் கொடுத்த மாமா,'' என்றாள் சுதா. இதற்குள் பக்கத்து வீட்டு மேரி ஓடி வந்து, ''அடடா! சுதா, நீ இங்கேயா இருக்கிறாய்? உன்னை ஹாலில்தானே விட்டு வந்தேன்? நீ எப்படி இங்கே வந்தாய்?'' என்று அதிசயித்தாள்.

அம்மா விவரத்தைச் சொன்னவுடன், எல்லோரும் திட்டினர். 'இரண்டு பேரில் ஒருவர் கடைக்குப் போய்விட்டு மற்றொருவர் வீட்டில் இருப்பதுதானே? அப்பொழுது சங்கிலி தொலைந்திருக்காது அல்லவா?'

அம்மா ஒன்றும் பேசாமல் வித்யாவின் முகத்தைப் பார்த்தாள். வித்யா வெட்கித் தலைகுனிந்தாள்!

நல்ல யோசனை!

''என் பையனை எந்தக் கடையிலே வேலைக்குச் சேர்த்தாலும் திருடிச் சாப்பிட்டுவிட்டு ஓடிவந்துவிடுகிறான். என்ன பண்ணுவதென்றே தெரியவில்லை?''

''பேசாமே வெடிமருந்து தயார் பண்ணுகிற கம்பெனியிலே சேருங்கள். கண்டிப்பாகத் திருடிச் சாப்பிட மாட்டான்.''

— இரா. மணி.



கவிதை பிறந்த கதை

உலகம் சோலைதான்

கவிஞர் பல்லவன்



"என் நண்பருடைய மகன் நன்றாகப் படிக்கக் கூடியவன். என்றாலும் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தொடர்ந்து தோல்வி அடைந்து வந்தான். மார்ச்சில் எழுதுவது, அடுத்து அக்டோபரில் எழுதுவது மீண்டும் மார்ச்சில்... இப்படி எழுதிக் கொண்டே இருந்த அவனுக்கு நான் ஊக்கம் அளிக்க முயன்றேன்" என்று கூறும் திருக்கழுக்குன்றத்துக் கவிஞர் பல்லவன் அவர்கள் அந்தப் பைய னுக்கு என்ன சொல்லியிருப்பார்?

உலக மேதைகளில் சிலர், பள்ளிப் படிப்பில் வெற்றி வாய்ப்பை இழந்த வரலாற்றைச் சொன்னார். அது மட்டுமல்ல; அவர்களெல்லாம் தோல்வி கண்டு துவளாமல் தொடர்ந்து முயன்று முடிவில் வெற்றி மாலை சூடியதையும் எடுத்துக் காட்டினார்.

இப்படிச் சொன்னதையெல்லாம், சொல் மாலையாகக் கட்டி, அந்தச் சிறுவன் கழுத்திலும் போட்டார். ஆம், பலமுறை அவனுக்குச் சொன்ன அறிவுரையே பாட்டாக மலர்ந்தது.

ஒருநாள் அந்தச் சிறுவன் இனிப்புடன் ஓடி வந்தான். கவிஞர் புரிந்து கொண்டார். அவன், தான் தேர்வில் வெற்றி பெற்றதை மகிழ்ச்சியுடன் கூறினான். அவனை விடப் பெரிதும் மகிழ்ந்தார் கவிஞர். காரணம், அவர் பாட்டு அவன் பாட்டையையே (பாதையையே) மாற்றி அமைத்து விட்டதல்லவா? அந்தப் பாட்டு இதுதான்:



பலமுறை திருத்தி வரைந்தால்தான்
பாங்காய் ஓவியம் உருவாகும்
பலமுறை பாடிப் பார்த்தால்தான்
பண்ணுடன் குரலும் வளமாகும்!

பலமுறை நடந்து பார்த்தால்தான்
பாதை புதிதாய் உருவாகும்.
பலமுறை ஓடிப் பார்த்தால்தான்
பந்தயப் பரிசும் கைகூடும்!

பலமுறை படித்துப் பார்த்தால்தான்
பாடம் மனத்தில் பதிவாகும்.
பலமுறை நினைத்துப் பார்த்தால்தான்
படித்தவை கல்மேல் எழுத்தாகும்!

மயங்கித் தயங்கி நிற்காதே!
மனமும் தளர்ந்து போகாதே!
முயன்று முயன்று பார்த்தால்தான்
முடிவில் வெற்றி உனைத்தேடும்!

கவிஞர் கூறுகிறார் —

ஒருநாள் இரவு!

என்னுடைய மகள் கண்மணி என்து கழுத்தைக் கட்டிக் கொண்டு, 'ஒரு விடுகதை சொல்வேன்; விடை சொல்லுங்க அப்பா!' என்றாள்.

'என்ன?' என்று கேட்டேன்.

''ஊருக்கெல்லாம் ஒரே துப்பட்டி! அது என்ன?''

'எனக்குத் தெரியாது' என்பது போலத் 'திருதிரு' என்று விழித்தேன். நான் விழிப்பதைப் பார்த்த அவள், ''ஊருக்கு எல்லாம் ஒரே துப்பட்டி எது தெரியுமா? வானம்...'' என்று பதிலை அவளே சொல்லி விட்ட மகிழ்ச்சியில், என்னை ஏற இறங்கப் பார்த்தாள்.

''ஓ, அப்படியா?'' என்று வியப்புடன் கேட்டு அவளுக்கு மேலும் உற்சாகம் அளித்தேன்.

— என்று கூறும் கவிஞர் பல்லவன் அவர்களுக்கு, இந்த நிகழ்ச்சி இரவெல்லாம் அவர் சிந்தனையை வளர்த்தது.

உலகுக்கெல்லாம் ஒரே வானம் உள்ளது.

உலகம் ஒன்றாக இருக்கிறதா?

மனித இனம் ஒன்றுபட்டுக் கிடக்கிறதா?

மனிதர்கள் உள்ளத்தால் ஒருவராகவும், உருவத்தால் கோடி கோடியாகவும் ஆகும் நாள் என்று வரும்?

— கவிஞர் மனத்தில் கேள்வி அலை அடிக்கிறது... அதே மனத்தில் அந்தக் கேள்விக்குப் பதிலும் கிடைக்கிறது, பாட்டாக! அந்தப் பாட்டு உணர்த்துவது, ஒருமைப்பாட்டை!



''பன்னீர் சந்தனம் சேருமானால்
வாசம் மிகுதிதான்.
பாலும் தேனும் சேருமானால்
தித்திப்பு அதிகம்தான்.

பொன்னும் மணியும் சேருமானால்
பொலிவு மேலும்தான்.
பூவும் நாரும் சேருமானால்
புனித மாலைதான்.''

என்று தொடங்கும் இந்தப் பாடல், 'தேரானது தானே நகர்ந்திடுமோ? எல்லாரும் சேர்ந்து இழுத்தால் தானே நகரும்?' என்று ஒருமைப் பாட்டு உணர்வைச் சொல்லாமல் சொல்கிறார், கவிஞர்.

''கோடு ஒன்று சேருமானால்
கோலம் அழகுதான்.
கோடிக் கைகள் சேருமானால்
குவியும் செல்வம்தான்!
நாடு ஒன்று சேருமானால்
நட்பு உறவுதான்.
நமது ஊரு சேருமானால்
நகரும் தேருதான்!''

என்று சொல்லி, உண்மையான அன்பு மலர வேண்டும். அப்போது தான் இந்த உலகமே அழகிய சோலையாக மாறும் என்றும் கருத்துப்படக் கவிஞர் கவிதையை முடிக்கிறார் —

''ஓடும் நதிகள் சேருமானால்
ஓடும் வறுமைதான்.
உள்ளம் ஒன்று சேருமானால்
ஒருமைப் பாடுதான்.

ஊடும் பாவும் சேருமானால்
ஒளிரும் உடைகள்தான்.
உண்மை அன்பு செழிக்குமானால்
உலகம் சோலைதான்!''

பேட்டி: பி. வி. கிரி.

பழமொழிப் புதிர்

— விடை:

புதிர் — 47: நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

புதிர் — 48: நரிக்குக் கொண்டாட்டம்; நண்டுக்குத் திண்டாட்டம்.

ஸ்ரீகாந்த் வழங்கும் கிரிக்கெட்



"கிரிக்கெட் ரசிகர்களை மகிழ்விப்பதே என் குறிக்கோள்! அவர்கள்தானே பணம் கொடுத்து டிக்கெட் வாங்கி கிரிக்கெட் ஆட்டத்தைக் காணத் திரளாக வருகிறார்கள்!" என்கிறார் இன்றைய கிரிக்கெட் டெஸ்ட் நட்சத்திரம் ஸ்ரீகாந்த்.

* "சின்ன வயசிலே நீங்க லுங்கி கட்டிக் கொண்டு டென்னிஸ் பந்தை அடிச்சு விளையாடியதை நான் பார்த்திருக்கேன்!" — பூரிப்போடு ஒரு ரசிகர்.

"நான் லுங்கி கட்டிண்டு விளையாடினதா ஞாபகம் இல்லே! ஆனால் டென்னிஸ் பந்திலே நிறைய விளையாடியிருக்கேன்!" ஸ்ரீகாந்தின் நறுக்குத் தெறித்த பதில்!

இளம் ரசிகர் கேள்வி: "பாஸ்ட் பௌலிங்கைச் சந்திக்கறச்சே உங்களுக்கு அடிபட்டுடும்னு பயமாயில்லையா?"

ஸ்ரீகாந்த் பதில்: "அடிபட்டுடும்னு பயந்தா கிரிக்கெட் மைதானத்திலே இறங்கத் தோணுமா? எத்தனையோ பாஸ்ட் பௌலிங்கிலே என் உடலிலே பட்ட 'விழுப்புண்கள்' இருக்கு! நான் அதற்கு அஞ்சறதில்லே!"

* "உங்களுக்குப் பிடிச்ச சினிமா நட்சத்திரம்?"

"ஸ்ரீதேவி!"

இளம் சிட்டுக்கள் முதல் தொண்டு கிழம் வரை பலர் டெஸ்ட் நட்சத்திரம் ஸ்ரீகாந்திடம் கேள்விக் கணைகளைத் தொகுத்து அயர வைக்க முயல, இந்திய ஓபனிங் பாட்ஸ்மன் ஸ்ரீகாந்த் சளைக்காது 'பதிலடி'கள் கொடுத்து 'ஆரவாரம்' செய்ய வைக்கிறார்!

ஸ்ரீகாந்தின் மனத்தைக் கவர்ந்த மைதானம் சேப்பாக்க மைதானம் தான்! 'வி' ஸ்டாண்டில் உட்கார்ந்து கிரிக்கெட் ரசித்த இந்த இளம் குருத்து, பல ரசிகர்களைக் குதூகலிக்க வைத்து 'செஞ்சுரி' கண்ட சேப்பாக்க மைதானம் இவரது பெருமைக்கு நிலைக்களமாக விளங்குகிறது!

ஸ்ரீகாந்த் இளம் கிரிக்கெட் ரசிகர்களை மகிழ்விப்பதற்காக டீ. வி. யில் **All the way for Four** என்று பதின்மூன்று வாரங்களுக்குப் புதன்கிழமை தோறும் டிசம்பர் 7 — ஆம் தேதி முதல் இரவு 7.30 லிருந்து 8 மணி வரை கிரிக்கெட் தொடர் நிகழ்ச்சி சென்னைத் தொலைக்காட்சியில் வழங்கிவருகிறார்! சிறுவர்களாகிய உங்களுக்குக் கொண்டாட்டம் தான்! இரவில் அரை மணி நேரம் உங்கள் படிப்பு தடைப்படும்! 'எங்கள் தடங்கலுக்கு வருந்துகிறோம்' என்று பெற்றோரிடம் நீங்கள் அறிவித்து விட வேண்டியதுதான்!

ஸ்ரீகாந்தின் கிரிக்கெட் தொடரைத் தயாரித்து வழங்கும் விளம்பர நிறுவனம் ஆட்சைட்ஸ் அட்வர்ட்டைசிங் கம்பெனியாகும். இந்தக் கிரிக்கெட் தொடரை நிதி உதவி அளித்து ஆதரித்து வழங்க 'ஸாலிடேர்' டீ.வி. நிறுவனமும், கெல்விநேட்டர் தயாரிப்பு நிறுவனமும் முன்வந்துள்ளன.

கிரிக்கெட் தொடரின் காட்சி வரிசைகள்:

1. சேப்பாக்கம் சிதம்பரம் ஸ்டேடியத்தில் பாகிஸ்தானுக்கெதிராக ஸ்ரீகாந்தின் சதமெடுத்த காட்சிகள்.

* அடையாறு பார்க் ஓட்டலில் புதிய கிரிக்கெட் தொடர் பற்றி விளக்கம் தருகிறார் ஸ்ரீகாந்த்.



2. ரிலையன்ஸ்கோப்பை 1987—ல் நாக்பூரில் நடைபெற்ற ஒருநாள் பந்தயத்தில் காவஸ்கரும் ஸ்ரீகாந்தும் இணைந்து ஆடி நியூஸிலந்தைத் திணறடித்த காட்சிகள். ஸ்ரீகாந்த் நிர்வாகிகளுக்களித்த பேட்டி.

3. சிட்னி உலகப் பந்தயத்தில் கபில்தேவின் சாதனை. வயது முதிர்ந்தவர்களுடன் டெஸ்ட் நட்சத்திரம் ஸ்ரீகாந்த் கேள்வி—பதில் நேரம்.

4. ஷார்ஜா பந்தயத்தில் ஸ்ரீகாந்தின் 75 ரன்கள் பாகிஸ்தான் குழுவுக்கெதிராக எடுத்த வேளை.

5. ஷார்ஜாவில் பாகிஸ்தான் நட்சத்திரம் மியான்தாத் சதம். ரசிகப் பெண்மணிகளுடன் ஸ்ரீகாந்த் உரையாடல்.

6. சிட்னியில் ஆஸ்திரேலியாவுக்கெதிராக ஸ்ரீகாந்த் எடுத்த அபாரமான சதம்.

7. இந்தியாவுக்கும் மேற்கிந்திய தீவுக்கும் நடைபெற்ற பந்தயத்தில் காப்டன் விவியன் ரிச்சர்ட்ஸ் எடுத்த செஞ்சுரி. மழலைச் செல்வங்களுடன் டெஸ்ட் நட்சத்திரம் ஸ்ரீகாந்த்.

8. மெல்போர்னில் ஸ்ரீக்காந்தின் 86 ரன்கள், ஆஸ்திரேலியக் குழுவுக்கெதிராக எடுத்தவை. அடித்தள மக்களுடன் கிரிக்கெட் கலைஞர் ஸ்ரீகாந்த்.

9. கபில்தேவின் செஞ்சுரி சேப்பாக்க மைதானத்தில் ஆஸ்திரேலியாவுக்கெதிராக எடுத்த காட்சிகள். கல்லூரி மாணவ மாணவியருடன் ஸ்ரீகாந்த் உரையாடுகிறார்.

10. சித்து, கபில்தேவ், கிரன்மோர் பெங்களூரில் நியூஸிலாந்து குழுவுக்கெதிராக ஆடிய சம்பவங்கள். தொழில் நிர்வாகிகளுடன் ஸ்ரீகாந்த் சம்பாஷணை.

11. வெங்சர்க்கார், நவ்ஜோதி சித்து புதுதில்லி ஆஸ்திரேலியக் குழுவுக்கெதிராக ஆடிய நிகழ்ச்சிகள். வயது முதிர்ந்தவர்களுக்கிடையில் கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த்.

12. கல்கத்தா ஒருநாள் பந்தயத்தில் ஸ்ரீகாந்த் பாகிஸ்தானுக்கெதிராக எடுத்த அபார சதம். பெண்மணிகளுடன் ஸ்ரீகாந்த் உரையாடல்.

13.. இந்தியாவுக்கெதிராக ஸலீம் மாலிக்கின் 70 ரன்கள்; மேல்போர்ன் டெஸ்டில் ஆலன்பார்டரின் செஞ்சுரி!

பங்களாதேஷில் இந்தியாவுக்குக் கிடைத்த பெருமை, பெங்களூரில் நியூஸிலந்து குழுவினரோடு முதல் டெஸ்ட் ஜெயம் அனைத்தும் இந்திய கிரிக்கெட் வீரர்களின் பெருமையை, குறிப்பாக வெங்சர்க்கார், உதவி காப்டன் ஸ்ரீகாந்தின் புகழை உயர்த்தி விட்டன. இந்தச் சமயத்தில் டி.வி.யில் ஸ்ரீகாந்தின் கிரிக்கெட் தொடர் அனைவரது கவனத்தையும் கவர்ந்து வருகின்றன என்று நம்புகிறோம்.

— குண்டுமணி.

இவர்கள் யார்?



விடை 31 – ஆம் பக்கம்

புதையலைத் தேடி...

ஆர்.பி.சாரதி

அரவிந்தனுக்குக் கால்கள் கெஞ்சின... தடம் மாறி இருக்குமோ என்ற அச்சம் நெஞ்சைக் கவ்வியது. இதுவரை நடந்த சாரணர் பேரணி களில் எல்லாம் அவன்தான் புதை யல் வேட்டையில் பரிசைத் தட்டிச் சென்றிருக்கிறான். இந்த முறை புதை யல் பரிசு சாதாரணமானதல்ல... சாரண இயக்கத்தின் தந்தை பேடன் பவுல் உருவம் பதித்த வெள்ளி டாலர்...! அதை எப்படியும் அடைந்து தனக்கும், தன் பள்ளிக்கும் பெருமை தேடித் தர வேண்டும் என்று அவ னுக்கு ஆசை.... ஆனால் அது அவ் வளவு எளிதாயில்லை...

விலை மதிப்பு அதிகம் உள்ள பரிசு என்பதனாலேயே புதையலைப் பள்ளி யிலுள்ள விளையாடும் இடத்தில் புதைக்காமல், பள்ளியை அடுத்த முந் திரிக் காட்டில் முதல் நாளே புதைத்து விட்டார்கள்! புதையல் தேட வழி காட்டும் அடையாளக் குறிப்புகளும் அதிகம் இல்லை... பள்ளிக்கு ஒருவர் என்று பதினாறு பேர் கலந்து கொள் ளும் போட்டியில் அவனுக்கு இரண்டு அடையாளக் குறிப்புச் சீட்டுக்கள் கிடைத்தன. அந்த வழிகாட்டும் அறி வுரைப்படிதான் நடந்து வந்து கொண் டிருந்தான். ஆனால், நடுக்காட்டின் அடர்த்தி அச்சத்தை ஊட்டிக் கொண் டிருந்தது. குறிப்பிட்ட நேரத்துக்குள் புதையலைத் தேடி எடுத்து வர வேண் டும். இல்லாவிட்டால் பரிசு யாருக்கு மில்லை... அடுத்த சாரண முகாம் விளையாட்டில்தான் வாய்ப்பு!

மாலை பரிசளிப்பு விழா... பேரணி நிறைவு விழா... டி.எஸ்.பி. தலைமை ஏற்று, பரிசு வழங்க இசைவு தெரி வித்திருந்தார்... மாறு வேடப் போட்டி யில் அவன் கலந்து கொள்ள வேண் டும் என்று நண்பர்கள் விருப்பம் தெரி வித்திருந்தார்கள்.

எதிரே ஒரு பாழுங் கிணறு... உள்ளே படிக்கட்டுகள் உண்டு... உள்ளே பொந்தில் புதையலோ, புதை யல் வழிக் குறிப்போ இருக்குமோ? கிணற்றை நோக்கி விரைந்தான்.

சட்டென்று அவன் கால்கள் நின் றன... ஒரு மரத்தின் பின்னே உடலை மறைத்தான். அவனுக்கு முன்னே மாணவர் யாரும் வந்திருக்கவே முடி யாது! அப்படியானால் ஒரு தலை தெரிகிறதே! மெல்ல மெல்லப் படி ஏறி வருவது யார்? முதுகுதான் தெரிந் தது... முகம் தெரியவில்லை... உடை முழுதும் சொட்டச் சொட்ட ஈரம்...

கையில் கனமான ஒரு பெட்டி... தூக்கமுடியாமல் தூக்கி வருவது தெரிந் தது... உள்ளே என்ன இருக்கும்?

கிணற்றுக் கைப்பிடிச் சுவரில் பெட்டியை வைத்து விட்டுச் சுற்று முற்றும் நோக்கினான் அவன்... அவனா? முகம் தெரிந்து விட்டது... இனிமேல் அவன் என்று சொல்ல முடியாது! அவரா, அவரேதானா? சந்தேகமில்லை. சந்தோஷம்தான்! ஊரின் மிகப் பெரிய மனிதர்... ஊரே அவருக்குத்தான் சொந்தம்... நில மெல்லாம் அவர் உறவினர் நண்பர் கள் பெயரில்தான்... அமரமேடு அமரேசுவரர் ஆலயத்தின் தக்கார்... அவர் புகைப்படம் வராத பத்திரி கையே இல்லை... அவர்... அவரா? எங்கே இப்படி? கோயிலுக்குப் பத்தடி நடந்து வராதவர்... தெருவில் காரை விட்டுக் கீழே இறங்காதவர்.. ஏன் இவ்வளவு தூரம் நடந்து வந்திருக் கிறார்...? பழைய ஞாபகமா? வீட்டு வாசலிலிருந்து உள்ளே குரல் கொடுக்க ஒன்பது ஆளை ஏவுபவர்.. நகத்தில் அழுக்குப்படச் சம்மதிக்கா தவர்... காட்டுக் கிணற்றுக்குள் இறங் கிக் கனமான பெட்டியைச் சுமந்து



வருவது என்றால்? அதற்குள் என்ன இருக்கும்? தங்கமா, வைரமா? அவர் ஒரு காலத்தில் ஏழையாயிருந்து பிறகு பணக்காரரானவர். எப்படிப் பணக்காரரானார்? அதைப் பற்றிப் பல வதந்திகள்.

அரவிந்தன் மூளை சுறுசுறுப்பாய் இயங்கியது... சாரணர் புதையல் வேட்டையை விட முக்கியமான புதையல் பெட்டியில் இருக்கிறது... இதைத் தந்திரமாகக் கண்டுபிடிக்க வேண்டும்!

''வணக்கம் அய்யா!'' அரவிந்தன் அவர் எதிரே நின்றான்... அவர் திடுக்கிட்டார்!

''நீ... நீ... யா....ர்? ஏன்... இங்கே... எப்படி... எதற்கு?''

''புதையல் வேட்டைக்கு''

அவர் பயந்து விட்டார்... அவருக்குப் புரியவில்லை....!

''பள்ளியில்... புதையல் தேடும் விளையாட்டு!''

''புதையலா... என்ன புதையல்?... எங்கே உள்ளது புதையல்?''

''சாரண ஆசிரியர் ஒளித்து வைத்திருக்கிறார்... வெள்ளி டாலர்....''

''எங்கே?''

''தெரியாது.... அதைத் தேடித்தான் வந்தேன்!''

''சரி.... நீ தேடு... நான் வருகிறேன்!'' சுமக்க முடியாமல் பெட்டியைச் சுமந்து கொண்டு கிளம்பினார்.

''என்னிடம் கொடுங்கள்... உதவி செய்வது சாரணன் கடமை!''

''உன்னால் தூக்க முடியாது!''

''முடியும்'' பிடுங்காத குறையாகப் பற்றிக் கொண்டான்... கனம் அதிகமாகவே இருந்தது.

''காரை அங்கே விட்டு வந்திருக்கிறேன்... காருக்குத் தண்ணீர் தேடித்தான்....'' இழுத்தார் அவர்...

''பெட்டியிலா தண்ணீர் எடுத்துப் போக முடியும்? உடம்பெல்லாம்... துணி... தலை எல்லாம் நனைந்து விட்டதே!'' அரவிந்தன் சந்தேகத்தை மறைத்துச் சாது போலக் கேட்டான்.

''இங்கு காட்டிலாகா வாச்மேன் இருப்பான் என்று வந்தேன்... படி தவறி, பெட்டியுடன் விழுந்து விட்டேன்.''

''பெட்டியுடனா வந்தீர்கள்?''

''என்ன செய்வது? நடுரோட்டில் காரில் பெட்டியை விட்டு வைத்து...''

''பூட்டிக் கொண்டு வந்திருக்கலாமே!'' அரவிந்தன் வார்த்தையைக் கேட்காதவர் போலிருந்தார்.

''அதோ கார்... நீ பெட்டியைக் கொடுத்து விட்டுப் போகலாம்!''

''பரவாயில்லை... நீங்கள் ஈர உடையுடன் இருக்கிறீர்கள்... பெட்டியை இறக்க என் உதவி தேவைப்படலாம்!''

''உன் உதவி போதும்... காரில் புது உடை எப்போதும் கைவசமிருக்கும்!'' அவர் காரில் ஏறினார்.

''உங்கள் உதவி எனக்குத் தேவை ஆயிற்றே!'' அரவிந்தும் காரில் தன்னைத் திணித்துக் கொண்டான்.

''பண உதவியா...: சிபாரிசா... நீ யார்...? என்ன வேண்டும் உனக்கு?''

''நான் சோழமங்கலம் பள்ளி மாணவத் தலைவன்... இன்று சாரணர் பேரணி நிறைவு விழா... நீங்கள் அவசியம் வர வேண்டும்... பல விழாக்களில் உங்களைப் பார்த்திருக்கிறேன்''

''இல்லை... நிச்சயம் வர முடியாது... இன்று வரவே முடியாது... இன்று இரவு நான் முக்கியமான ஒருவரை விமான நிலையத்தில் சந்தித்தே ஆக வேண்டும்.''

''இரவில்தானே சந்திக்க வேண்டும்? எங்கள் விழாவைத் துவக்கி விட்டுப் புறப்பட்டு விடலாம்... சார்... தயவு செய்து சம்மதிக்க....''

''முடியவே முடியாது... உன்னைப் பெரிய சாலையில் இறக்கி விட்டு விடுகிறேன்... நீ பஸ்ஸில் போய் விடு, பள்ளிக்கு''. கார் புறப்பட்டது. இருவரும் பேசவில்லை.

பத்தே நிமிடத்தில் கார் பல்லாவரம் சாலையை அடைந்தது... ஒரு பெரிய ஓட்டல் முன் நின்றது.

''வா,காபி சாப்பிடு... பிறகு போகலாம்!''

சந்தோஷத்தின் அழைப்பை அரவிந்த் மறுக்கவில்லை....

''பெட்டி.....?'' இழுத்தான் அரவிந்த்.

''மேலே அறையில் வைத்து விட்டு வந்து விடலாம்! அறையிலிருந்தே ஆர்டர் செய்யலாம்'' பெட்டியுடன் மாடிப்படி ஏறினான். ''அடிக்கடி இங்கு வந்து தங்குவீங்களா?''

''நிரந்தரமாகவே ஓர் அறை எனக்குண்டு.... கட்டடமே எனக்குச் சொந்தம்தான்''

''ஓட்டல்... லாட்ஜுக்கு வாடகைக்கு விட்டிருக்கிறீர்களா?''

''ஆம்... பேசிக் கொண்டிருக்க நேரமில்லை... உன்னை ஆசிரியரும், நண்பர்களும் தேடுவார்கள்?'' அரவிந்தை அனுப்ப அவசரப்பட்டார் சந்தோஷம்.

அறையைத் திறந்தார்... பெட்டியைப் பத்திரமாக இரும்பு அலமாரியில் வைத்துப் பூட்டினார். டெலிபோன் மூலமே இரண்டு காபிக்கு ஆர்டர் கொடுத்தார்... ஓட்டல் பக்கத்துக் கட்டடம்... ஈர உடையை மாற்றிக் கொண்டார்.

அப்போது டெலிபோன் மணி ஒலித்தது. உடனே அவர் பாய்ந்து வந்து எடுத்தார். ''அப்படியா? சரி, இதோ வருகிறேன். உம். உடனே வருகிறேன்'' என்று கூறி விட்டு, ''தம்பி, நீ இங்கேயே இரு. திரும்பி அரை மணி நேரத்தில் வந்து விடுவேன். நான் காரிலேயே உன்னைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு விடுகிறேன்... ஓய்வெடுத்துத் தூங்கு... வெளியே பூட்டிக் கொண்டு போகிறேன்''

''மிக்க மகிழ்ச்சி... நிறைவு விழாவிலும் கலந்து கொண்டு....''

''பார்க்கலாம்!'' சந்தோஷம் வெளியேறினார்... வெளியே மறக்காமல் கதவைப் பூட்டிக் கொள்வது புலப்பட்டது. அரவிந்தன் உஷாரானான். விரல்கள் டெலிபோன் எண்களை விரைந்து சுழற்றின. யாரோடு பேச நினைத்தானோ அவரோடு பேசி முடித்தான்.

உடனே, டெலிபோன் மணி அலறியது... ரிசீவரைக் கையிலெடுத்தான்.

''அய்யாவா, அவர் இங்கு இல்லையே... வெளியே போயிருக்காங்க''

''நீங்க யாரு தெரியலை... முக்கியமான ஒரு பொருளோட நான் நைட் ஃப்ளைட்டிலே போகணும்... அய்யா



வந்ததும் நினைவுபடுத்துங்க... எட்டு மணிக்கு ஏர்போர்ட்டிலே இருக்கணும்.''

''நீங்க மறுபடி போன் செய்வீங்களா?''

''முடியாது... அடிக்கடி போன் பேசக் கூடாது.... அய்யாவுக்குப் பிடிக்காது!''

''நான் அய்யாவுக்கு வேண்டியவன்!'' — டெலிபோனைக் கீழே வைக்கவும் வெளியே கதவு திறக்கவும் சரியாயிருந்தது! பதறிக் கொண்டு உள்ளே நுழைந்தார் சந்தோஷம்.

''யாரோடு பேசினாய் போனிலே? என்ன விஷயம்? என்ன விஷயம்?''

''யாரோ உங்களுக்கு வேண்டியவராம்.''

''அவன் என்ன சொன்னான்?''

''எட்டு மணிக்கு ஏதோ ஒரு பொருளோட ஏர்போர்ட்டிலே பார்க்கச் சொன்னான்.''

''என்ன பொருள்... என்று விவரம் சொன்னானா?''

''இல்லை....''

வெளியே கதவு லேசாகத் தட்டப் பட்டது. ''உள்ளே வரலாமா?''

''வாருங்கள்!'' குரலில் மகிழ்ச்சி இல்லை. உள்ளே வந்தார் ஒரு மனிதர்.

''வணக்கம்... உங்களைப் பார்த்து விட்டுப் போகலாமென்றுதான் வந்தேன். இது யார்? உங்கள் பையனா?''

''இல்லை. எனக்குத் தெரிந்த பையன். இவன் பள்ளியிலே ஒரு விழாவாம். அதற்கு என்னை அழைக்க வந்திருக்கிறான். நேரமாகிறது. உடனே புறப்பட வேண்டும். ஆமாம், நீங்கள் யார்? எதற்காக வந்திருக்கிறீர்கள்?''

''நீங்கள் மிகப் பெரிய பணக்காரர் என்றும், பிறருக்கு உதவுவதில் பெரு மகிழ்ச்சி அடைபவர் என்றும் கேள்விப்பட்டேன். நான் ஓர் அனாதைக் குழந்தைகள் இல்லம் நடத்துகிறேன். அது சம்பந்தமாக.....''

அவர் பேச்சை முடிக்கவில்லை.

''சரி, சரி, அது பற்றி நாளைக்கு என் வீட்டிற்கு வாருங்கள். முடிந்த உதவியைச் செய்கிறேன்'' என்று கூறி

விட்டு, உடைகளை மாற்றிக் கொள்வதற்காக இரும்பு பீரோவின் ஒரு கதவைத் திறந்தார்.

அப்போது அரவிந்தன், அங்கு வந்தவரிடம், ''அதோ'' என்று சைகை மூலம் பீரோவின் உள்ளே இருந்த கறுப்பு நிறப் பெட்டியைக் காட்டினான்.

உடனே அவர், ''சார், அதோ அந்தப் பெட்டி மிக அழகாக இருக்கிறதே! இப்படி ஒரு பெட்டி எங்கள் அனாதை இல்லத்தில் இருந்தால் சில முக்கிய பொருள்களைப் போட்டுப் பூட்டி வைக்கலாமே என்று நினைத்து டில்லிக்குச் சென்ற என் நண்பர் ஒருவரிடம் சொல்லி அனுப்பினேன். அவர் வாங்காமலே திரும்பி விட்டார்....''

''அதற்கென்ன? நானே ஒரு பெட்டி வாங்கித் தந்து விடுகிறேன். இப்போது நேரமாகுது''

''இதை எப்படிப் பூட்டுவது, எப்படித் திறப்பது என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டுக்கொண்டே அவர் பெட்டியின் கைபிடியைப் பிடித்து இழுத்தார். உடனே அவரைத் தடுத்த சந்தோஷம், ''என்ன இது! எப்படிப் பழகுவது என்றே தெரியவில்லையே, சேச்சே, உங்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாது உடனே இந்த இடத்தை விட்டுக் காலி பண்ணுங்கள்'' என்று எரிந்து விழுந்தார்.

''தப்புத்தான். நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு அறையை விட்டு வெளியேறினார் அந்த மனிதர்.

அடுத்த ஐந்து நிமிஷத்தில் அவர் அறைக்குள் தடதடவென்று நான்கு போலீஸ்காரர்கள் நுழைந்தார்கள். அவர்களைப் பார்த்ததும், சந்தோஷம் திடுக்கிட்டார். அவர்களின் பின்னாலே முன்பு சாதாரண உடையில் வந்த மனிதரும் வந்தார்.

''சார், உங்கள் பெட்டியை என் ஒருவனால் இழுக்க முடியவில்லை. அதனால்தான் நாலு பேரைத் துணைக்குக் கூட்டி வந்திருக்கிறேன்'' என்று கூறி, ஒரு போலீஸ்காரரை அந்தப் பெட்டியை வெளியில் எடுக்கச் சொன்னார். அங்கிருந்த மேஜை மேல் அதை வைக்கச் சொன்னார்.

''உள்ளே என்னதான் இருக்கிறது? பார்க்கலாமா? பெட்டியைத் திறந்து காட்டுங்கள்'' என்றார்.

சந்தோஷம் தயங்கினார்.

''உம், திறந்து காட்டுங்கள்'' என்று அதட்டியதும், சந்தோஷம் கை நடுக்கத்துடன் பெட்டியைத் திறந்தார்.

உள்ளே.. பத்திரிகைகளில் அமர்க்களப்பட்ட பல லட்சம் மதிப்புள்ள அமரமேடு அமரேசர் ஆலய அமராவதி அம்மனின் பஞ்சலோகச் சிலை புன்முறுவல் சிந்தக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. அது காணாமல் போய்க் கைவிடப்பட்ட விஷயம்.


மறு நிமிடமே, சந்தோஷம் கைகளில் விலங்கு மாட்டப்பட்டது. அப்போதுதான், அங்கு சாதாரண உடையில் வந்தவர் சாதாரண மனிதரல்லர். டி.எஸ்.பி.தான் அப்படி வந்தவர் என்பதை சந்தோஷம் அறிந்து கொண்டார்.

அவருக்கு டெலிபோனில் தகவல் கொடுத்து சிலையைக் கண்டுபிடிக்க உதவியவன் அரவிந்தன்தான் என்பதையும், அன்று இரவே அவருடைய கையாட்களும் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்கள் என்பதையும் மறுநாள் காலையில் போலீஸ் ஸ்டேஷனில் லாக்—அப்பில் இருந்த சந்தோஷம் தெரிந்து கொண்டார்.

அரவிந்தனுக்குச் சாரணப் புதையல் பரிசு கிடைக்காத போனால் என்ன? அதைவிட மிகப் பெரிய பரிசைத்தான் அவன் அரசாங்கத்திடமிருந்து பெறப் போகிறானே!

இவர்கள் யார்? விடை

1. ஆண்டர்சன், 2. எடிசன், 3. கியூரி, 4. சர்ச்சில், 5. டார்வின், 6. நியூட்டன், 7. நெப்போலியன், 8. நைட்டிங்கேல், 9. நௌரோஜி, 10. ஃப்ராங்க்ளின், 11. மாண்டிசோரி, 12. சி. வி. ராமன், 13. லிங்கன், 14. ஜகதீஸ் போஸ், 15. ஜான்ஸி ராணி, 16. எஸ். ஸ்ரீநிவாச அய்யங்கார்.



வாசனை எப்போது வரும்?


ரா.பொன்ராசன்

எங்கோ மிகத் தூரத் திலே
நடப்பதை எல்லாம் — கண்
எதிரி லேயே நடப்பது போல்
பார்க்க முடியுதே!
இந்த விந்தை எப்ப டித்தான்
சாத்திய மாச்சு? — அதை
எனக்கும் சற்று விளக்க மாக
எடுத்துச் சொல்விரே!

வண்ண வண்ண மாகக் காட்சி
தெரியச் செய்தவர் — இனி
வாச னையும் சேர்த்து எப்போ
வழங்கப் போகிறார்?

பின்னர் வரும் தலை முறையார்
செய்யட் டும்என்றே — அந்தப்
பெரிய வர்கள் மணத்தை மட்டும்
விட்டு வைத்தாரோ?

உல்லா சமே குறிக்கோ ளாகக்
கொண்டு விடாமல் — நம்மை
உள்ள படி பண் படுத்தி
வளர்ப்பதற் கென்றே
எல்லா வகை நிகழ்ச்சி களும்
வழங்கிடும் என்றால் — நாம்
என்றும் தொலைக் காட்சி யினை
வாழ்த்திட லாமே!



ஏன் இந்த ஏமாற்றம்?

வி.ர.வசந்தன்

புத்தகப் பையை எடுத்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு உள்ளே சென்ற சுதாகரை, பத்து நிமிடங்களுக்கு மேல் ஆகியும் காணவில்லை.

வெளியே ஸ்கூட்டரில் காத்திருந்த அப்பா பொறுமையிழந்து, "எனக்கு ஆபீஸுக்கு நேரமாகுது. அவன் என்ன செய்யறான்னு பாரு." என்று வாசலில் நின்று கொண்டிருந்த அம்மாவிடம் கேட்டார்.

"எதையாவது மறந்து எங்கேயாவது வச்சுட்டு, தேடிக்கிட்டு இருப்பான். வேறே என்ன செய்வான்? அவன்தான் மறதியில் மன்னனாச்சே" என்று முணுமுணுத்த அம்மா சுதாகரின் அறைக்கு விரைந்தாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே, புத்தகங்கள் அறை முழுவதும் சிதறிக் கிடக்க, மேஜை இழுப்பறைகள் திறந்திருக்க எதையோ பரபரவென்று தேடிக் கொண்டிருந்தான் சுதாகர்.

"என்ன சுதாகர் தேடுகிறாய்?" என்று கேட்டாள் அம்மா.

"என் பேனாவைக் காணோம்மா. அதைத்தான் தேடுறேன்" என்ற சுதாகர் மீண்டும் தேடுவதில் முனைந்தான்.

"பேனாவை ஸ்கூலிலேயே தொலைச்சிருப்பாய். பிறகு வீட்டிலே வந்து தேடினா எப்படிக் கிடைக்கும்?" என்று கோபித்தாள் அம்மா.

"இல்லேம்மா. நேத்திக்கு ராத்திரி என் ஹோம்வொர்க்கெல்லாம் அதை வச்சுத்தானே செய்தேன்...? பிறகு, மேசை மேலேதான் வச்சுட்டுப் போனேன், இப்பக் காணோம்" என்று சாதித்தான் அவன்.

"ஏண்டா, மேசை மேலே வச்சுட்டுப் போன பேனா இறக்கை முளைச்சுப் பறந்துட்டுதாக்கும்... ஞாபக மறதியா எங்கேயாவது வச்சிருப்பாய்..." என்று அம்மா சொல்லிக் கொண்டிருக்கும் போது வெளியே அப்பா ஸ்கூட்டரின் ஹாரனை அடித்து நேரமாகிக் கொண்டிருப்பதை மீண்டும் நினைவுபடுத்தினார்.

"சரி, சரி, அப்பாவுக்கு நேரமாச்சு... இப்ப கிளம்பு. சாயங்காலம் வந்து தேடலாம்" என்றாள் அம்மா.

"பேனா கொண்டு போகலேன்னா மிஸ் அடிப்பாங்க" என்று கண்ணைக் கசக்கினான் சுதாகர்.

"நல்லா உதை வாங்கு. அப்பத்தான் உனக்குப் புத்தி வரும்" என்று சப்தமிட்டாள் அவள்.

இதற்குள் ஸ்கூட்டரில் இருந்து இறங்கி, "என்ன ரகளை, ஏன் என்ன ஆச்சு?" என்று கேட்டவாறு உள்ளே வந்தார் அப்பா.

பேனாவை எங்கேயோ தொலைச்சுட்டு, ஊரெல்லாம் தேடிக்கிட்டு இருக்



கான் உங்க பிள்ளை'' என்று படபடத் தாள் அம்மா.

''என்ன சுதாகர், எந்தப் பொருளை யும் அதற்குரிய இடத்திலே வைக்க ணும், கண்டபடி வீசக்கூடாதுன்னு எத்தனை நாள் சொல்லி இருக் கேன்... இப்படி மறதியா ஒவ்வொரு பொருளையும் வச்சிட்டுத் தேடினால் எவ்வளவு நேரம் வீணாகுது பார்... சரி, இந்தா இப்ப அவசரத்துக்கு இந்தப் பேனாவை வச்சுக்க'' என்று தான் வைத்திருந்த பேனாக்களில் ஒன்றை அவனுக்குக் கொடுத்தார் அப்பா.

சுதாகரின் பள்ளிக்கூடம் அப்பா அலுவலகம் செல்லும் வழியிலேயே இருந்ததால் தனது ஸ்கூட்டரிலேயே அவனை அழைத்துச் சென்று பள்ளிக் கூடத்தில் விட்டுவிடுவார் அவர். இன்று அப்பாவின் ஸ்கூட்டர் பள்ளிக் கூடத்தை அடைந்த போது வகுப்பு ஆரம்பிப்பதற்காக மணியடித்துக் கொண்டிருந்தது. சுதாகர் கீழே இறங்கி மூச்சிரைக்க ஒரே ஓட்டமாக தன் வகுப்பறையை நோக்கி ஓடினான். அதோடு காலையில் நடந்த நிகழ்ச் சியை வழக்கம் போல மறந்தும் விட் டான்.

சுதாகரின் அப்பா, தான் தற்போது பார்க்கும் வேலையை விட, உயர்ந்த வேலையொன்றுக்கு ஒரு பெரிய தொழில் நிறுவனத்தில் விண்ணப் பித்திருந்தார். அவரை உடனடியாக நேர்முகத் தேர்வுக்கு வரும்படி அழைத் திருந்தார்கள்.

அந்த நிறுவனத்தின் தலைமை அலு வலகம் விசாகப்பட்டினத்தில் அமைந் திருந்தது. நல்ல திறமையும், முன் அனு பவமும் இருந்ததால், அந்த வேலை எப்படியும் தனக்குக் கிடைத்துவிடும் என்று நம்பினார் அப்பா.

அன்று மாலை அவர் வீட்டிற்கு வந்த போது அவர் முகம் மகிழ்ச்சி யால் பூரித்திருந்தது. அவர் சுதாகரை யும் அம்மாவையும் அழைத்து, ''நாளை மறுநாள் காலையிலே நாம் எல்லோரும் விசாகப்பட்டினம் போகப் போகிறோம்... தயாராக இருங்க'' என்றார்.

சுதாகருக்கும் அம்மாவுக்கும் ஒன்

றுமே புரியவில்லை. ''என்னங்க, நீங்க மட்டுந்தானே இண்டர்வியூவுக்குப் போறதாச் சொல்லிக்கிட்டிருந்தீங்க'' என்று கேட்டாள் அம்மா.


''ஆமா, இதை ஒரு வாய்ப்பாப் பயன்படுத்திக்கிட்டு எல்லோரும் போயிட்டு வந்துடலாம்னு நினைச்சேன். அந்தப்பிரம்மாண்டமான துறை முகத்தைச் சுதாகருக்கு நேரே காட்டியது போலவும் இருக்கும். இதோ பாரு, நாளை மறுநாள் காலையில் ஐந்து மணிக்குப் புறப்பட ற பஸ்ஸிலே மூணு டிக்கெட் புக் பண்ணியாச்சு'' என்று பதிவு செய்யப்பட்ட பயணச் சீட்டுக்களை எடுத்துக் காட்டினார்.

சுதாகருக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. அவன் பாடங்களில் படித்திருந்த அந்தக் கப்பல் கட்டும் துறை முகத்தைப் பார்க்கப் போகிறான். கப்பல்கள் கட்டப்படுவதையும், பழுது பார்க்கப்படுவதையும் நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

திடீரென்று அவனுக்கு ஒரு சந்தேகம் உதித்தது. அவன் அப்பாவைப் பார்த்து, ''எம்பா, யார் வேணும்னாலும் உள்ளே போய்ப் பார்க்கலாமா?'' என்று கேட்டான்.

''ஊகூம். அதுதான் முடியாது. அதற்கு முன் அனுமதி பெற்றாகணும்... என்னோட நண்பர் ஒருத்தர்





ஆசிரியர்: நேற்று தாத்தா இறந்து போனார். இது இறந்த காலம். இன்று குழந்தை பிறந்தது. இது என்ன காலம்?

முரளி: இது பிறந்த காலம் சார்!

— லலிதா செல்லப்பா.

அங்கே அதிகாரியாக இருக்கார், அவர் மூலமாக துறைமுகத் தலைவரிடம் அனுமதிக் கடிதம் வாங்கி வச்சிருக்கேன்'' என்றார் அப்பா.

சற்றும் எதிர்பாராமல் தனக்குக் கிடைத்த அந்த அருமையான வாய்ப்பை எண்ணிக் களித்தான் சுதாகர்.

அப்பா அவனிடம், ''சுதாகர், இந்த பஸ் டிக்கெட்டுகளையும், இந்த அனுமதிக் கடிதத்தையும் நம்ம கப்போர்டிலே வச்சுப் பத்திரமாப் போகும் போது எடுத்துக்கலாம்'' என்றார்.

அவன் அப்பாவிடமிருந்து அவற்றை வாங்கிக் கொண்டு உள்ளே போய்ப் பத்திரமாக கப்போர்டில் வைத்துப் பூட்டினான். பூட்டி சாவியை அவன் கையில் எடுத்தபோது வெளியே யாரோ தன்னை அழைக்கும் சப்தம் கேட்டது. ஜன்னல் வழியாக அவன் எட்டிப் பார்க்க எதிர் வீட்டு பாபு வாசலில் நின்று கொண்டிருந்தான்.

அவன் அவசரத்தில் சாவியை முறையாக அதற்கான இடத்தில் வைக்காமல், சட்டென்று தன் காற்சட்டைப் பையில் போட்டுக்கொண்டு வெளியே ஓடினான்.

நண்பனோடு வெகுநேரம் உரையாடிவிட்டுத் திரும்பியவன், தன் காற்சட்டைப் பையில் சாவியைப் போட்டதை மறந்தே போனான். இரவு அவன் உடை மாற்றிக் கொண்ட போதும் சாவியின் நினைவு மட்டும் அவனுக்கு வரவேயில்லை.

அம்மா வந்து அழுக்குத் துணிகளை எல்லாம் எடுத்து அழுக்குக் கூடைக்குள் திணித்துவிட்டுப் போனாள். கப்போர்டின் ஒற்றைச் சாவி இருந்த சுதாகரின் காற்சட்டையும் அழுக்குத் துணிகளோடு கலந்து கூடைக்குள் போயிற்று.

விசாகப்பட்டினம் புறப்பட வேண்டிய, அன்று அதிகாலையில் எல்லோரும் எழுந்து குளித்துத் தயாராகிக் கொண்டிருந்தனர். அம்மா சமையல் வேலைகளை முடித்துவிட்டுப் பயணத்திற்கு வேண்டிய பொருட்களை ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள்.

அப்பா சுதாகரை அழைத்து, ''பஸ் டிக்கெட், அந்த அனுமதிக் கடிதம் எல்லாம் எடுத்துட்டு வா, சுதாகர்'' என்றார்.

சுதாகர் சென்று கப்போர்டை திறப்பதற்காகச் சாவியைத் தேடினான். வழக்கமாக சாவி இருக்கும் இடத்தில் அதைக் காணவில்லை. அங்குமிங்கும் தேடிப் பார்த்தான். கிடைக்கவில்லை. அப்போதுகூட, தான் ஞாபக மறதியாக அதைக் கால்சட்டைப்பையில் போட்டுக் கொண்டது அவனுக்கு நினைவுக்கு வரவேயில்லை!

சற்று நேரத்தில் சாவியைக் காணாமல் அவன் தேடிக் கொண்டிருப்பது தெரிந்து அப்பாவும், அம்மாவும் பரபரப்படைந்தனர்.

புத்தக அலமாரி, மேஜை, கட்டில் என்று வீடு முழுவதும் குடைந்தும் சாவி அகப்படவில்லை.

''சுதாகர், நீதானே கடைசியாகக் கப்போர்டைப் பூட்டினாய்? அதற்குப் பிறகு யாரும் அதைத் திறக்கல்லியே. சாவியை எங்கே வைத்தாய்?'' என்று அம்மா கேட்டதும் அவன் திணறிப் போனான்.

''வந்தும்மா, இங்கேதான் வச்சேன். இல்லே,... வந்து, கப்போர்டைப் பூட்டிட்டுச் சாவியை எடுக்கல்லே...'' என்று தடுமாறினான்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. எவ்வளவு தேடியும் அந்தச் சாவி கிடைக்கவேயில்லை. அப்பா தலையில் கையை வைத்துக் கொண்டு சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டார். அவர்

பதிவு செய்திருந்த பேருந்து புறப்பட இன்னும் ஒரு மணி நேரமே இருந்தது. அவருக்கு நேர்முகத் தேர்வு இருந்ததால், அவர் எப்படியும் போய் ஆக வேண்டும்.

என்ன செய்வதென்று தெரியாமல் எல்லோரும் திகைத்திருக்க ஒரு முடிவுக்கு வந்த அப்பா, சட்டென்று எழுந்தார்.

''எப்படியும் உடனே நான் கிளம்பினால்தான் தேர்வுக்குப் போய்ச் சேர முடியும்... முன் பதிவு இல்லாமல் எல்லோருக்கும் பஸ்ஸிலே இடம் கிடைக்கிறதும் கஷ்டம். அதோட கப்பல் கட்டும் துறைமுகத்தைப் பார்ப்பதற்காக வந்த அந்த அனுமதிக் கடிதம் இல்லாமல் அங்கே போய் எதுவும் பார்க்கவும் முடியாது.. இன்னொரு சந்தர்ப்பத்திலேஎல்லோருமாப்போகலாம்... இப்ப நான் மட்டும் கிளம்பறேன்' என்றார்.

சுதாகருக்கு அந்த ஏமாற்றத்தைத் தாங்கவே முடியவில்லை. அவனது கண்களில் கண்ணீர் கட்டிவிட்டது.

அதைக் கவனித்த அப்பா, ''சுதாகர், பொறுப்பின்மைக்கு இன்னொருபெயர்தான்ஞாபகமறதி.எதையும் பொறுப்போட செய்யணும் என்ற உணர்வு நம்மகிட்டே இருந்தால், மறதி என்பதே வராது. பொறுப்பின்மையுடைய பின்விளைவுகள் எப்படி இருக்கும்னு இதிலிருந்தாவது நீ நல்லா உணர்ந்துக்கணும். இன்னொரு சந்தர்ப்பம் அமையும் போது நாம எல்லோருமாகப் போகலாம். இப்ப வருத்தப்படாதே'' என்று கூறிவிட்டுக் கிளம்பிப் போய் விட்டார்.

அப்பா அம்மாவோடு சேர்ந்து எத்தனை மகிழ்ச்சியாகப் போயிருக்கலாம். அத்தனையும் வீணாகி விட்டதே என்று நினைத்து நினைத்து வருந்தினான் அவன். ஆற்றாமையால் அவனுக்கு அழுகையே வந்துவிட்டது.

அன்று அம்மா வந்து துவைப்பதற்காக கூடையிலிருந்து அழுக்குத் துணிகளை எடுத்தபோது சுதாகரின் காற்சட்டையிலிருந்து அந்த கப்போர்டின் ஒற்றைச் சாவி டண்ணென்று கீழே விழுந்தது.

சுதாகருக்கு இப்போதுதான் அன்று சாவியைப் பையில் போட்டுக் கொண்டு தன் நண்பனைப் பார்க்கச் சென்றது நினைவுக்கு வந்தது. காலங் கடந்த பின் நினைவு வந்து என்ன பயன்?

தன் ஞாபக மறதியை நொந்தவனாகத் தலைகுனிந்து நின்ற மகனை நோக்கிய அம்மா, ''கவனக்குறைவுகளால் வரும் பிரச்னைகளை நீ உணர உனக்குக் கிடைச்ச, ஒரு சந்தர்ப்பமாக இதை நினைச்சுக்க'' என்றாள் பரிவுடன்.

அதை ஏற்றுக் கொள்வதைப் போல் தலையசைத்த சுதாகர், தன் கண்களைத் துடைத்துக்கொண்டான்.




புலி எலும்பு ஜூஸ்!

சைனாவில் இப்போது 'புலி எலும்பு ஜூஸ்' என்றாலே கிராக்கி அதிகம். புலி எலும்புத் துண்டுகளை நசுக்கித் தூளாக்கி, ஒருவகையான பானத்துடன் கலந்து அங்கு விற்பனை செய்யப்படுகிறதாம்! இதற்கென நூறு தொழிற்சாலைகள் சைனா — இந்திய எல்லையில் அமைந்துள்ளனவாம்! புலியின் எலும்புகள் ஒரு கிலோ 5000 ரூபாய் முதல் 7000 ரூபாய் வரை விற்கப்படுவதால், பணத்துக்கு ஆசைப்பட்டுச் சில இந்தியர்கள் நம் நாட்டுப் புலிகளைக் கொன்று சைனாவுக்குக் கடத்துகின்றனராம்!

ஆதாரம்: சண்டே மிட்;
தகவல்: கீதாபஞ்சு.

விசித்திரச் செய்திகள்





தேங்காய் பறிக்கும் குரங்குகள்

தாய்லாந்தில் குரங்குகளுக்கு என்று தனியாகப் பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அதில், தென்னை மரத்திலிருந்து தேங்காய்களைப் பறித்துக் கீழே போட, குரங்குகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சமீபத்தில், இதில் சுறுசுறுப்பான ஒரு குரங்கு 30 நொடிகளில் 9 தேங்காய்களைப் பறித்துப் போட்டது.

குரைக்காத நாய்கள்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நாய் வளர்ப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. காரணம், நாய்கள் 'வள், வள்' என்று குரைத்து மற்றவர்களுக்குத் தொல்லை கொடுப்பதுதான். பாதுகாப்புக்கு நாயும் வளர்க்க வேண்டும்; ஆனால் குரைக்கவும் கூடாது. என்ன செய்வது என்று யோசித்தார்கள். அதனால் நாய் வளர்ப்பவர்கள், நாய்களுக்குக் குரல்வளையில் ஆபரேஷன் செய்து குரைக்க முடியாமல் ஆக்கிவிடுகிறார்கள். அல்லது, கழுத்தில் ஒரு மின்சார பெல்ட்டைப் பொருத்துகிறார்கள். அது, குரைக்கும் போது ஷாக் கொடுத்துக் குரைக்க விடாமல் செய்து விடுகிறது.





டெலிவிஷன் சாதனை

ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில் 24 வயதான டேவிட் என்பவர் தொடர்ச்சியாக 168 மணி நேரம் (7 நாட்கள்) டெலிவிஷன் நிகழ்ச்சிகளைப் பார்த்து உலக சாதனை புரிந்திருக்கிறார். இவரது சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப் போகிறது.

காந்திஜியின் கடிதங்கள்



லண்டனில் காந்திஜி தனது முக்கிய தென்னாப்பிரிக்க சீடர்களில் ஒருவரான ஹென்றி போலக்குக்கு எழுதிய அபூர்வ கடிதங்கள், அறிக்கைகள் சிலவற்றை இந்திய அரசாங்கம் 1,51,800 பவுனுக்கு (சுமார் 30 லட்சம் ரூபாய்) ஏலம் எடுத்தது. இதில் கடுமையான போட்டி இருந்தது.


நீச்சல் சாதனை




மராட்டிய மாநிலம் 'தாணே'யைச் சேர்ந்த 15 வயது மாணவி நாயனா. 10 — ஆம் வகுப்பு படிக்கும் இவள் ஆங்கிலக் கால்வாயை 15 மணி நேரம் நீந்திக் கடந்து சாதனை புரிந்திருக்கிறாள். ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் இந்திய வீராங்கனை இவள்தான்! இதற்காக இவள் லண்டனில் பயிற்சி பெற்றாள்.

நத்தை தின்னும் போட்டி

பிரான்ஸ் நாட்டில் உள்ள பாண்ட் நகரில் நத்தை சாப்பிடும் போட்டி நடந்தது. இதில் 48 வயதான வின்சென்ட் என்பவர் 267 நத்தைகளை விழுங்கி சாம்பியன் பட்டம் பெற்றார். சென்ற ஆண்டு இவரே 232 நத்தைகளை விழுங்கிச் சாம்பியனாக இருந்தார்.




தானே சாகும் திமிங்கிலங்கள்




உணவு பற்றாக்குறை ஏற்படும் போது திமிங்கிலங்கள் கரையில் வந்து தாங்களாகவே தற்கொலை செய்து கொள்ளுகின்றன. திமிங்கிலம் வெளிக்காற்றை நுரையீரல் மூலம் சுவாசிக்கும் பிராணியாக இருந்தாலும், அதன் மிக அதிகமான உடல் அழுத்தத்தின் காரணமாக கரைக்கு வந்ததும் வயிறு நசுங்கி இறந்து விடுகின்றது. இப்படிச் சமீபத்தில் தென் அமெரிக்கா அருகே உள்ள பனிப் பிரதேசமான பாக்லாந்து தீவு கடற்கரையில் 150 திமிங்கிலங்கள் தற்கொலை செய்து கொண்டு இறந்தன.


டேய் அருண்!! எழுந்திருடா! எவ்வளவு நேரமா எழுப்பறேன்? எழுந்திரு! எழுந்திரு!! நேரமாச்சு. எழுந்திரு!
அம்மா! எவ்வளவு எழுப்பியும் அருண் எழுந்திருக்க மாட்டேங்கறன்! நல்லா தூங்கறன். அவன் தூங்கட்டும் நாம போயிடுவோம்! நேரம் ஆகிவிட்டால் தியேட்டரில் ஹவுஸ்ஃபுல்லாயிடும்!
ஹா! யார் சொன்னது நான் தூங்கறேன் என்று? அம்மா இவள் பொய் சொல்றா. நான் முழிச்சிக்கிட்டே தான் தூங்கிறேன்!!
மாலா


கால்வாய்கள் நகரம் வெனிஸ், அதன் அழகுக்காக உலகப் பிரசித்தி பெற்றது.
இங்கு சுமார் 725 ஆண்டு களுக்குமுன் மார்க்கோ போலோ என்ற சிறுவன், துறைமுகத்தில்...
இந்த எழுத்து வேடிக்கை யாக இருக்கே...
அது சீன எழுத்து...
மகத்தான பயணம் செய்த மார்க்கோபோலோ
கதை: ஆனந்தி
படம்: வினு
மார்க்கோவின் தந்தை நிகோலோ...
மார்க்கோ! நாம் கடல் வாணிபம் செய்பவர்கள். பல நாடுகளி லிருந்து கப்பல்களில் பண்டங்கள் வரும்; ஏற்றுமதியும் செய்வோம்.
ஒருநாள் மார்க்கோவின் தந்தையும் சித்தப்பாவும் கப்பலேறினார்கள்...
நானும் வருகிறேனே...
வாணிபத்துக்காகப் போகிறோம். பயணம் ஆபத்தானது; சிரமமானது...
உனக்கு இன்னும் கொஞ்சம் வயதா னதும் அழைத்துப் போகிறேன்; அம்மாவைப் பார்த்துக் கொள்...




பல ஆண்டுகள் சென்றன... தினந் தோறும் மார்க்கோபோலோ துறைமுகம் சென்று...
இன்றைக்கும் அப்பா திரும்பி வரவில்லை...
பாவம் மார்க்கோ...
மார்க்கோவின் தாயார் இறந்து விட்டாள்... உறவினர் ஒருவர்...
மார்க்கோ! தைரியமாயிரு! உன் அப்பா திரும்பி வரும் வரை நீ எங்களுடன் வசிக்கலாம்.
மேலும் சில ஆண்டு களுக்குப் பின்... கப்பலிலிருந்து இறங்கிய நிகோலோ...
நீ மார்க்கோபோலோதானே! எப்படி வளர்ந்து விட்டாய்!
நீங்கள் யார்?
உனக்கு மறந்துதான் போயிருக்கும்; நான் உன் அப்பா!
அப்பாவும் சித்தப்பாவும் அடைந்த அனுபவங்களை ஆர்வத்துடன் கேட்டான் மார்க்கோபோலோ.
ஐரோப் பாவிலிருந்து இதுவரை யாருமே சீனாவுக்குப் போனதில்லையே...
நாங்கள்தான் முதன் முதலாகப் போனோம்!




ரொம்ப நாகரிகமான மக்கள்...
அவர்களுடைய சக்கரவர்த்தி குப்ளாய்கான்!
குப்ளாய் கான் எங்களை சில பாதிரிகளை அழைத்துக் கொண்டு மறுபடி வரச் சொல்லியிருக்கிறார்... நீயும் வருகிறாயா?
நிச்சயமாக!
பயணத்துக்கு ஏற்பாடு செய்ய ஓராண்டுக்கு மேலாயிற்று... இடையில் வியாபாரம் நடந்தது...
இது சீனப்பட்டு; இதோ பர்ஷியக் கம்பளம்; ரஷ்யாவிலிருந்து கம்பளி ஆடைகள்...
மார்க்கோ போலோ தன் பதினேழாவது வயதில் தந்தை, சித்தப்பாவுடன் கப்பலேறினான்.
போய் வருகிறேன் வெனிஸ்!
ஏகர் என்ற நகரைக் கப்பல் சென்றடைந்தது... அங்கே...
கிறிஸ்துவப் பாதிரிகள் சிலரை அழைத்து வருமாறு குப்ளாய் கான் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்...


ஜெருஸலத்துக்குப் போய்ப்பாருங்கள்; யாராவது உங்களுடன் செல்ல முன் வரலாம்.
தரை மார்க்கமாக ஜெருஸலம் சென்றனர்...
ஜெருஸலம் புனித மாதா கோயில்...
இரு பாதிரிகளை உங்களுடன் அனுப்புகிறேன்; இந்தாருங்கள், புனிதத்தைலம்.
ஜெருஸலத்திலிருந்து லாயாஸ் நகரை அடைந்தபோது...
பெர்ஷியா வழியாகவா போகப்போகிறீர்கள்? அங்கே எகிப்தியரும் மங்கோலியரும் யுத்தம் செய்கிறார்களே....!
பாதிரிகள் பின் வாங்கினர்...
யுத்தத்தில் சிக்கிக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை... திரும்பிப் போகிறோம்.




பாதிரிகள் விடை பெற்றதும்...
ஹும்... குப்ளாய்கானின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாது.
பாதிரிகளைத் தேடி ஜெருசலம் போய்வர வாய்ப்புக் கிடைத்ததே. அந்த மட்டில் லாபம்!
மார்க்கோ! நீ என்ன சொல்கிறாய்? அவர்களைப் போல் நீயும் ஊர் திரும்பி விடுகிறாயா?
ஒரு நாளும் மாட்டேன். புதிய நாடுகளைப் பார்ப்பது எனக்கு ரொம்பப் பிடிக்குமே!
கிழக்கு நாடுகளைப் பற்றி ஐரோப்பியர் ஒன்றுமே அறிந்திராத காலம் அது.
நன்றாக யோசித்துச் சொல்! போகுமிடம் வெகு தூரம். கஷ்டமான பயணம்.
தந்தை ஒரு வரைபடத்தை விரித்துக் காட்டினார்.
ஐரோப்பா
ஆசியா
வெனிஸ்
கோபி பாலைவனம்
பீகிங்
சீனா
இந்தியா
பர்மா
இவ்வளவு தூரம் வந்து, இங்கு இருக்கிறோம். இன்னும் நெடுந்தூரம் போக வேண்டும்.


அந்த நாளில் விமானங்களோ இதர விசை வாகனங்களோ இல்லை.
பாலை வனங்களில் நடக்க வேண்டும்; பனி மலைச் சிகரங்களைக் கடக்க வேண்டும்.
எல்லா வற்றுக்கும் தயார்.
பல நாள் பயணத்துக்குப் பிறகு...
இது என்ன ஊற்று?
இது இரவும் பகலும் எண்ணெய் வாரிச் சொரிகிறது. விளக்கு எரிக்க உபயோகிப்போம்.
இன்றைக்கும் கப்பல்கப்பலாக எண்ணெய் ஏற்றுமதி செய்யும் பாகு எண்ணெய் வயல்களைக் கடந்து...
பாக்தாத்! என்ன அழகு!
ஆயிரத்தோரு இரவுகளின் நகரமாயிற்றே...!
இளைப்பாறி, பின்னர் பாரசிக நாட்டின் சமவெளி வழியாகச் சென்றனர்.
மார்க்கோ! அதோ பார்! பறவையை வேட்டையாடப் பழக்கி யிருக்கிறார்கள்!



பயணம் தொடர ஒரு மலைச் சரிவில்...
கொள்ளைக்காரர்கள்! ஓடு! ஓடு!
அதோ அந்தக் கோட்டைக்குள் புகுந்து தப்பலாம்!
சீக்கிரம்!
கான்ஸால்மி கோட்டை அடைக்கலம் அளித்தது. பின்னர் ஆர்மஸ் துறை முகத்தை அடைந்தனர்.
விரிசல் விட்டிருக்கிறது; இந்தக் கப்பலில் ஒரு நாள்கூடப் போக முடியாது.
வேறு வழியில்லை; தரை மார்க்கமாகத்தான் போகணும்.
நூறுமைல் திரும்பி நடந்து கெர்மன் நகரை அடைந்து...
கெர்மனிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்றனர்.
மார்க்கோ தண்ணீரை அளவாகப் பங்கிட்டுக் கொடு!



பால்க் நகரைக் கடந்த பின் உலகின் கூரை என்று கருதப் பட்ட மலைகள் மீது ஏறினார்கள்.
இந்த உயரத்தில் நெருப்புக் கூட உஷ்ணம் தரவில்லை. ..நீர் கொதிக்கிறது. ஆனால் சூடு இல்லை.
ஒரு பள்ளத் தாக்கில் வழி காட்டி உடன் வர...
இது என்ன மிருகம்?
முள்ளம்பன்றி!
இப்போது எங்கி ருக்கிறோம்?
அழகு கொழிக்கும் காஷ்மீர தேசத்தின் வட எல்லை...
மேலும் வழி நடக்க, டார்ட்டார்களு டைய மொழியைப் பேச எளிதில் கற்றுக் கொண்டான் மார்க்கோ.
கோபி பாலையில் பேய் பிசாசுகள்! ஜாக்கிரதை!
அப்பா, இவர்கள் என்னவோ சொல்கிறார்களே...
அதெல்லாம் ஒன்றுமில்லை; பயப்படாதே.
ஒருவரை ஒருவர் பிரியக் கூடாது; வழி தப்பிப் போகக் கூடாது. இது தான் முக்கியம்...


ஒருவரை ஒருவர் பிரியா மலிருக்க...
மார்க்கோ! எல்லா ஒட்டகங்களின் கழுத்திலும் மணி கட்டு...
வழியில் சில எலும்புக் கூடுகள் தென்பட...
சித்தப்பா! நம் எலும்புகளும் இப்படி இந்தப் பாலை வனத்தில்...
தைரியமாயிரு, மார்க்கோ! இரண்டு நாள் தான் ஆகியிருக்கிறது. இன்னும் ஒரு மாதம் பாலை வனத்தில் பயணம் செய்ய வேண்டும்!
அதோ தண்ணீர்! செடிகள் கூட இருக்கே!
அது கானல் நீர்!
பயணம் தொடங்கி மூன்றரை ஆண்டுகளுக்குப் பின்...
சீனாவின் எல்லையை அடைந்து விட்டோம்!




கான்சௌ நகரில்....
சீன உணவு ரொம்ப ருசி!
பயணம் தொடர்ந்தது...
அதோ! சீனப் பெருஞ்சுவர்!
அடேயப்பா! என் கற்பனையையும் விஞ்சுகிறதே!
மன்னனுக்குச் செய்தி எட்ட...
மகாகான் உங்களை வரவேற்கிறார்... எதிர் கொண்டழைக்க வந்தேன்...
மேலும் நாற்பது நாள் பயணம் செய்து ஷாண்டு அரண்மனையை அடைந்தனர். மன்னன் குப்ளாய்கான்...
நீங்கள் இருவரும் திரும்பி வந்ததில் மகிழ்ச்சி...
என் மகன் மார்க்கோபோலோ!



மார்க்கோவை மன்னனுக்குப் பிடித்துப் போனது...
நீ என்னுடனேயே எப்போதும் இருக்க வேண்டும்.
ஷாண்டு அரண்மனையில் மன்னன் கோடையில் தங்கி, வேட்டையாடுவான்.
சிறுத்தைகளைக்கூட நாய்களைப் போல் வேட்டையாடப் பழக்கி யிருக்கிறீர்களே!...
குப்ளாய்கான் தலைநகரமான (பீகிங்) கன்பாலுவுக்குத் திரும்பினான்...
அடேயப்பா! அற்புத நகர்!
மார்க்கோபோலோ, விசுவாசமுள்ள ஊழியனாகப் பணியாற்றிப் பல பதவி உயர்வுகள் பெற்றான். சில ஆண்டுகள் சென்று...
உன்னை யாங்யுபி பிரதேச ஆளுநராக நியமிக்கிறேன்!


மூன்று ஆண்டுகள் மன்னனின் பிரதிநிதியாக யாங்யுயி மாநிலத்தை மார்க்கோ ஆண்டு வந்தான்....
குப்ளாய்கான், மார்க்கோ போலோவை பர்மாவுக்குத் தமது பிரதிநிதியாக அனுப்பினார்.
இந்த நாட்டில் காகிதப் பணம் உபயோகிக்கிறார்களே, எவ்வளவு வசதி! நாளா வட்டத்தில் உலகெங்கும் இந்த ஏற்பாடு பரவும்...
பல ஆண்டுகள் சென்று பீகிங் திரும்பினான் மார்க்கோ....
ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் குறித்துக் கொண்டு வந்திருக்கிறாயே! உன்னைப் போல் விசுவாச ஊழியன் கிடைப்பது அரிது... இனி வடக்கே செல்!
பதினேழு ஆண்டுகள் பல திக்குகளுக்கும் சென்று குப்ளாய்கானின் பிரதிநிதியாகப் பணியாற்றினான் மார்க்கோ... ஒரு நாள் நிக்கோலோ...
மார்க்கோ! எனக்கு வயதாகிறது; தாய் நாடு திரும்ப வேண்டும்.
மாஃபியோ கூறினார்...
குப்ளாய்கானுக்கும் வயதாகிவிட்டது. அவருக்குப் பின் நம் நிலை என்னவாகுமோ..


குப்ளாய்கானிடம் மூவரும் வந்தனர்...
தாய் நாடு திரும்ப அனுமதி கோருகிறோம்...
என்னது!
மன்னன் அதிர்ச்சி அடைந்து...
மார்க்கோவை என் மகன் போல் நடத்தினேன். போகிறேன் என்கிறீர்களே...
உங்கள் அன்புக்கும் குறைவில்லை; வசதிகளும் மட்டில்லை. ஆனால் தாய் நாடு திரும்பி உறவினர்களைப் பார்க்க வேண்டும் என்ற எங்கள் ஏக்கம் இவற்றால் தீராது!
சில காலம் சென்று மன்னன், மார்க்கோவை அழைத்து...
நீ ஊர் திரும்பும் தருணம் நெருங்கிவிட்டது. .. ஆனால் ஒரு நிபந்தனை!
என்ன?
இந்த இளவரசியுடன் நீ துணைக்குச் சென்று, இவளைப் பாரசீக மன்னரிடம் ஒப்படைக்க வேண்டும்!
அப்படியே ஆகட்டும்!


கப்பல்களை மேற் பார்வை யிட்டான் மார்க்கோ...
இரண்டு ஆண்டு-களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை ஏற்றியாகிவிட்டதா?
ஓ!
மூவரும் தங்கள் செல்வத்தை முத்துக் களாகவும் ரத்தினங் களாகவும் மாற்றிக் கொண்டனர்.
நமது சட்டைகளின் உள்புறம் பைகள் வைத்து, அதில் இவற்றைப் பத்திரப்படுத்த வேண்டும்.
கன்பாலுவிலிருந்து கிளம்பினார்கள்..
போய் வருகிறோம் மன்னவா!
சென்றுவா, மகனே! இளவரசி பத்திரம்!
கப்பலேறினார்கள்.
பதினாலு கப்பல்களுக்குத் தலைமை தாங்கினான் மார்க்கோ!


மூன்று மாதங்களுக்குப் பிறகு ஜாவா தீவை அடைந்த போது......
தண்ணீர் நிரப்பிக் கொள்ளுங்கள்!
பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு ஆர்மஸ் துறைமுகத்தை அடைந்தார்கள்......
இனி தரை மார்க்கமாகப் பயணம்!
இளவரசி! தைரியமாய் இருங்கள்! பாரசீகத்தை நெருங்கி விட்டோம்!
பாரசீக மன்னன் முன்னிலையில்....
நாங்கள் குப்ளாய் கானின் தூதர்கள். இந்த நாட்டின் அரசியை அழைத்துவரும் பெரும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது!
நன்றி மார்க்கோ!
பாரசீகத்தில் சில நாள் தங்கி இளைப்பாற.... ஒரு நாள்......
மார்க்கோ! ஒரு துயரமான செய்தி கிடைத்திருக்கிறது. குப்ளாய்கான் மரணமடைந்தார்!


கனத்த இதயத்துடன் மூவரும் பாரசீக மன்னரிடம் விடை பெற்றனர்...
எங்கள் பணி முடிந்தது; நாங்கள் தாய்நாடு திரும்புகிறோம்...
தாய்நாடு திரும்பியும் மார்க்கோவுக்குச் சோதனை தொடர்ந்தது.
"அப்பா! என்னைக் கடற்படைத் தளபதியாக நியமித்திருக்கிறார்கள். போருக்குச் செல்கிறேன். விடை கொடுங்கள்...
ஜெனோவாவைச் சேர்ந்தவர்களுக்கும் வெனிஸ் நகரத்தாருக்கும் இடையே கடல் யுத்தம் நடந்தது.
மார்க்கோ சிறை பிடிக்கப்பட்டான்.... சிறையில்... சக கைதி உதவி செய்ய....
என் அனுபவங்களைக் கூறுகிறேன். சொல்லச் சொல்ல எழுதி வா....
N
W
E
S
MARCOPOLO
மூன்று ஆண்டுகளுக்குப் பின் மார்க்கோ விடுதலை பெற்று வெனிஸ் திரும்பினான். அவன் சுயசரிதம், உலகப் புகழ் பெற்றது.

வண்ணக் கோட்டத்தின் வானம்பாடிகள்

பூதலூர் முத்து 5

'ஆல மரத்தின் விழுதைப் போல இருந்து நான் பெற்றோருக்கு உதவுவதாக நேற்றுத்தானே தலைமை ஆசிரியர் சொன்னார். ஒரே நாளில் இந்த மனிதர் மாறிவிட்டாரே... ஒரு காரணமும் இல்லாமல் என்னை வேலையை விட்டுப் போகும்படி சொல்கிறாரே... இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும் என்று பெரியவர்கள் சொல்வார்கள்! நேற்று முழுதும் மகிழ்ச்சியில் திளைத்தேன்.. இன்று?'

ராமு நினைத்து நினைத்துக் கலங்கினான்.

அரவிந்தனுக்கு உதவியாக இருக்கும் ராமுவை எப்படியாவது அவனிடமிருந்து பிரித்துவிட வேண்டும் என்பது வேலப்பனின் திட்டம்.

அரவிந்தனும் ராமுவும் மரத்தடியில் அமர்ந்து வகுப்புப் பாடங்கள் தொடர்பாகப் பேசிக் கொண்டிருப்பார்கள். தன்னை வீழ்த்தத்தான் அவர்கள் சதி செய்கிறார்கள் என்று வேலப்பன் நினைத்துக் கொள்வான்.

பொறாமை அவனோடு உடன் பிறந்த நோய். தலைமை ஆசிரியரோ ஆசிரியர்களோ எந்த மாணவனை யாவது பாராட்டிப் பேசினால், அது அவனுக்குப் பிடிக்காது. அந்த மாணவன் மீது காழ்ப்புணர்ச்சி கொள்வான். அவன் மீது ஏதாவது பழி போடலாமா — அவனுடைய புகழுக்கு மாசு கற்பிக்கலாமா என்று திட்டம் போடுவான்.

அந்தக் குணம் அவனுடைய தந்தையிடம்இருந்தது. அதுதப்பாமல்மகனையும் தொற்றிக் கொண்டது.

ராமுவை எச்சரித்துப் பலனில்லாது போகவே அவனைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் கூறி அவனை வேலையிலிருந்து நீக்க ஏற்பாடு செய்து விட்டான் வேலப்பன்.

இவ்வளவுக்கும், விமலானந்தம் எள் என்பதற்குள் ராமு எண்ணெய் ஆகிவிடுவான்!

ரயிலில் இருந்து பஸ்ஸில் இருந்து இதழ்க் கட்டுக்களைக் கொண்டு வருவான். குறிப்பறிந்து பணியாற்றுவான்!

"முன்பு இருந்த பையன் சாணம் தெளித்திருக்கும் வாசலிலேயே போட்டு விட்டுப் போய்விடுவான். தாள் அசுத்தமாகிவிடும். இவன் வந்த பிறகு எந்தப் பிரச்னையும் இல்லை."

"வாரப் பத்திரிகைகள் கடைக்கு வந்தவுடனே வீட்டுக்கும் வந்து விடும். ராமுவின் சுறுசுறுப்பு யாருக்கும் வராது."

"இவனைப் போல் பத்துப் பேர் உங்களிடம் இருந்தால் பத்திரிகை விற்பனையில் உங்களை எவரும் வெல்ல முடியாது."

இப்படி வாடிக்கையாளர்கள் ராமுவைப் பற்றிச் சொன்ன பாராட்டுரைகளையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்ட பின்னரும் அவர் புத்தியில்லாமல் நடந்து கொண்டார். தம் பிள்ளையின் மீது கொண்ட மூர்க்கத்தனமான பாசம் அவருடைய கண்ணை மறைத்தது.

"அப்பா, இந்த ராமுப் பயல் என்னைப்பற்றி இல்லாததையும்பொல்லா

ததையும் தலைமை ஆசிரியரிடம் சொல்லி வைத்திருக்கிறான். அவர் என்னையும் என் நண்பன் ஆசைத் தம்பியையும் கவனித்துக் கொண்டே இருக்கிறார்.''

சற்றும் உண்மையில்லாத செய்தியை வேலப்பன் அவரிடம் கூறினான்.

''நம்மிடம் கூலி வேலை செய்கிற நாய்க்கு அவ்வளவு திமிரா?'' என்று கர்ஜித்தார், அவர்.

அவன் பாடங்களைப் படிக்கிற நேரம் வீணாகப் போகட்டுமே என்ற எண்ணத்தில்தான் அவனைக் கொண்டு வந்து வேலைக்குச் சேர்த்தான்.

''ராமு,எத்தனையோபேர்போட்டி போட்டுக் கொண்டு வந்தார்கள். உன்னை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. அதனால் உனக்கு வேலை தரும்படி அப்பாவிடம் சொல்லியுள்ளேன்'' என்றான்.

தந்தையால் கூடப் பிள்ளையின் மனத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

வேலப்பனின் உள் நோக்கத்தை ராமுவும் அறிந்து கொள்ளவில்லை. அவன் செய்த உதவிக்காக மகிழ்ந்து நன்றி தெரிவித்தான்.

எல்லாம் கனவாகப் போய்விட்டது!

'கடற்கரையில் சோர்ந்து போன உள்ளத்தோடு கடல் அலைகளை வெறித்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

விமலானந்தம் கொடுத்த சிறு தொகையைக் கொண்டு போய்த் தாயின் கைகளில் கொடுத்த போது எவ்வளவு மகிழ்ச்சியடைந்தான்! நான் சிற்றெறும்பு போல உழைத்தேன். வேலப்பன் கட்டெறும்பு போல் கடித்து விட்டானே!'

என்று வேதனைப்பட்டான் ராமு. அவனுடைய சிந்தனைகள் நீண்டு கொண்டே சென்றன.

யாரோ பின்புறமாக வந்து அவனுடைய தோளில் கை வைத்தார்கள். திகைத்துப் போய்த் திரும்பிப் பார்த்தான்.



அரவிந்தனும் பகத்தும் நின்று கொண்டிருந்தார்கள்.

''டேய்ராமு...ஏன் இப்படிக்கப்பல் கவிழ்ந்து போய் விட்டதைப் போலச் சோகமாக இருக்கிறாய்?'' என்று கேட்டான் அரவிந்தன்.

அவனிடம் எதைச் சொல்வது? 'எந்த உழைப்பும் இல்லாமல் பிறர் உதவியை நாடக் கூடாது' என்பது ராமுவின் பெற்றோர் சொல்லிக் கொடுத்த பாடம்!

அவனுக்கு வேலை கொடுத்து ஒரு சிறு தொகையை ஊதியமாகக் கொடுத்தால் போதும், அவன் உள்ளம் மழையைக் கண்ட மயிலாகத் துள்ளும்!

ராமு மௌனமாக இருந்தான். அரவிந்தனால் அதற்குமேல் அமைதியாக இருக்க முடியவில்லை.

''ராமு, உனக்கு ஒரு வேலை தயாராக இருக்கிறது. எங்களோடு வா!'' என்றான்.

அவன் சொன்ன அந்தச் சொற்கள் விண்ணிலிருந்து வந்த தேவதையின் குரல் போல ராமுவின் காதில் ஒலித்தது.

''அரவிந்தன், உனக்கு எல்லாம் தெரியுமா?'' ஆச்சரியத்தோடு கேட்டான்.

''நீ சொல்லாவிட்டால் எனக்கு எதுவுமே தெரியாதென்று நினைப்பா?''

அப்பா: உடைந்த பிஸ்கட் வேணாம்னு உன் பெண் அழறாளே, நிலாவைக் காட்டிச் சமாதானம் செய்யப்படாதோ?

அம்மா: காட்டினேன். அதுவும் உடைஞ்சிருக்குன்னு அழறாள்...

— க. இராமலிங்கம்.



''என் கஷ்டத்தைச் சொல்லி உன்னையும் கஷ்டப்படுத்த விரும்பவில்லை.''

''ராமு, இவ்வளவு நாள் பழகிய பின்பும் நீ இப்படி இருக்கக் கூடாது. உன் துன்பம் எதுவென்று சொன்னால்தானே நாங்கள் உடனே அதைத் துடைப்பதற்கு முடியும்?

எனக்குச் செய்தி சொன்னவர் செழியன். செய்தித்தாள் போட வழக்கமாக வரும் நீ வராமல் போகவே, வந்த பையனை அவர் விசாரித்திருக்கிறார். உடனே என் தந்தைக்கு விவரம் தெரிவித்து விட்டார். தந்தை உன்னை அழைத்துக் கொண்டு வரும்படி சொல்லியிருக்கிறார். வா போகலாம்...'' என்று அழைத்தான் அரவிந்தன்.

கடல் அலைக்கு மேல் நிலவு எழுந்து ஒளிரத் தொடங்கியது.

''ராமு! காலை நேரத்தில் பாடங்களைப் படி... மாலை நேரத்தில் எங்கள் ஆலையில் உள்ள சிறுவர் நூலகத்தை நீ கவனித்துக் கொள். உனக்கு நிறைவு தரும் முறையில் வேலையும் ஊதியமும் இருக்கும். நாளையே வந்துவிடு!''

தியாகராஜனின் சொற்களில் அன்பு நிறைந்திருந்தது. பார்வையில் கனிவு வெளிப்பட்டது.

ராமு சம்மதம் தெரிவித்தான்.

ராமுவுக்கு வேலை கிடைத்த செய்தியை அரவிந்தன் அவனுடைய நண்பர்களுக்குத் தெரிவித்து மகிழ்ந்தான். தலைமை ஆசிரியருக்கும் விவரம் தெரிவித்தான். அவர் ராமுவை அழைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

'கோமதி நியூஸ் ஏஜென்சி' களை இழந்து காட்சியளித்தது.

வேலப்பன் மூலமாக வந்து சேர்ந்த புதிய பையன் நன்றாகத் தூங்கிவிட்டு எட்டு மணிக்கு வந்தான். செய்தித்தாள்களை ஒன்பது மணிக்குப் போட்டான். அதையும் வெளியில் வீசி எறிந்து விட்டுச் சென்றான்.

''பழைய பையன் ராமு பொழுது விடிந்ததும் வந்து விடுவானே! செய்



தித்தாளைக் கவனமாகக் கொடுப்பானே... மரியாதை தெரிந்த பையன்! அவன் முகத்தில் விழிக்கவே கொடுத்து வைத்திருக்க வேண்டும்! ஏன் ஐயா அவனைக் காணோம்? பதினைந்தாம் தேதி முதல் எனக்கு வரும் செய்தித்தாளை (தினமணி) நிறுத்தி விடுங்கள்'' என்றார் ஒரு பெரியவர்.

இப்படிப் பலர் வந்து குறை சொன்னார்கள். விமலானந்தம் அவர்கள் மீது சீறி விழுந்தார். 'கோமதி நியூஸ் ஏஜென்சி' களை இழந்ததோடு கண்ணியமும் இழந்து காட்சியளித்தது.

ஆலையின் சிறுவர் நூலகத்திற்கு ராமு பொறுப்பாளனாக வந்தபின் அந்த இடத்தின் அழகு கூடியது. நூல்களையும் இதழ்களையும் அவற்றுக்குரிய நிலைப் பேழைகளில் (பீரோக்களில்) ஒழுங்காக அடுக்கி வைத்தான். நாளிதழ்களையும் அந்த வார, மாதத்துக்குரிய இதழ்களையும் படிப்பதற்குரிய மேசையில் வைத்தான். பல கைகளையும் இருக்கைகளையும் வரிசையாக இருக்கும்படி செய்தான்.

நூல்கள் கலைந்த படியோ, அழுக்குப் படும்படியோ கிடப்பதை அவன் விரும்புவதில்லை. நூல்களின் அழகிய உறைகள் கிழியாமல் காத்தான்.

நூல்களுக்குரிய பதிவேடுகளையும் அழகுபட வைத்துக் கொண்டான். செழியன் மூலமாக ஒரு நூலகரைச் சந்தித்துச் சில விவரங்கள் தெரிந்து கொண்டான்.

நூலகத்துக்கு வரும் பிள்ளைகளையும் பெற்றோர்களையும் முகம் மலர வரவேற்றான். அன்பு கனியப் பேசினான். அவர்கள் கேட்கின்ற நூல்களை ஆர்வத்தோடு எடுத்துக் கொடுத்தான்.

எளிமையும் சுத்தமும் கூடிய உடை, அழுந்த வாரப்பட்ட தலைமுடி, தெளிவான முகம், துடிப்பு நிறைந்த விழி



கள், பணிவான சொற்கள் அவனுடைய மதிப்பை உயர்த்தின.

மேசைகள் மீது சிறு குவளைகளில் வண்ணப்பூக்கள் கண்களைக் கவர்ந்தன. மணம் மிகுந்த ஊதுவத்தி அங்கு ஓர் இனிய சூழ்நிலையை உண்டாக்கியது. எல்லாம் அவனுடைய ஏற்பாடு!

அங்கு வந்த தியாகராஜன் நான்கைந்து நாட்களில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தார். இருப்பதை வைத்துச் சிறப்பாக நடத்த வேண்டும் என்ற அவருடைய கொள்கையை ராமு சரியான முறையில் செயல்படுத்தினான்!

''ராமு! நூலகம் மிகச் சிறப்பாக உள்ளது. என் பாராட்டுக்கள்! நீ படித்து முடித்ததும் நம் ஆலையிலேயே ஓர் உயர் பணிக்கு வருவதற்கான திறமையும் ஆர்வமும் உன்னிடம் உள்ளன. தொடர்ந்து பாடுபடு'' என்று கூறி அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

அந்த அரவணைப்பு மேலும் அவனுக்குத் தெம்பு அளித்தது.

பள்ளிக்கு வந்த அரவிந்தன் ஆறாம் வகுப்பு 'அ' பிரிவின் முன் நின்றவாறு அழுது கொண்டிருந்த பகத்தைப் பார்த்துக் கலக்கமடைந்தான்.

அவன் அருகே சென்று அவன் கண்ணீரைத் துடைத்து விட்டு, அவன் தோளில் ஆதரவாகக் கைகளை வைத்துக் கொண்டு,

''பகத்! ஏன் அழுது கொண்டிருக்கிறாய்? என்ன நடந்தது?'' என்று கேட்டான்.

அவன் காட்டிய இடத்தைப் பார்த்தான். இதயம் பதறியது. பகத் அங்கு வைத்திருந்த வண்ண வண்ணப் பூச்செடிகள் அடியோடு நாசம் செய்யப்பட்டிருந்தன. பூந்தொட்டிகள் உடைந்து கிடந்தன. இரண்டு நாளுக்கு முன்னர்தான் அரவிந்தன் அவற்றை வண்ணப்படமாக எடுத்திருந்தான்.

பகத் வருவதற்குச் சற்று முன்னர் வந்திருந்த தலைமை ஆசிரியர் தமிழ்முன்பன் அந்தக் காட்சியைப் பார்த்து வேதனை அடைந்திருந்தார். காவலரைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"பகத், அழாதே! இன்று மாலைக்குள்ளேயே இந்த இடத்தில் மறுபடி அழகிய பூச்செடிகளை வைக்க நான் ஏற்பாடு செய்கிறேன். இந்தச் செயலைச் செய்தவர்கள் யார் என்பதையும் விரைவில் கண்டுபிடிப்போம்" என்று ஆறுதல் சொன்னவர் தூய்மைக் குழுவைச் சேர்ந்த மாணவர்களை அழைத்து அந்த இடத்தைச் சுத்தம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

அரவிந்தன் அவருடைய அறைக்குச் சென்று அவரைச் சந்தித்தான்.

"சார்! காவல்காரர் என்ன சொன்னார்?"

"அவருடைய பையனை இங்கே நிறுத்தி விட்டு அவர் குளியல் அறைக்குச் சென்றிருக்கிறார். அவர் குளித்து விட்டு வருவதற்குள் இரண்டு பேர் வந்து பையனைப் பயமுறுத்தி ஓட வைத்து விட்டு அந்தச் செடிகளையெல்லாம் பிடுங்கி எறிந்து தொட்டிகளை உடைத்துப் போட்டிருக்கிறார்கள். அவர் வருவதைப் பார்த்து விட்டு அவர்கள் ஏறிக் குதித்து ஓடியிருக்கிறார்கள்."

"அவர்கள் சீருடையில் இருந்ததாகச் சொன்னாரா?"

"சீருடை அணியவில்லை. ஒருவன் சிவப்புக் கோடு போட்ட சட்டை போட்டிருந்ததாகவும் அடுத்தவன் மஞ்சள் நிறத்தில் சட்டை போட்டிருந்ததாகவும் சொல்கிறார். கால் சட்டை நிறம் நீலம். அவர்கள் ஓடும் போது இந்தப் பேனா தவறி விழுந்திருக்கிறது...."

அந்தப் பேனாவை அரவிந்தன் கவனித்தான். 'ஹீரோ' பேனா. அதில் 'ஜெ. பீட்டர்' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

"அரவிந்தன்! நம் பள்ளியில் பீட்டர் என்ற பெயரில் மூவர் இருக்கிறார்கள். ஜெ. பீட்டர் என்பது உன்னுடன் பழகி வரும் பையன் பெயர்.. சரிதானே?"

"ஆமாம் சார்... ஆனால் அவன் இது போன்ற செயல்களைச் செய்ய மாட்டான். அவன் பள்ளியின் மேன்மைக்காகப் பாடுபடுபவன்"

"அது சரி... அவன் பேனா எப்படி இங்கு வந்தது?"

"இதில் ஏதோ ஏமாற்று வேலை இருக்கிறது... கண்டுபிடிக்க வேண்டும் சார்!" — சொல்லி விட்டு வகுப்புக்குச் சென்றான் அரவிந்தன்.

'ஆய்வுக்கூடப் பொருட்கள், பகத் சைக்கிள், பையன்களின் டைனமோ, விளக்கு, மணி — திருட்டு! இப்போது பூஞ்செடிகள் நாசம்! எங்கேயோ ஒரு களை வளர்ந்து வருகிறது — அதைக் கண்டுபிடித்துக் களைய வேண்டும்'

தமிழன்பன் முனைப்புடன் சிந்தித்தார்.

தமிழன்பன் பள்ளிக்கூட வளர்ச்சி — முன்னேற்றம் தொடர்பான விஷயங்களை ஆசிரியர்களுடன் விவாதித்துக் கொண்டிருந்தார்.

அப்போது முகம்மது அலி பதற்றத்தோடு வந்து அவர் முன்னால் நின்றான்.

(தொடரும்)

என்ன பரிசு?

அவன்: கவிதைப் போட்டிக்கு 'ஆறு' கவிதை அனுப்பினியே, பரிசு கிடைத்ததா...?


இவன்: உம்...! 'ஆறு'தல் பரிசு கிடைத்தது...

— ராம செந்தில்குமார்.




உங்களுக்குத் தெரியுமா?

அக்கடியன் ..பிளாகேச்சர் எனும் பறவை பாம்புகள் ஏறமுடியாதபடி இலைகளினிடையே ஒரு அடி நீளம் உள்ள வால் அமைப்பு வைத்துக் கூடு கட்டும்.





ஒயிட் காரன் - யூ என்ற புறா இனம் பின்புறமும் வேகமாகப் பறக்கவல்லது.




மெலி எனும் பறவை தன் முட்டைகளைப் பொரிக்க உளுத்துப்போன மரபொந்துகளில் வைத்து, வெப்பத்தை அலகினால் கணக்கிடும்.



ஹாக்குக்-கூ என்ற பறவை மற்ற பறவைகளின் கூட்டில்தான் முட்டையிடும். அதற்கு முன் கூட்டில் இருக்கும் முட்டைகளைக் கவனித்து அதே நிறத்தில் முட்டையிடும்.

க்யுலே-மாட் எனும் பறவைகள் ஒரே ஒரு முட்டையிடும். தன் இன முட்டைகளுக்கிடையே தன் முட்டையை அடையாளம் காண தனித்தனி நிறமும், தனிரக புள்ளிகளையும் கொண்டிருக்கும்.



போலந்துக் கதை

ஜூதுமும் விறகு வெட்டியும்

தமிழில் - சந்திரநாத்

முன்னொரு காலத்தில் போலந்து நாட்டில் ஒரு மலையின் அடிவாரத்தில், ஓர் ஏழை வசித்து வந்தான்.

அவன் நல்லவன். சூதுவாது தெரியாதவன். வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பி விடுவான்.

மலையின் அடிவாரத்தில் இருந்த தன் மூதாதையர்களின் கிராமத்திலே, ஒரு குடிசையில் அவன் வாழ்ந்து வந்தான்.

அந்த மலையிலும் அவன் சரிவுகளிலும் பலமைல் தூரத்திற்குப் பெரிய காடு மண்டிக் கிடந்தது.

பெரிய பெரிய மரங்களும், புதர்களும், குகைகளும், மூங்கில்களுமாக அந்த வனம் எங்கும் நிறைந்திருந்தன.

ஏழையின் பெற்றோர்கள் அந்தக் கானகத்தில் விறகு வெட்டிச் சேர்த்து எடுத்து வந்து சந்தையில் விற்றார்கள். இவனும் அவர்களைப் பின்பற்றி, தினமும் மலை ஏறிச் சென்று விறகு வெட்டி வந்து சந்தையில் விற்று வந்தான்.

அவன் மனைவி தினமும் காலையில் அவனுடைய கோடரி, கயிறு, அரிவாள் எல்லாவற்றையும் எடுத்துத் தயாராக வைப்பாள். தேநீர் சுடச் சுடத் தயாரித்துக் கொடுப்பாள். மதிய உணவிற்காகக் கொஞ்சம் ரொட்டியும் உப்பும் கட்டிக் கொடுப்பாள்.

பகல் முழுவதும் விறகு வெட்டி கானகத்தில் ஓயாமல் உழைப்பான். வெட்டிய விறகைச் சந்தையில் விற்று விட்டு வரும் போது மாலை மங்கி விடும். அவன் மனைவி அவனுக்குச் சுடச்சுடச் சமையல் செய்து வைத்திருப்பாள்.

கணப்படியில் உட்கார்ந்து இருவரும் சந்தோஷமாகச் சாப்பிடுவார்கள். சிரித்து மகிழ்வார்கள்.

''நீ ஒவ்வொரு நாளும் கானகத்திலிருந்து திரும்பி வருகிறவரை எனக்கு வயிற்றைக் கலக்கிக் கொண்டே இருக்கிறது'' என்பாள் மனைவி. ''அதுவும் காட்டிலிருக்கிறதே குள்ளநரி, அது மிக மோசமான பிராணி. மகா தந்திரசாலி. அது உன்னை ஏதாவது செய்து விடுமோ என்று பயமாக இருக்கிறது'' என்பாள்.

''அவைகளால் எனக்கு ஒரு துன்பமும் நேராது. குள்ளநரி என் அருமைத் தோழன். எனக்கு ஏதாவது ஆபத்து வந்தால் அது உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றும்'' — என்பான் விறகு வெட்டி.

கானகத்தில் உள்ள எந்தப் பிராணியாலும் விறகுவெட்டிக்கு எந்தத் தீங்கும் நேரவில்லை. குள்ளநரி அவனிடம் சிநேகமாகவே இருந்தது. அவன் அதனுடன் தன் மதிய உணவைப் பகிர்ந்து கொண்டதும் உண்டு.

''வா, வந்து எடுத்துக் கொள். உனக்கும் சேர்த்துத்தான் என் மனைவி. கட்டிக் கொடுத்திருக்கிறாள்'' என்று குள்ளநரியை அழைப்பான் அவன்.

''நன்றி, விறகுவெட்டி மாமா ரொட்டி மிக நன்றாக இருக்கிறது'' என்று சொல்லும் குள்ளநரி.

''அப்படியா? அப்படியானால் இன்னொன்று எடுத்துக் கொள்'' என்று கொடுப்பான் விறகு வெட்டி. ''உன் மனைவி மக்களுக்குக் கொண்டு போய்க் கொடு'' என்பான்.

குள்ளநரி பதிலுக்குச் சில கொட்டைகளையும் பழங்களையும் கிழங்கு

களையும் கொண்டு வந்து கொடுக்கும். "மாமிக்குப் பிடிக்கும். இவைகளைப்பார்த்தால்மிகவும்சந்தோஷப் படுவாள்" என்று சொல்லும்.

அன்றிரவு, மனைவி சொல்லுவாள். "எல்லாம் சரிதான். பழங்களும் கொட்டைகளும் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனாலும் நரிதானே அது; அதுவும் குள்ளநரி. நீ அதனிடம் ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும்."

2

ஒருநாள் இரவு அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது காற்று 'விர்ர்' என்று அடித்தது. ஜன்னல் கதவுகள் எல்லாம் படபடவென்று அடித்துக் கொண்டன.

திடீரென்று பெரிய பெரிய கரிய நிற மேகங்கள் எங்கிருந்தோ படை எடுத்து வந்தன. மின்னல் 'பளீர் பளீர்' என்று சாட்டையடி போல விழுந்தன. அதைத் தொடர்ந்து இடி பெரிய உருளைகள் உருளுவது போல உருண்டன.

சற்றைக்கெல்லாம் மழை 'சோ' என்று கொட்டத் தொடங்கி விட்டது. மழையுடன் காற்றும் சேர்ந்து கொண்டது. கிராமத்தையே வேரோடு பெயர்த்துக் கொண்டு போக விரும்பியது போலச் சூறாவளிக் காற்று வீசியது.

விறகு வெட்டி எல்லா ஜன்னல்களையும் சாத்தி விட்டான். ஒரே ஒரு ஜன்னலை மட்டும் திறந்து வைத்துக் கொண்டு இருவரும் உட்கார்ந்து வெளியே இயற்கை ஆடுகிற கோரத் தாண்டவத்தை அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மின்னலின் ஒளியில், தூரத்தில், அவர்களைக் காப்பாற்றி வந்த மலையும் கானகமும் தெரிந்தன. மலையில் மடமடவென்று மரங்கள் முறிந்து விழும் ஓசை கேட்டது. பாறைகள் உருண்டு விழும் சத்தமும் கேட்டது.

"பாவம். அங்கே உள்ள பிராணிகள் எல்லாம் என் நண்பர்கள். அவர்கள் இப்போது எப்படித் தவிக்கிறார்களோ?" என்றான் விறகு வெட்டி. அவன் மனமெல்லாம் நண்பன்





குள்ளநரி மீதே இருந்தது.

இரண்டு நாட்கள் பேய் மழை விடாமல் பெய்தது. விறகு வெட்டியால் வேலைக்குச் செல்ல முடியவில்லை.

மூன்றாம் நாள் மழை நின்று வானம் வெளுத்தது. விறகு வெட்டி கோடரி, கயிறு, கடப்பாரைகளுடன் கிளம்பினான்.

வழி எங்கும் புயலால் ஏற்பட்ட சேதம் நன்றாகத் தெரிந்தது. பாறைகள் மலைமீதிருந்து உருண்டிருந்தன. புதர்கள் அழிந்திருந்தன.

விறகுவெட்டி ஒரு மூங்கில் புதரைத் தாண்டும்போது, "ஐயா, ஐயா, உதவி தேவை. கொஞ்சம் நில்லுங்கள்" என்று யாரோ ஈனசுரத்தில் கூப்பிடுவது கேட்டது.

"யார் கூப்பிட்டது?" என்று திடுக்கிட்டு நின்று நாலாபுறமும் பார்த்தான் விறகுவெட்டி. யாரையும் காணவில்லை.

"யார் பேசியது இப்போது? எங்கே இருக்கிறாய் நீ?" என்று கூவினான் விறகுவெட்டி. யாரையும் காணவில்லை.

"நான்தான் பேசினேன். இதோ இந்தப் புதருக்குள் உள்ள குகைக்குள் கிடக்கிறேன். இரண்டு நாட்களாகப் பட்டினி. பசியினால் பேச்சே வர மாட்டேன் என்கிறது. நேற்று முன் தினம் மழைக்காக இங்கே வந்து ஒண்டினேன். ஒரு பெரிய பாறை உருண்டு வந்து வாசலை அடைத்து விட்டது. வெளியே வர முடியாமல் தவிக்கிறேன. பாறையை நெம்பி நகர்த்தி என்னை விடுதலை செய்" என்று கெஞ்சியது குரல்.

"நீ யார் என்று சொல்லவில்லையே" என்று கேட்டான் விறகு வெட்டி.

"அதை அப்புறம் நீயே தெரிந்து கொள்வாய். முதலில் கஷ்டத்தில் உள்ள எனக்கு உதவி செய்" என்றது குரல்.


"சரி. உதவி செய்தால் எனக்கு என்ன தருவாய்?" என்று கேட்டான் விறகு வெட்டி.

"உலக வழக்கில் உள்ளபடி கூலி தருவேன்" என்றது குரல். "இது சத்தியம்" என்றது.

விறகு வெட்டி அரும்பாடுபட்டு புதரை வெட்டி பாறையை நெம்பி அகற்றினான். பாறை உருண்டு பக்கத்தில் விழுந்தது. புதருக்குள்ளிருந்து ஒரு பூதம் வெளிப்பட்டு வந்தது.

பூதத்தைப் பார்த்ததும் விறகு வெட்டிக்கு ஒரே பயமாகப் போய் விட்டது. ஆனால் அந்தப் பயத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "சரி, நீ இட்ட வேலையை உனக்குத் திருப்தியான முறையில் செய்து முடித்து விட்டேன். வாக்களித்தபடி கூலியைக் கொடுத்தால், என் வழியைப் பார்த்துக் கொண்டு போவேன்" என்றான்.

"கூலிதானே? நிச்சயமாகத் தருகிறேன். அதுவும் எப்படித் தெரியுமா? உலக வழக்கப்படி உதவி செய்கிறவர்களுக்கு இந்த உலகம் எப்படி 'கூலி' தருகிறதோ, அப்படி" என்று சொல்லி விட்டு, பூதம், அவன் மீது பாய்ந்து 'லபக்'கென்று பற்றிக் கொண்டு கடகடவென்று சிரித்தது.



''என்னை என்ன செய்யப் போகிறாய்?'' என்று பதறினான் விறகு வெட்டி.

''உன்னையா? என் வயிற்றிலே குடைகிற பயங்கரப் பசிக்கு இரையாக்கிக் கொள்ளப் போகிறேன்'' என்றது பூதம்.

''இது சரியல்ல'' என்று கூவினான் விறகு வெட்டி. ''இது நீதியல்ல. நான் உனக்கு எவ்வளவு பெரிய உபகாரம் செய்தேன் என்பதை மறந்து விட்டாய்'' என்றான்.

''உபகாரம் செய்தவர்களுக்கே அபகாரம் செய்வதுதானே உலக வழக்கம். ஆகவே உன்னை விழுங்கி பசி தீர்ப்பதில் எந்தத் தப்பும் இல்லை'' என்றது பூதம்.

''உலகம் இதை ஒப்புக் கொள்ளாது. வேண்டுமானால் இங்கே வேறு ஒருவரைக் கேட்டுப் பார்க்கலாம். அவர் இது நீதிதான் என்று சொன்னால் பேஷாக என்னைத் தின்று பசி ஆறிக் கொள்'' என்றான் விறகு வெட்டி.

''சரி, நீ செய்த உதவிக்காக இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்கிறேன். வா. அதோ அந்த மரத்தடியில் ஒரு குதிரை நிற்கிறது. அதைக் கேட்போம்'' என்று விறகு வெட்டியுடன் நடந்தது பூதம்.

3

குதிரை புல்வெளியின் ஓரத்தில் நின்று கொண்டிருந்தது. ஆனால் புல்லைக் கடித்துத் தின்னக் கூட அதன் உடலில் வலு இருக்கவில்லை. வயதான குதிரை அது. தொண்டு கிழமாகி விட்ட குதிரை.

''யாருடைய காலடி ஓசையோ கேட்கிறதே. யார் அது?'' என்று ஈன சுரத்தில் கேட்டது அது. ''எனக்கு இப்போதெல்லாம் கண்ணும் சரியாகத் தெரிவதில்லை'' என்றது.

''ஒரு விறகு வெட்டியும் ஒரு பூதமும் வந்திருக்கிறோம் உன்னிடம் நியாயம் கேட்க'' என்றது பூதம்.

'பூதமா?' என்று பயந்தது குதிரை.

பூதம் நடந்ததை எல்லாம் குதிரையிடம் சொல்லிற்று. ''நீயே சொல்லு.

உலகத்திலே இப்போதுள்ள நீதி என்ன?'' என்று கேட்டது.

''நீ சொல்வது சரிதான்'' என்றது குதிரை. ''இப்போது என்னையே எடுத்துக் கொள். நானும் ஒரு காலத்தில் இந்த விறகு வெட்டியைப் போல திடமாகத்தான் இருந்தேன். என் யஜமானுக்கு காலம் முழுவதும் மாடாக உழைத்தேன். அவனை எத்தனையோ ஆபத்துகளிலிருந்து காப்பாற்றினேன். அவன் குடும்பம் முழுவதையும் வண்டியில் ஏற்றி இழுத்துக் கொண்டு போனேன். எனக்கு வயதானதும் அதை எல்லாம் செய்ய முடியவில்லை. வயதானால் வேலை செய்ய முடியுமா, சொல்'' என்று கேட்டது குதிரை.


''முடியாதுதான்'' என்றான் விறகு வெட்டி.

''காலமெல்லாம் தனக்காக உழைத்த உண்மை ஊழியனான என்னை, என் முதுமையில் என்னைக் காப்பாற்ற வேண்டியதுதானே அவன் கடமை? ஆனால் அவன் என்ன செய்தான் தெரியுமா? ஒருநாள் நான் அவன் குழந்தையைப் பள்ளிக்கூடத்திற்கு இழுத்துச் செல்ல முடியாமல் விழுந்து விட்டேன். உடனே ஆட்களைக் கூப்பிட்டு, ''இந்தக் கிழட்டுச் சனியன் இனி உதவாது. இதற்கு இனியும் தண்டத் தீனி போட நான் தயாராக இல்லை. இதைக் கொண்டு போய்க் காட்டில் விட்டு விட்டு வந்து விடுங்கள். புலியோ, சிங்கமோ அடித்துத் தின்னட்டும்'' என்று விரட்டி விட்டான். இதுதான் உலக வழக்கப்படி இன்றுள்ள நீதி. ஆகவே உபகாரம் செய்த உன்னை பூதம் தின்று விடுவதாகச் சொன்னதில் எந்தத் தவறும் இல்லை'' என்றது குதிரை. இவ்வளவு நீண்ட தீர்ப்பை வழங்கி விட்டு அது களைத்துப் போய்க் கீழே படுத்துக் கொண்டது.

''ஆகவே நீ பேசாமல் என் பின்னால் வர வேண்டியதுதான்'' என்று விறகு வெட்டியை இழுத்துக் கொண்டு மேலே நடந்தது பூதம்.

சற்று தூரம் போனதும் விறகு







வெட்டி, ''இதோ பார் பூதமே,எதை யும் ஒரே ஒருவர் பேச்சைக் கொண்டு தீர்மானிக்கக் கூடாது. இன்னும் ஒரு வரைக் கேட்போம். அவரும் இது தான் நீதி என்று சொல்லி விட்டால் என் விதிப்படி நடக்கட்டும். கொஞ் சம் தயை செய்'' என்றான்.

பூதம் மனமிரங்கி, ''சரி'' என்று சம்மதித்தது. இருவரும் இரண்டாவது நீதிபதியாக யார் கிடைப்பார்கள் என்று தேடிக் கொண்டு போனார் கள்.

சற்று தூரம் போனதும், ஒரு வய தான நாய் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அதனருகில் சென்றார்கள்.

விறகு வெட்டி அதனிடம் நடந்ததை எல்லாம் சொன்னான். ''நீ வயதான வன். உலக அநுபவமுள்ளவன். குதிரைகளைப் போல கண் மறைப் புக்குள் இருந்து ஒரே வழியிலே மட் டும் சென்றவன் அல்ல. நீ சொல். இந்த பூதம் சொல்வது நீதியா?'' என்று கேட்டான்.

நாய் இதற்கு உடனே பதில் சொல்ல வில்லை. சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தது. பிறகு நிமிர்ந்து பார்த்துச் சொல்லிற்று.

''எனக்கு இப்போது வயதாகி விட் டது. ஆனால் நானும் ஒரு காலத்தில் உன்னைப் போல நல்ல தேக திடத்து டன்தான் சுறுசுறுப்பாக இருந்தேன். சந்தையிலே ஒரு பணக்காரப் பெண் விலைக்கு வாங்கிக் கொண்டு போய் காவலுக்கு வைத்துக் கொண்டாள். இரவும் பகலும் தூங்காமல் பல ஆண்டு காலம் அவளையும் அவள் மாளிகையையும் காவல் காத்தேன். உண்மையான நன்றியுடன் இருந் தேன். என்ன பிரயோசனம்! ஒரு நாள் எனக்கும் கிழடு தட்டிற்று. குலைக்கக்கூடசக்தியற்றுப்போயிற்று. 'இனி நீ பிரயோசனமில்லை!' என்று சொல்லி, பாவி, என்னை விரட்டி விட்டாள். இதுதானப்பா உலகத் திலே இன்றுள்ள நீதி. இதன்படி பார்த்தால் பூதம் சொல்வதில் தவறே இல்லை'' என்றது நாய்.

''பலே, பலே — நீதான் புத்திசாலி'' என்று நாயைப் பாராட்டியது பூதம். ''நன்றி நாயாரே'' என்று சொல்லி

விட்டு "வா" என்று விறகு வெட்டியை இழுத்துக் கொண்டு போயிற்று.

"நமக்கு நீதிபதியாகக் கிடைத்த இரண்டு பிராணிகளும் மனிதர்களுடன் பழகியவை. அவைகள் வேறு எப்படித் தீர்ப்பளித்திருக்க முடியும்! எல்லாம் நம் விதி" என்று உள்ளூர வருந்தியவாறு பூதத்தின் பின்னால் போனான் விறகு வெட்டி.

5

சற்று தூரம் போனதும் அவன் தினமும் குள்ள நரிக்கு ஆகாரம் கொடுக்கும் ஓடைக் கரை வந்தது.

குள்ள நரி அங்கே உட்கார்ந்து வெயில் காய்ந்து கொண்டிருந்தது. தூரத்தில் விறகு வெட்டியைப் பார்த்ததும் மாமா என்று கத்த அது வாயைத் திறந்தது.

ஆனால் மாமாவின் முகம் வாடிக்கிடப்பதையும் பக்கத்திலே ஒரு பூதம் வருவதையும் பார்த்ததும், 'ஓ, ஏதோ விபரீதம் நடந்து விட்டது. மாமா ஏதோ ஆபத்தில் மாட்டிக் கொண்டு விட்டார். பொறுத்திருந்து பார்ப்போம்' என்று வாயை மூடிக் கொண்டது.

விறகு வெட்டியும் பூதமும் குள்ள நரியின் அருகில் வந்தார்கள். குள்ள நரியைப் பார்த்ததும் விறகு வெட்டியும் மகிழ்ச்சி அடைந்தான்.

உடனே அவன், "பூதமே, எதையும் மூன்று முறை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே எனக்குக் கடைசியாக இன்னொரு சந்தர்ப்பம் கொடு. இதோ இந்தக் குள்ள நரியிடம் நம் வழக்கைச் சொல்வோம். அவரும் உன் பக்கம் தீர்ப்பு சொல்லி விட்டால், பிறகு உன் இஷ்டம் போல் செய்து கொள்" என்றான்.

"சரி, ஆனால் இதுதான் கடைசித் தடவை" என்றது பூதம்.

விறகு வெட்டி குள்ளநரியிடம் நடந்ததைஎல்லாம்சொன்னான். சொல்லி விட்டு, "குள்ள நரியே, நீ மகாபுத்திசாலி. உன் தீர்ப்பு என்ன?" என்று கேட்டான்.

குள்ள நரி வழக்கை நன்றாக கேட்டுத் தெரிந்து கொண்டதும் பூதத்தைத் தனியாக அழைத்துச் சென்று அதனிடம் ரகசியமாக ஏதோ பேசிற்று.

பிறகு விறகு வெட்டியைத் தனியாக அழைத்துச் சென்று அவனிடமும் ரகசியமாகப் பேசிற்று.

பிறகு இருவரிடமும், "இந்த வழக்கை என்னால் நம்பவே முடியவில்லை. முக்கியமாக பூதத்தால் கூட புரட்ட முடியாத அவ்வளவு பெரிய பாறாங்கல்லை இந்த மனிதன் புரட்டினான் என்பதை நான் எப்படி நம்புவது? முதலில் நாம் எல்லோரும் சம்பவம் நடந்த இடத்திற்குப் போவோம். நடந்ததை நடந்தபடி காட்டுங்கள். பிறகு என் தீர்ப்பைச் சொல்கிறேன்" என்றது.

"சரி, வா" என்று முன்னால் நடந்தது பூதம். மூவரும் பழைய மூங்கில் புதருகே வந்து சேர்ந்தார்கள்.

"நீ எங்கே நின்றாயோ, அங்கே போய் நின்று கொள்" என்றது குள்ள நரி விறகு வெட்டியிடம். அவன்,தான் நகர்த்தின பெரிய பாறையினருகே போய் நின்றான்.


"பூதமே, நீ எங்கே எப்படி இருந்தாய்?"

ஏன் நெளிகிறான்?

"நம்ம ராமு ஏன் நெளிஞ்சு, நெளிஞ்சு வர்றான்...?"

"அவன் தான் 'புத்தகப் புழு' வாச்சே...!"

— வலங்கை ஜி. ராஜசேகர்.





பூதம், ''இதோ, இங்கே இப் படி'' என்று சொல்லிக் கொண்டே புதருக்குள் போய் குகைக்குள் படுத் துக் கொண்டு காட்டியது.

அடுத்த கணம் குள்ளநரி லேசாக தன் வாலை அசைத்து விறகு வெட் டிக்கு ஒரு சமிக்ஞை கொடுத்தது. அது ரகசியமாகச் சொல்லியிருந்தது போல, உடனே விறகு வெட்டி அந்தப் பாறையை நகர்த்தி குகை வாயிலை மூடி விட்டான். ''இதோ இந்தப் பாறாங்கல் இப்படிக் கிடந்தது'' என்று சொல்லிக் கொண்டே கல் லால் குகை வாயிலை மூடி விட்டு, கடகடவென்று சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறாய்? அடுத்தாற் போல பாறையை அகற்றியும் காட்டு'' என்று உள்ளிருந்து கூவிற்று பூதம்.

''நான் ஏன் உன்னை விடுவிக்க வேண்டும்? ஒருநாளும் அந்தத் தவறை மீண்டும் செய்ய மாட்டேன்'' என் றான் விறகு வெட்டி.

குகையில் அடைபட்ட பூதம் பரிதா பமாக ''இது அநீதி'' என்று கதறியது.

''இல்லை. இதுதான் உலகத்திலே இப்போது உள்ள நீதி'' என்றான் விறகு வெட்டி.


''அதனுடன் இனி என்ன பேச்சு? நாம் போகலாம் வா'' என்று அவனை அழைத்துக் கொண்டு நடந் தது குள்ளநரி.


சற்று தூரம் வந்ததும், குள்ளநரி, ''மாமா, உன்னை இந்த ஆபத்திலி ருந்து காப்பாற்றினால் என்ன தரு வாய் என்று உன்னிடம் ரகசியமாகக் கேட்டேனே — நினைவிருக்கிறதா?'' என்று கேட்டது.

''நன்றாக நினைவிருக்கிறது. ஒவ் வொரு திங்கட் கிழமையும் ஒரு புது கேக் தர வேண்டும் என்றாய்'' என்றான் விறகு வெட்டி.

''உலக வழக்கப்படி அதைக் கொடுக்காமல் இருந்து விடாதே — மாமியின் கேக் என்றால் எனக்கு உயிர்'' என்று சிரித்தது குள்ளநரி.

''நமக்கு இந்த உலக வழக்கம், வேண்டாம். நம் வழக்கப்படியே நடப் போம். நியாயப்படி நடப்போம். வாரா வாரம் நிச்சயமாக 'கேக்' உனக்குக் கிடைக்கும்'' என்றான் விறகு வெட்டி.


ஒரு டம்ளர் தண்ணி கொண்டா
இன்னொரு டம்ளர்!
இன்னொரு டம்ளர்
இந்தாங்க எத்தனை டம்ளர் வேணுமோ புடிச்சுக்குங்க!
மாலா-


ஹலோ! கழுதை மாமா வாங்க வாங்க!
இந்தாங்க கூல் ட்ரிங் சாப்பிடுங்க!
நம்ம தயாரிப்பு! டேஸ்டா இருக்கா?
ட்ரிங்கை விட இது டேஸ்டா இருக்கே!
மாலா-



சின்னஞ் சிறு வயதில் சித்திர மேதை

– கமலநாதன்

எட்மண்ட் தாமஸ் கிளின்ட்.

இதுதான் அந்தப் பிறவிச் சித்திர மேதையின் பெயர். ஏழாவது வயதின் ஆண்டு நிறைவைக் காணாமலேயே இறைவனடி சேர்ந்துவிட்ட அந்தப் பாலகன் அதற்குள்ளாகவே அவசர அவசரமாக வரைந்த சித்திரங்களின் எண்ணிக்கை இருபதாயிரத்திற்கும் மேல்!

பிறவி மேதையான கிளின்ட்டுக்கு, தனக்கு இறைவன் அளித்த ஆயுளின் அளவும் பிறந்த உடனேயே தெரிந்திருக்கும் போலிருக்கிறது! அதனால் தான், தான் மறைவதற்குள் ஏதாவது அற்புதம் செய்து காட்டித் தனது பெயரை என்றும் அழியாதபடி நிலை நாட்டிக்கொள்ள ஆயிரக் கணக்கான சித்திரங்களை வரைந்து வைத்து விட்டுப் போயிருக்கிறது இந்தக் குழந்தை.

சித்திரங்களில் ஆரம்பித்து, தனது வாழ்க்கையைச் சித்திரமாகவே மாற்றி விட்ட அந்த சிறுவன் வரைந்த சித்திரங்களின் கண்காட்சி, அண்மையில் திருவனந்தபுரத்தில் நடந்தது. இதனை ஏற்பாடு செய்தது ஸ்டேட் பாங்க் ஆஃப் திருவாங்கூர்.

கண்காட்சியில் –

புலியிடம் பால் குடிக்கும் குட்டிகள் – அபிமன்யு – அடுக்கடுக்காக வெகு உயரத்திற்குக் குவிந்து கிடக்கும் கொழுக்கட்டையைத் தின்னும் பிள்ளையார் – ஒற்றையடிப் பாதையின் முடிவில் ஒரு வீடு, அதன் ஒரு புறம் வயல்வெளி, மற்றொரு புறம்



காயல், அதில் போகும் ஓடம். — நம்மையறியாமல் தண்ணீரை அள்ளிக் கையை நீட்ட வைக்கும் மலையருவி — திரைச் சீலையின் உயரத்தைத் தாண்டித் தெரியும் கதகளி ஆடுபவர்களின் தலைகள் — வில் ஒடிந்து தேரின் சக்கரம் முறிந்து சோகமாக இருக்கும் கர்ணன் — பிள்ளையாரின் வாயில் கொழுக்கட்டையைத் திணிக்கும் கிருஷ்ணன் (நம்மை நகைக்க வைக்கிறான்) — கடுந்தவம் புரியும் சிவன் — மூஞ்சூறு வாகனத்தின் மீது ஜெட் வேகத்தில் சவாரி செய்யும் கணபதி — எலும்புத் துண்டங்களைக் கனவு காணும் நாய் — இன்னும் எத்தனை எத்தனையோ சித்திரங்கள்!

இடது கையால் கிளின்ட் வரைந்த சித்திரங்களும் கண்காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன.

அந்திவானத்தின் அழகைப் பிரதிபலிக்கும் அஸ்தமனச் சூரியனும், கணபதியும் பல சித்திரங்களில் இடம் பெற்றிருக்கின்றன. அடுத்து, அதிகமாகக் காணப்படுவது அபிமன்யுவின் படங்களே.

இதுதான் கிளின்ட் என்ற தலைப்புடன், கண்காட்சியின் நடுவில் வெள்ளை வெளேரென்று பைஜாமா, ஜிப்பாவும் அதன் மேல் ஜிகினா வேலை செய்த வெல்வெட் கோட்டும் அணிந்து குறுகுறுத்த கண்களுடன் இரண்டு பற்களும்தெரியக் காட்சியளிக்கும் அந்தப் பிஞ்சுக் குழந்தைச் சித்திர மேதையைக் காண்கிறோம்.

கண்காட்சியில் பங்கு கொண்ட கிளின்டின் தந்தையான எம். பி. ஜோஸப்பையும், தாய் சின்னம்மாவையும் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எம். பி. ஜோஸப் கிளின்டைப் பற்றிச் சொல்லியதாவது: —

''கிளின்ட் பிறக்கும் போதே சராசரிக் குழந்தையைக் காட்டிலும் சற்று அதிக வளர்ச்சியும் எடையும் கூடிய குழந்தையாகவே பிறந்தான். தவழும் பிராயத்திலேயே அவனுக்குச் சித்திரங்கள், வரைவதில் ஆர்வம் இருந்ததைத் தற்செயலாகத்தான் கண்டு பிடித்தோம். தன்னைச் சுற்றி வட்டங்கள் வரைவான். கூழாங்கற்களைக் கொண்டு வட்டங்கள் வரைவான். தவழும் குழந்தை வயிற்றை மையமாக வைத்துக் கொண்டு சுற்றிச் சுற்றிக் கைநீளும் அளவு பெரிய வட்டமாக வரைந்ததைக் கண்டு அதிசயித்துப் போனோம். எந்த நேரமும் சாக்பீஸ் கேட்பான். சாக்குப் பொடியின் மீது புரண்டதால் தோல் உபாதைகளும் ஏற்பட்டன. பிறகு, எழுந்து உட்கார



ஆரம்பித்த போது அந்த நிலையில் — நடக்க ஆரம்பித்தபோது அந்த நிலையில் — வீட்டின் எல்லாச் சுவர்களிலும் சித்திரங்கள் வரைந்து தள்ளுவான். வீட்டின் எந்த ஒரு சுவரும் காலியாக இருக்காது. பிறகு, நாற்காலி மேஜைகளின் மேல் ஏறி நின்று, அந்த உயரத்தில் சித்திரங்களைச் சுவர்களில் வரைய ஆரம்பித்தான். சாக்பீஸைக் கொடுப்பதை நிறுத்தி, கிரேயான்ஸ் கொடுக்க ஆரம்பித்தோம். பதினான்காவது மாதத்திலேயே பென்சில் பிடித்துப் பேப்பரில் வரைய ஆரம்பித்தான். அவன் வரைவதற்குப் பேப்பர் தருவதே எங்களுக்குப் பெரிய வேலையாக இருந்தது. எந்நேரமும் வரைந்து கொண்டே இருப்பான்.





ஆறாவது வயதில் வாட்டர் கலரும் ஆயில் பெயிண்டிங்கும் வரைய ஆரம்பித்தான். 13 போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் வாங்கி இருக்கிறான். பதின்மூன்றாவது போட்டி கோழிக்கோட்டில் நடந்தது. 5 முதல் எட்டு வயது வரை உள்ள பத்தாயிரம் சிறுவர் சிறுமியர் கலந்து கொண்ட இந்தப் போட்டியில் கிளின்ட்டுக்கு மாத்ருபூமியின் முதல் பரிசான தங்கப் பதக்கம் கிடைத்தது. முகபடாம் அணிந்து, வரிசை வரிசையாக நிற்கும் யானைகள் மீது வண்ணக் குடைகளைப் பிடித்துக் கொண்டு யானைப் பாகர்கள் உட்கார்ந்து இருக்கும் திருச்சூர் பூரம் விழாவைக் காட்டும் வண்ணச் சித்திரம் இது.

இன்னொரு முக்கியமான போட்டி —

வயது குறிப்பிடப்படாமல் வெளி வந்த ஒரு சித்திரப் போட்டியின் அறிவிப்பைப் பார்த்துவிட்டு அதில் உற்சாகமாகக் கலந்து கொள்ள கிளீன்ட் போனான். ஆனால், அந்தப் போட்டி கல்லூரி மாணவர்களுக்கான போட்டி! ஆறே வயதான கிளின்ட் பிரத்தியேக அனுமதி பெற்று அதில் கலந்து கொண்டான்.

அங்கே அவன் வரைந்தது —

சிவந்த நிறத்தில் அஸ்தமனச் சூரியன் பின்னால் தெரிய, அதன் முன்னால் கருமையான நிறத்தில் மூன்று ஓடங்கள் — போட் ரேஸ்! இந்தப் படத்திற்கும் பரிசு கிடைத்தது.

அவன் அழவே மாட்டான். பெரிதாக வாய்விட்டுச் சிரிக்கவும் மாட்டான். சதா சிந்தனையுடன் காணப்படும் அவன் முகம். அவனது முகத்தை நேராகப் பார்க்கவே எங்களுக்குத் தயக்கம் ஏற்படும்.

மூன்றாவது வயதில் அவனுக்குச் சிறுநீரகக்கோளாறு ஏற்பட்டது. அடிக்கடி கைகால்கள் வீங்கிக் கொள்ளும். அந்த நிலையிலும், அவன் சித்திரங்கள் வரைவதை நிறுத்தவில்லை. வலது கையில் வீக்கம் வந்தால் இடது கையால் வரைவான்.

ஒருநாள் மதியம் மூன்று மணி —

''அம்மா, எனக்குக் கொஞ்சம் மயக்கமாக இருக்கிறது. என்னை எழுப்ப வேண்டாம்'' என்று சொல்லிப் படுத்

தவன் அடுத்த நாள் காலை, பத்து மணி அளவில் உயிரற்ற சடலமாக மாறி விட்டான்!

அவன் பிறந்த நாள் 19.5.1976. மறைந்தது 15.4.1983.''

என்னுடைய சில சந்தேகங்களையும் ஜோஸப் தீர்த்து வைத்தார்.

''உங்களுக்கோ உங்கள் மனைவிக்கோ ஓவியத்தில் ஈடுபாடு உண்டோ?''

''அடியோடு கிடையாது. எனக்கு விளையாட்டுக்களில் அதிக ஆர்வம் உண்டு. நான் ஒரு ரெஸ்லர். எனக்குக் கராத்தேயும் தெரியும். என் மனைவி ஒரு பாஸ்கட் பால் பிளேயர். நாங்கள் இப்படி இருக்க நாங்கள் பெற்ற மகனுக்கு ஓவியத்தில் எப்படி இவ்வளவு திறமை வந்தது என்பது எங்களுக்கும் ஆச்சரியமான விஷயம்.''

''கிளின்ட் வரைந்த படங்களில் கணபதி, சிவன், அபிமன்யு படங்கள் காணப்படுகின்றனவே. அதன் வடிவங்கள் அவனுக்கு எப்படித் தெரிந்தன?''

''நாங்கள் கிறிஸ்துவர்களாக இருந்தாலும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களைப் படித்து அவற்றில் வரும் கதைகளை அவனுக்கு நிறையச் சொல்லி இருக்கிறோம். புராண சம்பவங்களை விளக்கும் படங்கள் அடங்கிய புத்தகங்களை அவனுக்கு நிறைய வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இரண்டாம் வயதிலேயே தானாக மலையாளப் புத்தகங்களையும், நாலாம் வயதிலேயே ஆங்கிலப் புத்தகங்களையும் தானாகவே அவன் படிக்கத் தொடங்கி விட்டான். அபிமன்யுவின் வீரம் அவனுக்கு மிகவும் பிடிக்கும். அதைப் போலவே, அஸ்தமனச் சூரியனின் அழகும் அவனுக்கு மிகவும் பிடிக்கும்.''

கிளின்ட்டின் பெற்றோர்களுக்கு வேறு குழந்தைகள் கிடையாது. கிளின்ட் மறைந்த பிறகு, இன்னொரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளவும் அவர்கள் விரும்பவில்லை. அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் —



—கேலிச் சித்திர நிபுணர் சங்கர் வரைந்த படம்.

'கிளின்ட் ஒரு சிங்கம். அவன் இருந்த ஸ்தானத்தில் ஒரு பூனைக்குட்டி பிறந்தால்...? வேண்டாம். அவனது நினைவிலேயே வாழ்ந்து விடுவோம்.''

ஜோசப்சொல்கிறார்: ''நான்சிறுவனாக இருந்த போது என்னை 'அப்பாவின் மகன்' என்று குறிப்பிடுவார்கள். என்னைத் தற்போது 'மகனின் தந்தை' என்று குறிப்பிடுகிறார்கள். நான் நானாக என்றுமே இருந்ததில்லை.''

தங்களின் புகைப்படத்தை எடுக்க அனுமதி தர மறுத்த அந்தத் தம்பதிகள் மகனின் புகழைப் பரப்பி, அதில் நிறைவு காண்பதையே லட்சியமாகக் கொண்டு இருக்கிறார்கள். தங்களது மகனின் ஆத்மாவை அவன் வரைந்த சித்திரங்களில் காணும் இவர்கள், அந்தச் சித்திரங்களை யாரும் தொட அனுமதிப்பதில்லை. கண்காட்சி நடக்கும் எல்லா இடங்களுக்கும் படங்களை எடுத்துச் சென்று பத்திரமாகத் திருப்பிக் கொண்டு வருகிறார்கள்.

கிளின்ட் ஒரு அந்திமச் சூரியனைப் போல மறைந்து விட்டாலும், அந்தப் பாலகனின் புகழ் தினமும் உதய சூரியனைப் போல் உதித்துக் கொண்டுதான் இருக்கிறது!

முன் கோபம்

இரா. வசந்தராசன்

கணக்கு ஆசிரியர் மாதவன் முன்கோபக்காரர் என்று எல்லோருக்குமே தெரியும். ஆனால், அவருக்கு இவ்வளவு கோபம் வரும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. அவருடைய கோபத்தைப் பாத்து வகுப்பே திகைத்தது.

இதுவரை யாரிடமுமே அடி வாங்காத ரவிதான் இன்று மாதவனிடம் மாட்டிக் கொண்டவன்.

''எல்லாப் பாடங்களிலும் முதல் மார்க் எடுப்பதால் உன்னை இந்த வகுப்பின் 'சிறந்த மாணவன்' என்று சொல்லி, வருகிற ஆண்டு விழாவில் உனக்குப் பரிசு வாங்கித் தரலாமென்று இருந்தேன். ஆனால் நீயோ வகுப்புக்கு வந்து ஆனந்தமாகத் தூங்குகிறாயே, நீயாடா சிறந்த மாணவன்? வகுப்பிலே தூங்குவதற்கு என்ன காரணம்? சொல்லு. ராத்திரி என்ன பண்ணினே?''

ரவியால் எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை. மாதவனின் அடியில் கன்னம் சிவந்திருந்தது. முகம் கலங்கி இருந்தது. கண்களில் கண்ணீர் ஆறு ஓட ஆரம்பித்திருந்தது.

''சொல்லுடா.''

''வந்து... வந்து... ராத்திரி செகண்ட் ஷோ சினிமாவுக்கு...''

மேல் கொண்டு அவனைப் பேச விடாமல் பளார் பளார் என்று அறைய, அவன் 'ஓ'வென்று அழ...

வகுப்பில் பயம் கலந்த அமைதி!

''படிக்கிற பையனுக்கு செகண்ட் ஷோ எதற்கு? இனிமேல் எவனாவது செகண்ட் ஷோவுக்குப் போய் வந்து, வகுப்பில் தூங்கினா, அவ்வளவுதான்! இந்த ஆண்டு சிறந்த மாணவன் பரிசு உனக்கு இல்லை. சரவணனுக்குத்தான், தெரியுதா?''

மாதவன் சொல்லி முடிக்கவும், மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

தலைமை ஆசிரியர் அறை.

''என்ன மிஸ்டர் மாதவன், உங்க வகுப்பிலே முதல் ரேங்க் வாங்கும் ரவியை விட்டு விட்டு இரண்டாவது ரேங்க் வாங்கியிருக்கிற சரவணனை 'பெஸ்ட் ஸ்டூடண்ட்' பரிசுக்கு சிபாரிசு செய்திருக்கிறீர்களே, என்ன காரணம்?''

''கிளாஸிலே அந்தப் பையன் ஒழுங்காக நடந்து கொள்வதில்லை. அதனால்தான் சார் இப்படி....''

''ஆல் ரைட். நீங்க கிளாஸ் டீச்சர். நீங்க சிபாரிசு செய்கிற பையனுக்குத்தானே நான் பரிசு கொடுக்க முடியும்?''

''ஆண்டு விழா எப்பொழுது சார்?''

''அடுத்த வாரத்தில் ஏற்பாடு பண்ணிடலாம்'', என்றார் தலைமை ஆசிரியர்.

அறையை விட்டு மாதவன் நிம்மதியாக வெளியே வந்தார்.

திங்கள் கிழமை.

ஆண்டு விழாவுக்கு இன்னும் இரண்டே நாட்கள்!

எல்லா வகுப்புகளிலும் மாணவ மாணவிகள் வரப் போகும் ஆண்டு விழாவைப் பற்றி உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வழியாக இறுதி மணி அடிக்க, மாணவசமுத்திரம்கொஞ்சம்கொஞ்சமாக வீதியில் கலக்க ஆரம்பித்தது.

வீட்டுக்குக் கிளம்பலாம் என்று மாதவன் கிளம்ப ஆரம்பித்த போதுதான், அன்று தபாலில் சேர்க்க வேண்டிய அந்த முக்கிய கடிதத்தின் ஞாபகம் வந்தது.

சட்டைப் பையைத் தடவினார்; காணவில்லை.

வகுப்பறை மேஜையிலேயே வைத்து விட்டது நினைவுக்கு வர, வகுப்பறையை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

வகுப்பறைக்குள் நுழையப் போன அவரை, அவர் வருவது தெரியாமல் உள்ளே பேசிக் கொண்டிருந்த இரண்டு பையன்களின் குரல்கள் தடுத்து நிறுத்தின.

''நியாயமாகப் பார்த்தால், இந்த பெஸ்ட் ஸ்டூடண்ட் பரிசு உனக்குத்தான் கிடைச்சிருக்கணும், ரவி. நம் கிளாஸ் டீச்சர் தீர விசாரிக்காமல் முன்கோபத்தால் அந்தப் பரிசை எனக்குத் தர ஏற்பாடு பண்ணி விட்டார். நீ அன்றைக்கு செகண்ட் ஷோ சினிமாவுக்குன்னு சொன்னவுடனேயே, உன்னை அடிக்க ஆரம்பிச்சிட்டார். ஆனால், உங்கப்பா சினிமாத் தியேட்டரிலே டீ, காபி போடற வேலை செய்கிறவர். அன்றைக்கு அவருக்கு உடம்பு சரியில்லாததால், அவருக்கு உதவி பண்றதுக்குத்தான் நீ போனாய் என்ற உண்மையே அவருக்குத் தெரியாது. அதனால்தான் உன்னைப் பற்றி மோசமாக நினைத்து விட்டார். வா ரவி, இப்பவே போய் இந்த உண்மையை நம் கிளாஸ் டீச்சரிடம் சொல்லலாம்,'' என்றான் சரவணன்.

''வேண்டாம் சரவணன். நான் சொல்வதைக் கேள். அன்றைக்கே இந்த உண்மையை கிளாஸிலே சொல்லலாம்னு நினைச்சேன். ஆனால், நம்ப கிளாஸ் டீச்சர் என்னைச் சொல்ல விடலியே! கோபத்திலே அடிச்சுட்டார். அதனால்தான் நான் அமைதியாயிட்டேன். இதை அவரிடம் அப்புறம் சொல்லலாம்னு சில நண்பர்கள் சொன்னதையும் தடுத்திட்டேன். ஏன் தெரியுமா? அவர்கள் போய்ச் சொன்னால், நான்தான் பரிசுக்கு ஆசைப்படுவதாக அவர் நினைப்பார். எனக்குப் பரிசு கிடைக்காதது பத்திக் கவலையில்லை. ஆனால், இந்த உண்மை அவருக்கு என்றைக்காவது தெரிஞ்சாலே போதும்,'' என்றான் ரவி.


தலையில் இடி விழுந்தது போல இருந்தது மாதவனுக்கு.

ஒழுங்காகப் படித்துக் கொண்டு, அதே சமயம் தந்தைக்கும் உதவி செய்யும் இந்த நல்ல மாணவனையா தண்டித்து விட்டோம்? ரவியின் பெருந்தன்மை அவரைத் திகைக்க வைத்தது.

வகுப்பறைக்குள் நுழையாமல் திரும்பினார்.

தூரத்தில் தலைமை ஆசிரியர் அறை திறந்திருப்பது தெரிந்தது.

தான் முன்கோபத்தால் செய்து விட்ட தவறுக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளத் தலைமை ஆசிரியர் அறையை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தார் மாதவன்.





இரா. நாகசுப்பிரமணியன் (4302)



ஜி. ஜெயா (3196)

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



எஸ். பி. தீபா (19,308)



ஜெ. சண்முகசுந்தரம் (21,486)



குழந்தைகளிடமிருந்து நாம் கற்கலாம் ஏராளமாக

அன்பு. அமைதி. அந்நியோன்னியம்.
அவர்களுடைய கள்ளங்கபடமற்ற தன்மை
யிலிருந்தும் களங்கமற்ற மனத் தூய்மையிலிருந்தும்
நாம் கற்க வேண்டியது ஏராளம்—குறிப்பாக
நிலையற்ற இந்நாளில், வன்முறைச் செயல்களும்,
பிரிவினைகளும் தலைவிரித்தாடும் இந்நாளில்,
உயிரின் புனிதத்தன்மை மதிக்கப்படாத இந்நாளில்.

குழந்தைகள்தான் வருங்கால குடிமக்கள். இந்தியாவின்
தலைவர்கள். அவர்களே நம் நாட்டின் வளமான வருங்
காலத்திற்கு நம்பிக்கை நட்சத்திரங்கள். அவர்களுடைய
ஒளிமயமான எதிர்காலத்திற்கு நாம் வழிவகுப்போமாக.
இன்றே அவர்களிடமிருந்து கற்றிடுவோமாக.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

குழந்தைகள் நாளில் 20 குழந்தை நூல்கள்

குழந்தை எழுத்தாளர் சங்கச் சார்பில் 13.11.88 மாலை சென்னை மயிலாப்பூரில் நேருஜியின் நூற்றாண்டு விழாவும், குழந்தைகள் தினமும் கொண்டாடப்பட்டது. புதுவை மத்திய பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியம் விழாவிற்குத்*தலைமை தாங்கி, சங்க வேண்டுகோளுக்கு இணங்கி 9 பதிப்பாளர்கள் தயாரித்த 20 புதிய குழந்தை நூல்களை வெளியிட்டார்.

தமிழக அரசின் வணிகவரி அறநிலையத் துறைக் கமிஷனர் மற்றும் செயலருமாகிய கு. ஆளுடைய பிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்கள் சங்கம் நடத்திய குழந்தை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

ஏவி. எம். அறக்கட்டளைப் பரிசுகள்:

வாழ்க்கை வரலாறு:முதற்பரிசு தங்கப் பதக்கம் — டாக்டர் நாகப்பா நாச்சியப்பன், காரைக்கால், இரண்டாம் பரிசு வெள்ளிப் பதக்கம் — பி.வி. கிரி, சென்னை. அறிவியல்:முதற் பரிசு தங்கப் பதக்கம் — மு. சாயபு மரைக்காயர், காரைக்கால், இரண்டாம் பரிசு வெள்ளிப் பதக்கம் — வ. தேனப்பன், தேவகோட்டை.

எல்லப்பா ரங்கம்மாள் நினைவுப் பரிசு:

முதற் பரிசு ரூ. 1000/— ப. பா. குமரன், சென்னை, இரண்டாம் பரிசு ரூ. 500/— இ. ஜே. தீன், திருநள்ளாறு.

செல்லப்பன் நினைவுப் பரிசு:

தியாகராசர் கலைக் கல்லூரி, மதுரையைச் சேர்ந்த சா. சகாய ராஜுக்கும், ஈரோடு கலைக் கல்லூரியைச் சேர்ந்த ந. பால மூர்த்திக்கும் முதற் பரிசாகத் தலைக்கு ரூ. 750/—.

* பரிசு பெற்றோருடன் தலைமை தாங்கிய துணைவேந்தர் டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியம், கு. ஆளுடைய பிள்ளை, சிவசங்கரி.



பொங்கல் வாழ்த்து அட்டையின் கதை

-ஜானகி மணாளன்

குழந்தைகளே! தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். இதோ தை வந்து விட்டது. இந்தியா முழுவதும் இது மகர சங்கராந்தி எனப் படுகிறது. தேவர்களுக்குப் புனித மான நாள். தட்சிணாயனம் முடிந்து உத்திராயனம் தொடங்கும் தினம். அதாவது சூரியன் மகர ரேகையிலிருந்து வடக்கு நோக்கி நகரத் தொடங்கும் தினம்.

தமிழர்களாகிய நாம், இதைப் 'பொங்கல்' என்கிறோம். இது நமக்கு அறுவடை சமயம். எனவே, புது நெல் வந்திருக்கும். அதைக் குத்திப் புத்தரிசி எடுத்துப் புதுப் பானையில் பொங்க லிட்டுச் சூரியனுக்குப் படைப்போம். எனவேதான், பொங்கல் பண்டிகை என்கிறோம். உழவர்களுக்கு இது மகிழ்ச்சிகரமான நாள். எனவே 'உழவர் திருநாள்' என்றும் சொல்கிறோம்.

மகிழ்ச்சியான இந்த வேளையில், நண்பர்களுடனும் உறவினர்களுடனும், நாம் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்கிறோம். வெளியூரில் உள்ளவர்களுக்கு முன்கூட்டியே வண்ண வண்ண வாழ்த்து அட்டைகளை அனுப்புகிறோம். இப்படிப் பொங்கல் வாழ்த்து அனுப்பும் வழக்கம், எப்போது ஏற்பட்டது தெரியுமா?

இதற்குப் பின்னால் மிக நீண்ட சுவையான வரலாறே உள்ளது. ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆண்டார்கள் அல்லவா? அப்போது நாம், அவர்களிடமிருந்து கற்றுக் கொண்ட பழக்கம் இது.





அன்பான பொங்கல் வாழ்த்துக்கள்

ஆர். ராஜா
32, வைத்தியராம தெரு
சென்னை-17



சரி... அந்த ஆங்கிலேயரின் நாடான இங்கிலாந்தில் இப் பழக்கம் எப்போது, எப்படி ஏற்பட்டது?

ஆங்கிலேயர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, அவர்களுடைய முக்கிய பண்டிகை கிறிஸ்துமஸ். அது ஆண்டுதோறும் டிசம்பர் 25—ஆம் நாள் வருகிறது. அதற்கு அடுத்த ஏழாம் நாள் புத்தாண்டு தினம். ஜனவரி — 1. எனவே இந்த இரண்டு பண்டிகைகளும், அவர்களுக்கு மிக முக்கியமான தினங்கள்.

அவர்களும் கூட, துவக்கத்தில் இந்த வாழ்த்து அட்டைகளை அனுப்பும் பழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. காரணம் என்ன தெரியுமா? அக்காலத்தில் இத்தனை போக்குவரத்து வசதிகள் கிடையாது. எனவே, மக்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே வாழ்ந்தனர். கிறிஸ்துமஸ், புத்தாண்டு தினங்களில், எல்லாரும் குறிப்பிட்ட ஓர் இடத்தில் கூடுவார்கள்; பண்டிகைகளை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவார்கள்.

போக்குவரத்து வசதிகள் பெருகப் பெருக, அவர்கள் தொலை தூர இடங்களில் சென்று வேலையில் அமர்ந்தனர். அப்போது அவர்களால், பண்டிகை நடக்கும் பொது இடத்துக்கு வர இயலவில்லை. எனவே, வசிக்கும் வீடுகளிலேயே அவற்றைக் கொண்டாடத் தொடங்கினர். அதற்காக நண்பர்களையும் உறவினர்களையும் மறந்து விட முடியுமா?

எனவே, பண்டிகை சமயங்களில் கடிதம் மூலம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

அதன் பிறகு, 1843—ல் இங்கிலாந்தில் விக்டோரியா பொருட்காட்சி சாலையின் இயக்குநராக இருந்த ஹென்றி கோல் என்பவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அது என்ன தெரியுமா?

அவரவர்கள் தனித்தனியாகக் கார்டு வாங்கி வாழ்த்து எழுதுவதற்குப் பதில், கார்டில் வாழ்த்துக்களை அச்சடித்து விட்டால், எல்லோருமே அதை வாங்கிக் கையொப்பமிட்டு அஞ்சலில் சேர்த்து விடலாமே என்று நினைத்தார்.

அச்சடித்தல் என்றால், வெறும் எழுத்துக்களை மட்டும் அச்சிட்டு விட முடியுமா? அதைக் கொஞ்சம் அழகுபடுத்தினால்தானே நல்லது? எனவே, அந்த ஊரில் ஓர் ஓவியர் இருந்தார். ஜே. ஸி. ஹோர்ஸ்லே என்று பெயர். அச்சிடுவதற்கு ஏற்ற அழகான சித்திரங்களை வரைந்து தரும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்.

ஹோர்ஸ்லே மூன்று விதச் சித்திரங்களை வரைந்து கொடுத்தார். அவற்றில், ஒன்றை, கோல் தனது வாழ்த்து அட்டைக்குத் தேர்ந்தெடுத்

துக் கொண்டார். அதில், இடதுபுறம், ஒரு பெண்மணி மிட்டாய் வழங்கிக் கொண்டிருப்பது போன்ற சித்திரம் இருந்தது. வலதுபுறம் ஒரு தாயும் மகளும். இரண்டுக்கும் இடையில் மகிழ்ச்சியான ஒரு குடும்ப உறுப்பி னர்களின் சித்திரம். அதன் அடியில் ஆங்கிலத்தில்

A Merry Christmas
and
A Happy New Year
to you

என்ற வாக்கியம் காணப்பட் டது.

இந்தச் சித்திரத்துடன் கோல் ஆயிரம் 'கிறிஸ்துமஸ் கார்டு'களை அச்சடித்தார். அக்காலத்தில் வண்ண அச்சுக் கலை கண்டுபிடிக்கப்பட வில்லை. எனவே, அவருக்கு ஒரு நண் பர். ஜோஸஃப் ஹோர்ஸ்லே என்று பெயர். அச்சடித்த ஆயிரம் கார்டு களையும் அவரிடம் கொடுத்து, எல்லா வற்றுக்கும் வண்ணம் தீட்டித் தரச் சொன்னார். பிற்பாடு, முதல் முத லாக அச்சடித்த 'வாழ்த்து அட் டையை வண்ணம் தீட்டிய ஹோர்ஸ் லேக்கே அனுப்பினார். அதுதான் உலகின் முதல் அச்சடித்த வாழ்த்து அட்டை! அதன் பிறகு கோல் தன்னி டமிருந்த மீதி 999 வாழ்த்து அட்டை களைக் கடையில் வைத்து விற்பனை செய்தார். ஒரு வாழ்த்தின் விலை ஒரு ஷில்லிங். அவை'கோல்—ஹோர்ஸ்லே கார்டு' என்ற பெயரில் பிரபலமடைந் தன.

அச்சிட்ட வாழ்த்து அட்டைகள் தோன்றிய விதம் இதுதான்! பிறகு, 1866—ல் ரேஃபல் டாங்க் என்று ஒரு புத்தக வெளியீட்டாளர். அவர் குவியல் குவியலாக, ஏராளமான 'வாழ்த்து அட்டை'களை அச்சிட்டுக் கடைகளில் விற்பனைக்கு அனுப்பி னார். அதிக அளவில் அச்சடித்ததால், கோல் — ஹோர்ஸ்லேயின் கார்டுகளை விட் மலிவாக விற்கப்பட்டன. அத்து டன் அதிகக் கவர்ச்சியாக இருந்த தோடு, மிகவும் பிரபலமடையவும் செய்தன.

ஆண்டுகள் பல கடந்தன. அச்சுக் கலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பல நவீன யுக்திகள் பழக்கத்துக்கு வந்தன. அத்துடன், பல வண்ண அச்சு இயந்திரங்களும் கண்டுபிடிக் கப்பட்டன. வாழ்த்து அட்டை தயாரிப்பு மேலும் பிரபலமடைந்தது. ராயல் அகாடமி என்ற அமைப்பு, அழகாகச் சித்திரங்களை வாழ்த்து அட்டைக்காக வரைந்து தருவோருக் குப் பரிசுகளை வழங்கி ஊக்குவிக் கும் பழக்கத்தைத் தொடங்கியது. அதன் பிறகு, வாழ்த்து அட்டைகள் மேலும் பிரபலமடைந்தன. அத்துடன் அச்சுக்கலைத் தொழில் நுட்பம் வளர வளர, 'வாழ்த்துக் கார்டு'களின் வடி வத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன. பெரிய தாள்களில் வாழ்த்துக்களை அச்சடித்து மடித்துப் பெரிய கவர் களில் வைத்து அனுப்பும் முறைகளும் ஏற்பட்டன.

ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆண்ட போது, அவர்கள் கிறிஸ்து மஸ் மற்றும் புத்தாண்டுப் பண்டிகை கள் சமயத்தில் 'வாழ்த்து அட்டை களை' இந்திய நண்பர்கள் மற்றும் பிறருக்கு அனுப்பினார்கள். அதைப் பார்த்ததும் நமக்கும் அதே போன்று நமது பண்டிகைகள் சமயத்தில் நண் பர்களுக்கும் உறவினர்களுக்கும் வாழ்த்து அட்டைகளை அனுப்ப வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. புத்தாண்டை அடுத்து, உடனேயே நமது தைப் பொங்கல் வருவதால் பொங்கல் சமயத்தில் 'பொங்கல் வாழ்த்துக்களை' அனுப்பிக் கொள் ளத் தொடங்கினோம்.

இதுதான் பொங்கல் வாழ்த்து அனுப்பும் வழக்கம் பிறந்த கதை. இப் போது ஆண்டுதோறும் சிவகாசியில் பல்லாயிரக்கணக்கான வடிவங்க ளில் வாழ்த்துக்கள் அச்சடித்து லட் சக்கணக்கில் விற்பனைக்கு வருகின் றன. தபால்காரர்கள் தூக்க முடியா மல் சுமந்து வந்து அதை நமக்கு வழங்கி வருகிறார்கள். நீங்களும் பல பேருக்கு அனுப்புகிறீர்கள். உங்க ளுக்கும் நிறைய வருமே!

பிருந்தாவனம்



பழமொழி பற்றிய பழமொழிகள்

* நீண்ட அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட சிறு வாக்கியங்களே பழமொழிகள்.

— செர்வான்டிஸ்.

* பழமொழியைப் போல் வேறெதுவும் நினைவில் பதிவதும், நீண்ட நாட்கள் தங்குவதும் இல்லை.

— மன்ரே

* பல ஆயிரம் நூல்களைக் கற்பதைவிட அறிஞர்கள் கூறும் பழமொழிகளே அதிக அறிவைத் தரும்.

— லா வேட்டர்

* கடலில் முத்தைப் போல், சுரங்கத்தில் தங்கத்தைப் போல், சரித்திரத்தில் பழமொழிகள் உள்ளன.

— ராஸ்மஸ்

— நிர்மலா (12,098),
தஞ்சாவூர் — 7.

எதற்கு எது?

இங்கே வலப்பக்கம் இருக்கின்றன சில சொற்கள்; இடப்பக்கமும் சில சொற்கள் இருக்கின்றன. மாறி இருக்கும் அவற்றைச் சரிப்படுத்திப் பாருங்கள்:

1. மதில் மேல் — அ. கொள்ளி போல
2. இருதலைக் கொள்ளி — ஆ. பாலில் விழுந்தது போல,
3. குரங்கின் கை — இ. எறும்பு போல
4. பழம் நழுவிப் — ஈ. செந்தாமரை போல,



5. அன்றலர்ந்த — உ. பூனை போல.

விடை: 1 — உ, 2 — இ, 3 — அ, 4 — ஆ, 5 — ஈ.

— என். எம். பஜ்லுல்ஹக்
(20668), பொதக்குடி.

எத்தனை லட்டுகள்?



ஒரு திருமண வீட்டில் 280 லட்டுகள் செய்யப்பட்டன. ஆணுக்கு


மூன்று, பெண்ணுக்கு 2, குழந்தைக்கு அரை என்று லட்டுகள் தரப்பட்டன. மொத்தம் 261 பேருக்கு லட்டுகள் தரப்பட்டன. மீதம் ஒரு லட்டு இருந்தது. எத்தனை ஆண், பெண் குழந்தைகளுக்கு லட்டுகள் கிடைத்தன?

விடை:

ஆண்கள்	30 × 3	=	90
பெண்கள்	49 × 2	=	98
குழந்தைகள்	182 × ½	=	91
மீதம் லட்டு			1
மொத்தம்	261		280

— டி. ஷேக் உசேன் (20,767),
செஞ்சி.

என்ன திமிர்?



"அம்மா, இந்தக் கோழிக்கு என்ன திமிர் பார்த்தியா?"

"கோழி என்ன செய்தது?"

"நான் எழுதி வைத்திருந்த கட்டுரை மீது முட்டை போட்டுடுது."

— எஸ். மாதவன் (204).
திருச்சி — 14.

எவ்வளவு நேரம்?


மருதூரில் உள்ள தன் அத்தையின் வீட்டிற்கு முருகன் நடைப் பயணமாகச் சென்றான். சிறிது தூரம் சென்றதும், வழியிலே ஒரு கல்லில் உட்கார்ந்திருந்த ஒருவரிடம், "ஐயா, மருதூர் செல்ல இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?" என்று கேட்டான். அதற்கு, அவர் பதில் கூறாததால், அவரைச் செவிடு என்று நினைத்து மேலும் சிறிது தூரம் நடந்தான். அப்போது, அந்த மனிதர் ஓடிவந்து "மருதூர் செல்ல சுமார் 4 மணி நேரமாகும்" என்றார். ஏன் அவர் முன்பே பதில் சொல்லவில்லை?



விடை: எப்படிப்பட்ட வேகத்தில் முருகன் நடந்திருக்கிறான் என்பது தெரிந்தால்தானே, அவன் எவ்வளவு நேரத்தில் மருதூரை அடைய முடியும் என்று சொல்ல முடியும்?

— மோ. அருண் (649),
மன்னார்குடி.

முதல் கலங்கரை விளக்கம்



உலகிலேயே முதன் முதலாகக் கலங்கரை விளக்கம் கி. மு. 300—இல் அலெக்சாண்டிரியா என்ற வளை

குடாவில் உள்ள ஒரு தீவில் கட்டப் பட்டது. அதைக் கட்டியவர் டாலமி என்ற மன்னராவார். அப்போதைய கலங்கரை விளக்கம் ஒரு ஸ்தூபி போன்று இருக்கும். அதன் உச்சியில் கட்டைகளைப் போட்டு, எரிப்பார் கள். அதன் வெளிச்சம் கடலில் 30 மைல் தூரத்திற்குத் தெரியுமாம்.

— எல். சிவகுமார் (9815), வந்தவாசி.



பேனாவின் விலை

நான் சேமித்து வைத்திருந்த பணத் தைப் போல் ஒரு மடங்கு என் அப்பா எனக்குத் தந்தார். இரண்டையும் கொண்டு போய் ஒரு பேனா வாங்கி னேன். மீதம் இருந்த பணத்தை என் தம்பியிடம் கொடுத்தேன். அவன் நான் கொடுத்ததைப் போல் ஒரு தொகையைப்போட்டு, அவனும்நான் வாங்கியதைப் போல் ஒரு பேனா வாங்கினான். அவன் பேனா வாங்கி யது போக மீதமிருந்த பணத்தைத் தங்கையிடம் கொடுத்தான். அவன் எவ்வளவு கொடுத்தானோ அதே மதிப்புள்ள தொகையை அவள் சேமித்து வைத்திருந்தாள். என் தம்பி கொடுத்ததையும் அவள் சேமித்ததை யும் கொடுத்து அவளும் நாங்கள் வாங் கியதைப் போல ஒரு பேனா வாங்கி னாள். மீதம் எதுவும் இல்லை. நான் சேமித்தது எவ்வளவு? என் அப்பா தந்தது எவ்வளவு? என் தம்பி சேமித் தது எவ்வளவு? என் தங்கை சேமித் தது எவ்வளவு? பேனாவின் விலை என்ன?

விடை:

நான் சேமித்தது	ரூ. 5.25
அப்பா தந்தது	ரூ. 5.25
என் தம்பி சேமித்தது	ரூ. 4.50
என் தங்கை சேமித்தது	ரூ. 3.00
பேனாவின் விலை	ரூ. 6.00

— ஆறு. அண்ணாதுரை (10,403), பஞ்சலிங்கபுரம்.

இரு கழுதைகள்

முன்னொரு காலத்தில் ஒரு பாட்டி இருந்தாள். அவளிடம் இரண்டு கழு தைகள் இருந்தன. தினந்தோறும் காலை நேரத்தில் அவள் கழுதையை மேய்ப்பதற்காக வயலுக்கு ஓட்டிக் கொண்டு போவாள். அப்படி ஒரு நாள் காலையில் ஓட்டிக் கொண்டு போகும் போது எதிரே இரண்டு மனி



தர்கள் வந்தார்கள். கழுதைகளை ஓட்டிக் கொண்டு வரும் அவளைக் கேலி செய்யும் விதத்தில் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

''கழுதைகளின் அம்மாவே, உனக்கு எங்கள் காலை வணக்கம்.''

அந்த மனிதர்களது கேலியைப் புரிந்து கொண்ட மூதாட்டி சிரித்துக் கொண்டே நயமாகப் பதில் சொன் னாள்:

''என் பிள்ளைகளே! நானும் சொல் கிறேன், உங்களுக்குக் காலை வணக்கம்.''

—மேகலை (3203), தேவகோட்டை

எருமை எங்கே?

எமன்: சித்ரகுப்தா! என் எருமை வாக னத்தை ரொம்ப நாழியாகக் காண

வில்லையே, எங்கே சென்றிருக்கிறது...?

சித்திரகுப்தன்: அதற்கு, உடல்நிலை சரியில்லையாம். அதனால், மிருக வைத்திய சாலைக்குச் சென்றிருக்கிறது, அரசே!

— இராம செந்தில்குமார் (3360),
திருக்கடையூர்.



பார்வை நேரம்

ராமு — அந்தக் கண் டாக்டருக்குக் கண் சரியாவே தெரியல்லை. கண்ணுக்குப் போட வேண்டிய மருந்தைக் காதுக்குப் போடுறார்.

சோமு — அதுக்குத்தான் வெளியில் போட்டிருக்கே பார்வைநேரம் 6 முதல் 9. இப்போ மணி என்ன? 9 மணி 10 நிமிடம் ஆகிறதே!

— S. கார்த்திகேயன் (18229)
திருவாரூர்.

என்ன உறவு?

அ, ஆ என்ற இருவர் உள்ளனர். '''ஆ' என்னுடைய சகோதரர்'' என்று 'அ' கூறுகிறார்.




'''அ' என்னுடைய சகோதரன் அல்ல'' என்று 'ஆ' கூறுகிறார்.

'அ'விற்கும் 'ஆ'விற்கும் இடையே உள்ள உறவு என்ன?

விடை: அ. அக்கா, ஆ. தம்பி.

— தி. மேனகா (22,118)
கடலூர் — 1.

புதிய படுக்கை




பஞ்சாபில் உள்ள லூதியானா மாநிலத்தில் டாக்டர் நரேஷ்தத் என்பவர் ஒரு புதுமையான படுக்கையைக் கண்டுபிடித்துள்ளார். இந்தப் படுக்கையில் படுத்துக் கொண்டால் உடலின் எந்தப் பகுதியில் வலி இருந்தாலும் போய் விடும் என்கிறார். இந்தப் படுக்கையில் காந்தங்கள் பொருத்தப் பட்டிருக்கின்றன. மூட்டுவலி, முதுகு வலி என ஒவ்வொரு வகைக் காந்தத்தைப் படுக்கையில் பொருத்திக் கொள்ள வேண்டும். வலி பறந்து போய் விடும். இப்படி ஒரு விநோதப் படுக்கையை உலகிலேயே முதன் முதலாக ஓர் இந்தியர் கண்டுபிடித்தார் என்பதில் நமக்கெல்லாம் பெருமை தானே?

— இரா. மணி (21,412)
வந்தவாசி.



கொக்கர...க்...கோ... சேவல்


படக்கதை — ஓவியர்- எஸ்.கே. ராமானுஜம் (ராஜு)





காத்தாயி வீட்டினுள் நுழைந்தாள்..
ஐய்யோ! பூனை பாலைக் கீழே தள்ளி விட்டதே!!
காத்தாயி உடனே பூனையை அடித்து துரத்தி விட்டாள்
அதைக்கண்ட சேவல் மனம் மகிழ்ந்து... சிரித்தது.
அப்பொல்லாத சேவல் நாயையும் துரத்த, சமையலறைக்குள் நுழைந்தது.
சோற்றுப்பானையைக்கீழே தள்ளி உடைத்தது...
தன்னுடைய நாய்தான் இதனை உடைத்தது என்று எண்ணிய காத்தாயி தன் நாயையும் அடித்துத்துரத்தி விட்டாள்.
இனி..என்னுடைய எஜமானிக்கு என்னைத்தான் ரொம்பப் பிடிக்கும்..
தைரியம் படைத்த அச்சேவல் தினமும் சமையலறைக்குச் சென்று திருடிச்சாப்பிடத் தொடங்கியது...
தொடர்ந்து இரு நாட்களாக சேவல்.. திருடிச் சாப்பிடுவதை காத்தாயி பார்த்து விட்டாள்.
அட.. அற்பச்சேவலே! என்னிடத்திலா உன் வேலையைக்காட்டறே?
கொக்கா-க்-கோ!

பிருந்தாவனக் கவியரங்கம்




புதிய ஆண்டு

புதிய ஆண்டு பிறந்தது;
  புத்தம் புதிதாய் மலர்ந்தது!
புதுமை எங்கும் பொலிந்தது;
  பொன்னாய் எங்கும் மிளிர்ந்தது!

வளமை எங்கும் நிறைந்தது;
  வறுமை எங்கோ மறைந்தது!
நிலபு லன்கள் செழித்தது;
  நிறைவை எய்திக் களித்தது!

நலிந்த நாட்கள் நகர்ந்தது;
  நலமே எங்கும் விளைந்தது!
விளைவு எங்கும் சிறந்தது!
  வேற்று மையும் ஒழிந்தது!

— ஏ. எஸ். உமா மகேஸ்வரி (13,401),
செட்டிகுறிச்சி.



சர்க்கஸ்

சர்க்கஸ் பார்க்க வாருங்கள்;
சாகசம் எல்லாம் பாருங்கள்.

சிங்கமும் புலியும் செய்கின்ற
சிறந்தநல் வித்தைகள் காணுங்கள்.

ஆணும் பெண்ணும் அந்தரத்தில்
ஆடும் அழகைப் பாருங்கள்;

குலுங்கச் சிரிக்க வைக்கின்ற
கோமா ளியையும் காணுங்கள்...!

தந்திரத் தாலே வியப்பூட்டும்
மந்திரக் காட்சியும் பாருங்கள்;

மனிதனைப் போலக் குதிரையின்மேல்
வந்திடும் குரங்கைப் பாருங்கள்.

சைக்கிள் ஓட்டும் கரடியுமே,
சாகசம் செய்வதைக் காணுங்கள்...!

சிங்கம் முதுகில் ஏறிவரும்
சிறிய ஆட்டுக் குட்டியையும்

மனிதன் ஒருவன் சிங்கத்தின்
வாய்க்குள் தலையை நீட்டுவதும்...

தும்பிக் கையால் பூஜை செய்யும்
தொந்தி பருத்த யானையையும்

மரணக் கூண்டில் சைக்கிள் விடும்
மனிதனை யும்தான் பாருங்கள்;

உயிரைப் பணயம் வைத்தவர்கள்
உழைப்பை நாமும் போற்றிடுவோம்!


— கே. ஜே. ஜெகதீஷ்குமார் (21,235),
திருவனந்தபுரம்

வேல்முருகன்

கேட்டவர்க்கு இல்லையென்று
சொன்னதுமில்லை.
கெட்டவர்க்கு நன்மையொன்று
செய்ததுமில்லை.

பக்தர்களும் அவரையென்றும்
மறந்ததுமில்லை.
பாதகரும் தப்பிச் சென்று
வாழ்ந்ததுமில்லை.

ஐந்தெழுத்து மந்திரத்தால்
தீமையொன்றில்லை.
ஐயமில்லை. அது இருந்தால்
மருந்தொன்றில்லை.



அழகனவன் வீற்றிருக்கும் தலமுமுண்டு.
அங்கேசென்றால் அனைவர்க்கும்
நலமுமுண்டு.

கந்தனவன் கையிலென்றும் வேலுமுண்டு.
கடம்பனவன் அருகிலென்றும்
சேவலுமுண்டு.


குமரனவன் நெற்றியிலே திருநீறுண்டு.
குடும்பத்தினர் மனத்தினிலே என்றுமுண்டு.

— எம். வெங்கடேசமூர்த்தி (7,698),
குரோம்பேட்டை.

அவர்கள் சொன்னார்கள்!

கோழி முட்டை விழுந்ததாலே
அம்மிக் கல்லு உடைஞ்சதுன்னு
கோவிந்தன் சொன்னான்! — கோட்டூர்க்
கோவிந்தன் சொன்னான்!

ஆட்டுக் குட்டி இடிச்சதாலே
சிங்கக் குட்டி செத்துச்சின்னு



ஆனந்தன் சொன்னான்! — ஆத்தூர்
ஆனந்தன் சொன்னான்!

பூனைக் குட்டி மிதிச்சதாலே
ஆனைக் குட்டி நசுங்கிச்சின்னு
பொன்னையன் சொன்னான்! — பூண்டிப்
பொன்னையன் சொன்னான்!

ஆத்து வெள்ளம் பாஞ்சதாலே
கிணத்துத் தண்ணி வரண்டுதுன்னு
அழகிரி சொன்னான்! — பழநி
அழகிரி சொன்னான்!

அம்மா வாசை இரவுநேரம்
முழு நிலவைப் பார்த்தேனுன்னு
ஆதவன் சொன்னான்! — ஆம்பூர்
ஆதவன் சொன்னான்!

மணலைக் கயிறாத் திரிச்சு நானும்
வானை வில்லாய் வளைப்பேனென்று
மாதவன் சொன்னான்! — மதுரை
மாதவன் சொன்னான்!

உலக்கைச் சத்தம் கேட்டதாலே
உள்ளங் கையும் வீங்கிச்சுன்னு
ஊர்வசி சொன்னான்! — உடுமலை
ஊர்வசி சொன்னான்!

— ம. மணிவண்ணபாண்டியன் (3,150),
ஆத்தூர்.



"நான் தஞ்சாவூர் தட்டைத்தான்
ஒளிச்சு வைச்சேன்!"

வண்ண அட்டைப்படம்: ஏ. வி. பாஸ்கர்

கேளுங்கள் சொல்லுகிறோம்

• தேர்வு முடிவு தெரிந்ததும், என் நண்பனிடம் 'உனக்குத் தமிழிலே எத்தனை மார்க்?' என்று கேட்டேன். 'டென்மார்க்' என்றான். 'அப்படியானால் 10 மதிப்பெண்கள்தானா?' என்று கேட்டேன். "இல்லை 63 மதிப்பெண்கள் பெற்றிருக்கிறேன்" என்றான். பிறகு ஏன் 'டென்மார்க்' என்று அவன் சொல்ல வேண்டும்?

— பி. முரளி, சென்னை — 20.

உன் நண்பன் Tenmark என்று சொல்லியிருக்க மாட்டான். Denmark என்றுதான் சொல்லியிருப்பான். வட ஐரோப்பாவிலுள்ள ஒரு நாட்டின் பெயர்தான் டென்மார்க் (Denmark). 'ஐரோப்பாவின் பால் பண்ணை' என்று அதைச் சொல்லுவார்கள். அந்த நாட்டின் பெயரிலும் மார்க் என்று இருப்பதால், அதை வைத்து வேடிக்கை செய்திருக்கிறான், உன் நண்பன்.

• 'மெக்காலேக் கல்வி முறை' என்கிறார்களே, அது பற்றிக் கூறுவீர்களா?

— பெ. சுந்தர், சென்னை — 18.

ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்ட போது மெக்காலே என்பவர் சட்ட நிபுணராகக் கல்கத்தாவுக்கு வந்தார். நான்கு ஆண்டுகள் — அதாவது 1834 முதல் 1838 வரை அங்கிருந்தார். அவர் இரண்டு முக்கிய வேலைகளைச் செய்தார். இந்தியக் குற்றச் சட்டத்தை உருவாக்கினார். இந்தியர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி தர ஏற்பாடு செய்தார். அக் காலத்தில் அவர் கொண்டு வந்த கல்வி முறையைத்தான் 'மெக்காலே கல்வி முறை' என்கிறார்கள். இந்த ஏற்பாட்டால் பலர் ஆங்கிலக் கல்வி பயின்று அரசாங்க வேலைகளைப் பெற்று, ஆங்கிலேயர் தொடர்ந்து நம் நாட்டை ஆள உதவினார்கள்.

• 'சத்தியாக்கிரகம்' என்ற சொல்லின் அர்த்தம் என்ன?

— சி. மீனலோசனி, தேனிபட்டி.

அரசாங்கம் அநியாயமாக ஒரு சட்டம் கொண்டு வந்தால் அல்லது அநியாயமாக நடந்து கொண்டால், அதை சத்தியத்தைக் கடைப்பிடித்து உறுதியாக எதிர்ப்பது என்ற ஒரு புதுமுறையை காந்திஜி கண்டுபிடித்தார். இந்தப் புது முறைக்கு இந்திய மொழியில் ஒரு பெயர் வைக்க காந்திஜி விரும்பினார். சரியான சொல்லைக் கூறுபவருக்குப் பரிசு அளிப்பதாகவும் விளம்பரம் செய்தார். பலர் கலந்து கொண்டனர். அவர்களில் மகன்லால் காந்தி என்பவர் 'சதாக்கிரகம்' என்ற சொல்லை அனுப்பியிருந்தார். 'தர்மத்தில் உறுதி' என்ற பொருள் கொண்டது அச்சொல். அதையே காந்திஜி 'சத்தியாக்கிரகம்' என்று மாற்றினார். சத்தியம் என்பதில் அன்பு அல்லது அகிம்சை அடங்கும். ஆக்கிரகம் என்றால் உறுதி. சத்தியம் + ஆக்கிரகம்தான் சத்தியாக்கிரகம்.

• 'சிகரெட் குடித்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது' என்ற அறிவிப்பு இருந்தும், அதன் கீழேயே சிகரெட் வியாபாரம் செய்கிறார்களே!

— வி. சுந்தரராமன், குத்தாலம்.



அப்படிப் போட்டாலாவது, சிகரெட் பிடிப்பதன் தீமையை உணர்ந்து திருந்துவார்கள் என்று அரசாங்கம் கருதுகிறது. அதைப் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லையே! இதைப் பற்றிப் பற்பல கட்டுரைகள், கருத்தரங்குகள் நடத்தியும் போதிய பலன் ஏற்படவில்லை. தன் உயிருக்குத் தானே உலை வைக்கும் செயலில், இனியாவது சிகரெட் பிடிக்க நினைக்கும் இளைஞர்கள் ஈடுபடாமல் இருந்தால் நல்லது.

• மதுரைக்குச் சென்றிருந்த போது, பேருந்தில் என்னுடன் பயணம் செய்த ஒரு

பெரியவரும் அவருடைய மகனும் ஏதோ ஒரு மொழியில் பேசிக் கொண்டிருந்தார்கள். அது என்ன மொழி என்று தெரியாததால், அந்தச் சிறுவனை நான், "நீங்கள் பேசியது என்ன பாஷை?" என்று கேட்டேன். "சௌராஷ்டிர மொழி" என்றான் அவன். அப்படி ஒரு மொழி தமிழகத்திற்கு எப்படி வந்தது?

— ஆர். கருணாகரன், தேவகோட்டை.

இப்போது மேற்கிந்தியாவில் கத்தியவார் என்று அழைக்கப்படும் பிரதேசத்திற்கு சௌராஷ்டிரம் என்று அக்காலப் பெயர். 1024—இல் கஜனி முகமது கத்தியவார் மீது படையெடுத்த போது, அங்கிருந்தவர்களில் பலர் தென்னிந்தியாவிற்கு வந்து குடியேறினார்கள். தங்கள் தாய்மொழியான சௌராஷ்டிர மொழியைத் தங்கள் வீடுகளிலும் உறவினர்களோடும் தொடர்ந்து பேசி வருகின்றனர்.

* நேரு மாமா சிறையில் இருந்த போது எழுதிய புத்தகங்கள் என்ன என்ன?

— எஸ். கீதப்ரியா, வேலூர்.

ஒன்பது ஆண்டுகள் அவர் சிறையிலிருந்த போது அவர் எழுதியவை மூன்று புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன. **Glimpses of World History** (உலக வரலாற்றுக் கண்ணோட்டங்கள்), **Auto biography** (சுயசரிதம்), **Discovery of India** (பாரத சரித்திரப் பிரகாசம்.) அவர் 1930 முதல் 1933 வரை தம் மகள் இந்திரா சிறுமியாக இருந்த போது எழுதிய கடிதங்களே முதல் புத்தகமாக வெளிவந்தது.

* காந்தித் தாத்தா பிறந்த நாளில் (அக்டோபர் 2) பிறந்த லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் எவ்வளவு காலம் நம் பாரதப் பிரதமராக இருந்தார்?

— கே. ராமகப்பு, நாகர்கோயில்.



நேருஜிக்குப் பிறகு பாரதப் பிரதமரான லால்பகதூர் சாஸ்திரி 19 மாதங்களே பாரதப் பிரதமராயிருந்தார். இந்தியா — பாகிஸ்தான் உடன்படிக்கையில் ரஷ்யாவிலுள்ள தாஷ்கண்ட் நகரில் கையெழுத்திட்ட சில மணி நேரத்தில் மாரடைப்பினால் அங்கேயே காலமானார்.

* கர்நாடகம், கேரள மாநிலங்களில் தாய் மொழி கட்டாயமாக்கப்பட்டதைப் போல, தமிழ்நாட்டிலும் நமது தாய்மொழிக்கு அது போன்ற உரிமை கிடைக்குமா?

— சீர்காழி எஸ். பரமசிவம், சீர்காழி.



ஆங்கிலத்துடன் ஹிந்தி அல்லது சமஸ்கிருதம் அல்லது ஜெர்மன் என்று இரு மொழிகளை மட்டுமே படிக்கின்றனர். எந்த மொழியை வேண்டுமானாலும் அவர்கள் படிக்கட்டும். தாய்மொழிக்கு முதலிடம் தர வேண்டியது மிகமிக அவசியம்.

* போலீசார் சாதாரண மோட்டார் வண்டிகளைவிட, 'ஜீப்'பை அதிகமாகப் பயன்படுத்துகிறார்களே, அது எதனால்?

— பி. குமரேசன், திண்டிவனம்.

போலீசார் மட்டுமல்ல; இராணுவத்தினரும், அரசாங்கமும், இப்போது ஜீப் கார்களை அதிகம் பயன்படுத்துகின்றனர். இதற்குக் காரணம், சாதாரண வண்டிகளில் பின் இரு சக்கரங்களை மட்டுந்தான் எஞ்சின் சுழற்றும். ஆனால், ஜீப் வண்டிகளில் நான்கு சக்கரங்களையும் எஞ்சின் சுழற்றுகிறது. இதனால், கரடு முரடான சாலைகளிலும், மேடுபள்ளமான காட்டு வழிகளிலும், சேற்றிலும்கூட ஜீப் வண்டிகளால் ஓட முடிகிறது.

* பாடல்கள் இயற்ற வேண்டும் என்றால், தமிழ்த் துறையில் எம். ஏ. பட்டம் பெற வேண்டும் என்கிறார்களே, அது தேவை தானா?

— வ. ஞானசேகரன், தபோவனம்.

புகழ்பெற்றகவிஞர்களான பாரதியாரோ, பாரதிதாசனோ, கவிமணியோ, நாமக்கல் கவிஞரோ எம். ஏ. பட்டம் பெறவில்லையே! கவிதை எழுதுவதற்கும், பட்டம் பெறுவதற்கும் சம்பந்தமே இல்லை. சிலர் பிறவிக் கவிஞர்களாக இருக்கிறார்கள். மற்றும் சிலர், பல தமிழ்க் கவிதை நூல்களைப் படித்தும், கவிதை எழுதும் முறைகளை நன்குணர்ந்தும் எழுதி வருகிறார்கள்.

சிக்கனத்திற்குச் சிறந்த யோசனை!

சார் தபால்!

* முதறிஞர் ராஜாஜி அவர்களின் குழந்தைப் பருவத்தைப் பற்றி அவர்களே நேரில் கூறுவது போன்று சிறப்பாகத் தொகுத்தளித்த ஆனந்தி அவர்களுக்கு நன்றியும் பாராட்டும்.

— புதுவை ராஜமுனி, புதுச்சேரி — 12.

* ராஜாஜி அவர்களின் திருஉருவப் படத்தையும் அவரது இளமைப் பருவத்தையும் வெளியிட்டது கோகுலம் இதழுக்குச் சிறப்பினைத் தந்தது.

— மீனா கனகராஜன், பொள்ளாச்சி.

* 'நீலனின் பொது அறிவு' கதை மிகவும் அற்புதம். இதை எழுதிய கொ. மா. கோதண்டம் அவர்களுக்கு என் இனிய பாராட்டுக்கள்.

— செ. முரளி (12,466), மயிலாடுதுறை.

* அதிக விலை கொடுத்துத்தான் வாழ்த்து அட்டைகள் வாங்க வேண்டும் என்று அழுது சாதிக்கும் என் குழந்தைகள் போன்ற பல குழந்தைகளைத் தங்களின் அறிவுரை திருத்தியிருக்குமென நம்புகிறோம்.

— டி. முருகேசன், எம். கோமதி முருகேசன், காசித் தருமம்.

* வாழ்த்து அட்டைகள் அனுப்பும் விஷயத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கக் கோரியிருக்கும் ஆசிரியரின் (குழந்தைக் கவிஞர்) வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றே! நியாயமான அவசியமான கோரிக்கையும் கூட!

— ஸ்ரீராம் வைத்தியநாதன், மன்னார்குடி

* பூதலூர் முத்து அவர்களின் 'வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்' தொடர் கதை நல்ல உள்ளங்கள் பெருக வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. பாராட்டுக்கள்.

— ந. ஏகம்பவாணன், துலைவாசல்.

* 'கோகுலம்' படித்தால் டாக்டரிடம் போகவே வேண்டாம். டாக்டர் கணேசன் அவர்களின் கட்டுரை தனிச் சிறப்புடையது.

— அ. பிஜு, மொரப்பூர்.

* மின்மினிக் கதைகளில் வெளியான 'திறமைக்குப் பாராட்டு' தந்த கோகுலத்தின் திறமைக்கு உறுப்பினர்கள் சார்பில் பாராட்டுக்கள் பலப்பல.

— மு. பூபாலன் (18,895), மூஞ்சூர்பட்டு — 57.

* சாட்சி கோபாலனையும் அண்ணா கோபாலனையும் எங்களுக்குத் தந்த வண்ணக் கோகுலத்திற்கு நன்றி.

— எம். ஏ. சுப்பிரமணியன், முருகன் புதூர், கோபி.

* 'பொன்மணித் தீவு' எனும் சீனக்கதை மிகவும் அருமையாக உள்ளது. அதைத் தமிழில் தந்த 'சந்திரநாத்'திற்கு என் உளம் கனிந்த பாராட்டு.

— பி.எல். கிரிஜா, புன்செய்ப்புளியம்பட்டி.

* ஒருமைப்பாட்டிற்கு மொழி, ஜாதி, மதம் ஆகிய எதுவும் தடையல்ல என்பதை 'இது வல்லவா ஒருமைப்பாடு!' கதையில் மிகவும் அருமையாக விளக்கியுள்ளார் அரசுமணி மேகலை அவர்கள்.

— மு. கணேஷ் பாபு (8519), குரோம்பேட்டை.

* ஒற்றுமையுடன் வாழ்ந்தால் பல நன்மைகள் உண்டாகும் என்பதை 'இதுவல்லவா ஒருமைப்பாடு' என்ற கதை அருமையாக விளக்குகிறது.

— செ. குமார் (4102), மயிலாடுதுறை.

* 'அரை மீசை மகாராஜா' படக்கதையில் மகாராஜாவின் வலது பக்க மீசையில் தேன் குஞ்சு புகுவதாகப் படம் போட்டுவிட்டு, மகாராஜாவின் இடதுபக்க மீசையை எடுப்பது போல் ஓவியர் ராஜு படம் வரைந்திருக்கிறாரே, இதை கவனிக்காமல் விட்டது ஏனோ?

— எம். பஜ்ருதீன் (20,924), கொடிக்கால் பாளையம்.

* அரை மீசை மகாராஜா என்ற குட்டிப் படக்கதை எங்களைச் சிரிப்பு வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டது.

— என். சந்திரன் (4785), மாவட்டக்குடி.


* 'மதி ஒளி' அவர்களின் 'அரசர்க்கு அழகு' கதையில், "தருமர் ஐந்நூறு பேருக்குத் தினமும் அன்னதானம் செய்கிறார்" என்று ஸ்ரீகிருஷ்ணர் கூறியதும், "தினம் ஐந்நூறு பேருக்குத் தருமர் அன்னதானம் செய்கிறார் என்றால் குறைந்தது ஐந்நூறு ஏழைகளாவது அவர் நாட்டில் இருக்கிறார்கள் என்பது நிச்சயமாகிவிட்டதே! இது ஓர் அரசருக்குப் பெருமையா? அரசாட்சிக்கு அழகா?" என்று மகாபலி கேட்பது, எல்லாரையுமே சிந்திக்கத் தூண்டுமென நினைக்கிறேன்.

— எம். வேதவல்லி, திருச்செந்தூர்.

* சாந்தா கிளாஸின் கதை ஃபர்ஸ்ட் கிளாஸ்!

— பி. கோபிநாத், திண்டிவனம்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால்: ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—.



சுமையைக் குறையுங்கள்
வாழ்வை ஒளிபெறச்
செய்யுங்கள்
வருங்கால சவாலை சமாளிக்க உதவுங்கள் கவர்ச்சிகரமான எலக்ட்ரானிக் உலகத்தின் அனுபவத்தைக் கிடைக்கச் செய்யுங்கள்.
"சிப்-சாப்" நீங்களே செய்யும் எலக்ட்ரானிக் கிட் மூலமாக எலக்ட்ரானிக்ஸை இல்லத்திற்கு கொண்டு வாருங்கள்.
நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் பாட்டரியால் நடத்தக் கூடியது.
அபாயமற்றது.
சுலபமாக புரிந்து கொள்ளக்கூடிய விளக்க உரையுடன் கூடியது.
மணிக்கணக்காக பேரின்பம்.
சால்டரிங் இல்லை.
கனெக்ஷனுக்கு "பேட்டென்டுடன்" கூடிய விசை.
Rs. 300/-
வரிகள், அனுப்பும் செலவு தனி.
எல்லா பிரசித்தமான புத்தகம் மற்றும் விளையாட்டு பொருள் கடைகளிலும் கிடைக்கும்.
CHIP-CHAP
EDUCATIONAL ELECTRONICS KIT
சிப்-சாப்
எஜுடெக்
33, சர்ச் தெரு, பெங்களூர்-1. போன்-578801
சிப்-சாப் 1988ம் ஆண்டின் தேசிய விருது பெற்றுள்ளது.

Registered No. TN/MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka



பாரிஸ் மிட்டாய்கள் மற்றும் பிஸ்கட்டுகள் அனைவரும் விரும்புவது